கரப்பந்தாட்டம்

VOLLEYBALL



எம். திருபாரட்ணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
8-11-1995
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளே...

1. விளையாட்டு அறிமுகம் ... 01
கரப்பந்தாட்டம்

2. கரப்பந்தாட்ட வரலாறு ... 03
இலங்கையில் கரப்பந்தாட்ட வளர்ச்சி
ஒலிம்பிக்கில் கரப்பந்தாட்ட வளர்ச்சி
பாடசாலைகளில் கரப்பந்தாட்ட வளர்ச்சி

3. கரப்பந்தாட்ட சட்ட விதிகள் ... 07

4. உத்தியோகத்தரின் கைச் சைகைகள் ... 54

5. கரப்பந்தாட்ட அடிப்படைத் திறன்கள் ... 67

6. புதிய விளையாட்டு வீரர்களும் பயிற்சியும் ... 85

7. போட்டிக்கென ஒரு குழுவைத் தயார் செய்தல் ... 89

8. அணிகட்கான சில ஆலோசனைகள் ... 92

9. நிரற்போட்டி ஒழுங்கமைப்பும் நடாத்தும் முறையும் ... 99

UNIVERSITY OF PERADENIYA
8-11-1995
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

469324

வொலிபோல்

Volleyball

ஆசிரியர்

மு. கிருபாரெட்ணம்

விரிவுரையாளர்

கொட்டக்கலை கல்வியியற் கல்லூரி

பத்தனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்பெயர் — வொலிபோல்

ஆக்கம் — மு. கிருபாரெட்ணம்

பதிப்புரிமை — ஆசிரியருக்கு

முகவரி — 130 கல்லூரி வீதி, திருமலை

முதற்பதிப்பு — 1993 செப்டெம்பர்
ஜெஸ்கொம் அச்சகம்
மட்டக்களப்பு.

அட்டைப்படம் — B. கிளேறியன்ஸ் மட்டக்களப்பு.

சித்திரம் — R. C. செல்வராஜா (ஆசிரியர்)
இந்துக் கல்லூரி, திருமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

469324

"முன்னறியும் தெய்வமடா அன்னை பிதா - அவர்
மொழிந்ததெல்லாம் நமக்கு வேதமடா"

என்
அன்புப்
பெற்றோரின்
நீங்காத நினைவுகட்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FOREWARD

It was with no little pleasure that I learned that my good friend M Kiruparetnam was publishing a book on "The games and Rules of Volleyball"

When I arrived in Sri Lanka, forty six (46) years ago, and while travelling from Colombo to Batticaloa. the first time, I was struck by the sight of Volleyball being played in almost every village along the way. The game, then, was not quite the one I had played as a boy and then a man and even as a priest.

About ten (10) years ago, the game underwent a radical change in Sri Lanka, with the interpritation of the single tap-rule, and in an emphasis on playing the ball, three or even four times in returning it after a serve.

This look will be a 'Vade Mecum' for all the devotees of the game and will further clarify the proper way to play this delightfull game.

Congratulation Mr. Kiruparetnam on your entry in to literary world. May God bless you.

Rev. Fr. H. J. Weber s. j
JESUIT ACADEMY
St. Michaels College,
Batticaloa.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FOREWARD

I have great pleasure in writing a foreward for the book on Volleyball written by Mr. M. Kiruparetnam, Lecturer Sri-pada College of Education. Volleyball in Sri lanka is played by all irrespective of age or sex. It is a healthy form of recreation for some and an important sports activity for the others.

This book serves both these groups, it gives in great detail the historical development, and the rules and regulations relating to this game. Hence this book should find a place in every school library and public library which has a Tamil Medium reading population.

I have known Kiruparetnam, both as a student and as a Colleague, He was a trainee under me at Palaly Teachers' College, and also helped me to organise Pre Service and In service Teacher Education programmes when I was Director of Education at the Ministry of Education. He was an outstanding sportsman whose interest and knowledge of Volleyball is limitless.

His expertise in the field of Volleyball, his practical experience in playing the game, coaching students and training the Physical Training Instructors has been used in writing this book. Hence this book is Interesting to the layman, of use to the teacher in schools and is a manual of instructions to the Volleyball Coach.

I wish him all success both in his career as a Lecturer in Physical Education and now in his new field as a writer of Sports and Games.

Dr. Ms. Keerthy Sironmany Rajaratnam
Director
Affiliated university, Trincomallee.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF PERADENIYA
8-11-1995
LIBRARY

APPRECIATION

This is the second book produced by yet another staff member from the Physics! Education section of the college. Let me congratulate 'KIRUBA' as he is known in the sperting field on his successful completion of his ambitious writing. The very idea of putting his ideas across to those interested is indeed remarkable. His work springs from, one might say, a cummulative experience he has had since he started his career as a physical Education teacher and later promoted as lecturer to the college of Education.

There is a blend of theory and Practice in this book, therefoe it is certainly a worthwhile persuit. There is no doult that his production would be of immense value to the sporting fons and to the students or teachers of Physical Education.

The success of his effort will be duly judged when the users attain better knowledge,, greater skills and more positive values and practices-thus achieving the objectives intended.

Any feat mingled with skilled performance committment and a sense of discipline is undoubtedly one of appreciable value

In the hands of a good learner this book should produce excellent results. I wish 'kiruba' continued successful attempts until the thing meditated upon, is identified with the person concerned.

"Awake arise, stop not" is, I hope what he is trying to aim at rather than. 'Thus far and no further'

May the Lord Almightly lead him to realise his carefully considered aspiration.s

President
Sri Pada College of Education
Patana.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8-11-1995

என்னுரை

ஓர் விளையாட்டின் அடிப்படைத் திறன்களை முழுமையாகவும் முறையாகவும் பயின்ற வீரர்களிடமிருந்தே சிறந்தவொரு ஆட்டத்தினையும் எதிர்பார்க்க முடியும். அந்த வகையிலே, அடிப்படைத் திறன்களை வளர்க்க உதவும் நூல்கள் வெளிவர வேண்டியது அத்தியாவசியமாயினும், தமிழில் விளையாட்டு நுட்பங்களை வெளிக்கொணரும் படைப்புகள் போதியளவு இல்லாத நிலை தொடர்கின்றது. இக்குறைபாடு நீண்ட நாட்களாக என்னை உறுத்தி வந்தது.

விளையாட்டுத்துறை விரிவுரையாளன் என்ற வகையில் அதற்கான நூல்களை வெளிப்படுத்துவது எனது பணியே என நண்பர்கள் சுட்டிக் காட்டியும் வந்துள்ளார்கள். எனது உறுத்தலும் நண்பர்களின் உந்துதலும் இந்நூலின் அவசியத்தை உணர்த்த, இறுதியில் இத்தகைய ஆக்க வேலையில் துணிந்து இறங்கலானேன்.

இன்றைய உலகின் பொழுதுபோக்கு அம்சங்கள் நிறைந்த போட்டி விளையாட்டுக்களுள் கரப்பந்தாட்டம் முன்னணியில் திகழ்கின்றது. இலங்கையின் தேசிய விளையாட்டுகளுள் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ள இது, பாடசாலைகளில் ஓர் கட்டாய விளையாட்டாகவும் ஆக்கப்பட்டுள்ளது. பாடசாலை மட்டத்தில் ஆண் பெண் இருபாலார் மத்தியில் மிகுந்த ஆர்வத்தையும் தூண்டியுள்ளது.

ஆண், பெண், சிறியோர், பெரியோர் என்ற பேதங்களின்றி ஆடப்பட்டு வரும் இவ்வாட்டம் பற்றிய சட்டதிட்டங்கள், திறன்கள் நுணுக்கங்கள், உத்திகள் என்பன பற்றிய விளக்கங்களை அடக்கிய இக்கை நூலானது விளையாட்டு பற்றிய அடிப்படை அறிவையும் ஆர்வத்தையும் அதிகரிக்கச் செய்யுமென நம்புகின்றேன். தொடர்ந்தும் இது போன்ற நூல்கள் வெளிவர அனைவரிடையேயும் விருப்பம் உருவாகுவதோடு ஒழுங்கமைக்கப்பட்ட விளையாட்டு ஆர்வமும் தூண்டப்பட்டால், இந்த நூலை வெளியிட்டதன் பெறுபேறு, சாதகமானதென நான் மகிழ்வேன் இந்நூல் பற்றிய கருத்துக்களையும் ஒத்துழைப்பையும் எதிர்பார்க்கும்.

மு. கிருபாரெட்ணம்

உடற்கல்வி விரிவுரையாளர்
ஸ்ரீபாத கல்வியியற் கல்லூரி
பத்தனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டு அறிமுகம்

இது அணிக்கு 6 பேர் கொண்ட, இரு குழுக்களிடையே ஆடப்படும் ஓர் குழு விளையாட்டாகும். ஆடுகளமானது மைதானத்தின் மத்தியில் கட்டப்படும் வலையின் மூலம் இரு சம பகுதிகளாகப் பிரிக்கப்படும். அணியின் முன்னணி மூவர் தாக்குதல் அணி வீரர்கள் எனவும், பின்னணி மூவர் பாதுகாப்பணி வீரர்கள் எனவும் அழைக்கப்படுவர். பின்னணி வலது பக்க வீரரால் பணித்தல் பிரதேசத்தினின்று வலைக்கு மேலால் பந்தைப் பணித்தலைத் தொடர்ந்து ஆட்டம் ஆரம்பமாகும். வலையின் மேலால் பந்தை எதிரணி நோக்கி அனுப்ப ஒரு அணிக்கு 3 சந்தர்ப்பங்கள் வழங்கப்படும். ஆயினும் ஒருவர் தொடர்ச்சியாக இரண்டாம் முறையும் ஆடுதல் தவறாகும். முழங்காலின் மேல் எப்பாகத்திலும் பட்டுத் தெறிக்கும் பந்து ஆடத்தகுந்த ஓர் பந்தாகக் கவனிக்கப்படும்.

பந்து, ஆடுகளத்தினுள் அல்லது வெளியில் நிலம்படல், வெளி வாரிப் பொருட்களில் படல், மற்றும் மத்தியஸ்தரால் ஊது குழல்(விசில்) மூலம் ஆட்டம் இடை நிறுத்தப்படல் போன்ற சந்தர்ப்பங்கள் தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் ஆட்டம் தொடர்ந்தும் நடைபெறும்.

ஓர் அணி 5:3 சுற்றுகளில் வெற்றி பெறல் வேண்டும். எதிரணியினரின் ஆகக் குறைந்த 2 புள்ளிகள் வித்தியாசத்தில் 15 புள்ளிகள் பெற்ற நிலையில் (15:13) ஓர் சுற்று முடிவடையும். இரு அணிகளும் 14:14 / 15:15 என்னும் சமமான புள்ளிகள் பெற்ற நிலையில் ஆட்டம் தொடர்ந்து நடைபெறும். ஆனால் இரு அணிகளும் 16:16 என்ற நிலையில் காணப்படின், முதலில் எவ்வணி 17வது புள்ளியினைப் பெறுகிறதோ, அவ்வணியே வெற்றி பெற்ற அணியாகக் கருதப்படும். 17 புள்ளிகட்கு மேல் ஆட்டம் நடைபெறமாட்டாது. இறுதி ஆட்டம் தவிர இறுதியானதும் 5வதுமான சுற்றின்போது பக்க மாற்றங்கள் (Side out) இன்றி புள்ளிகள் தொடர்ச்சியாக வழங்கப்படும். புள்ளியினைப்பெற்ற அணிக்கு பணிக்கும் சந்தர்ப்பமும் வழங்கப்படும். இவ்வாட்டத்தில் மட்டும் புள்ளிகளுக்கிடையில் கட்டுப்பாடு இன்றி ஆட்டம் 2 புள்ளிகள் வித்தியாசம் வரையில் நடத்தப்படும்.

பணித்தலைத் தொடர்ந்து பெறும் ஒவ்வொரு வெற்றிக்கும் ஒவ்வொரு புள்ளியும், பணிக்கும் அணி பிழைவிடும் சந்தர்ப்பங்களில் எதிரணிக்குப் பக்கமாற்றத்துடன் பணித்தலும் (Service) வழங்கப்படும். சுற்றுக்களிடையே, இளைப்பாறுதல், பிரதியீடு செய்தல் (Substitution) ஆலோசனை பெறல் போன்ற காரணங்கட்காக கேட்டும் பெறும் நேரம் (Time out) வழங்கப்படும். முழு ஆட்டத்திற்கும் மத்தியஸ்தரே முழுப் பொறுப்பாளியாவார். இவரது தீர்ப்பே இறுதியும் முடிவுமான தீர்ப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வொலிபோல்' (Volleyball)

''வொலிபோல்'' என அழைக்கப்படும் கரப்பந்தாட்டம் ஓர் குழு விளையாட்டாகும். இது ஓர் சிறந்த போட்டி விளையாட்டாகவும் பொழுதுபோக்கு விளையாட்டாகவும் இன்று உலக ரீதியாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. போட்டியிடும் வீரர்கட்கு மட்டுமன்றி பார்வையாளர்களுக்குக்கூட ஓர் பரபரப்பான ரசனைமிக்க ஆட்டமாகத் திகழ்கின்றது.

இவ்வாட்டத்தின் மூலம் எமது உடற்பலம் (Strength) வேகம், (Speed) தாங்குமியல்பு (Endurance) துவளுந்தன்மை (Agility) நெகிழுந் தன்மை (Flexibility) நரம்புத்தசை இசைவாக்கம் (Neuro-Muscular Co ordination) போன்ற உடற்தகமைகளையும் விருத்தி செய்து கொள்ளலாம். அத்துடன் ஓட்டம், பாய்தல், உடலை வளைத்தல், தசைகளை விரித்தல் சமநிலை போன்ற அடிப்படை உடலசைவுகளையும் விருத்தி செய்யும் ஓர் காரணியாகவும் அமைகின்றது. மேலும், நேர்மை, (Honesty) சீரான ஆட்டம் (Fair Play) சிறந்த விளையாட்டு வீரருக்குரிய பண்புகள் (Qualities of a good Sportsman) போன்ற பண்புகளையும் தெட்டத் தெளிவாக எடுத்துக்காட்டவும் இது உதவுகின்றது.

ஆண் பெண் பெரியோர் என்ற பேதமின்றி யாவருக்கும் பொருத்தமான இவ்வாட்டத்தில் ஏனைய பெருவிளையாட்டுக்களைப் போன்ற பாரிய சேதமோ, விபத்துகளோ ஏற்பட இடமேயில்லை, இவ்வாட்டத்திற்கென ஓர் சிறிதளவு மைதானமும், சொற்ப செலவினங்களுமே தேவைப்படும். நாள் பூராவும் இயந்திரங்களோடு இயந்திரங்களாக தொழிற்சாலைகளிலும் அலுவலகங்களிலும் உழைத்துக்களைத்து அலுத்துப்போயிருக்கும் உடலுக்கும் உள்ளத்திற்கும் உற்சாகமூட்டும் நோக்குடனேயே இவ்வாட்டம் ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் இவ்வாட்டம் பற்றி நாட்டுக்கு நாடு தற்போது காட்டிவரும் ஆர்வத்தையும் மேற்கொள்ளும் ஆராட்சிகளையும் பார்க்குமிடத்து உலகரீதியாக இது எத்துணை முக்கியத்துவம் பெற்றுள்ளது என்பதனையும் உணர முடிகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'வொலிபோல்' வரலாறு

அமெரிக்க நாட்டின் ''மசசூட்ஸ்'' (Massachusets) பிராந்தியத்தை சேர்ந்த 'ஹொலியோக்' (Holyoke) நகரில் இளைஞர் கிறிஸ்தவ சங்கத்தைச் சேர்ந்த (YMCA) உடற்கல்விப் பேராசிரியர் திரு. வில்லியம் ஜி. மோர்கன்' (William G. Morgan) என்பவரால் 1895ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இவரே இவ்வாட்டத்தின் தந்தையாவார். ஆரம்ப காலங்களில் 6 அடி 6 அங்குலம் உயரத்தில் இரு கம்பங்களை இரு புறங்களிலும் பதித்து கயிற்றை குறுக்காக இணைத்து, கூடைப் பந்தின் உள்ளுறையைப் பந்தாகப் பாவித்து ஆடி வந்தார்கள். (பந்தின் நிறை 21 அவு. சுற்றளவு 25'' — 27'' வரை) இதற்கென 50' நீளம் 25' அகலம் கொண்ட மைதானத்தைப் பாவித்தார்கள். இவ்வாட்டம் அப்போது 'மின்ரன் நெற்' (Mintone Net) எனப் பெயரிடப்பட்டிருந்தது. இவ்வாட்டத்திற்குரிய அடிப்படைச் சட்ட விதிகளை 1900ம் ஆண்டிலும் சர்வதேச கரப்பந்தாட்ட விதிகளை 1917ம் ஆண்டிலும் திரு. மோர்கன் அவர்களே வெளியிட்டார். 1896ல் ஸ்பிரிங் பீல்ட் உடற்கல்விக் கல்லூரியின் பேராசிரியரான (Dr. A. T. Halstead) டாக்டர் A. T. ஹல்ஸ்டட் என்பவரே இவ்வாட்டத்திற்கு வொலிபோல் எனப் பெயரிட்டார்.

கரப்பந்தாட்டத்தின் மாற்றங்கள்

1900ம்	ஆண்டு	புள்ளியிடும் முறை (Scoring Method) 21 புள்ளிகள்
1912ம்	ஆண்டு	சுழற்றி ஒழுங்கு முறை (Rotation)
1917ம்	ஆண்டு	வலையின் உயரம் (8') 15 புள்ளிகள் முறை
1918ம்	ஆண்டு	6 பேர் கொண்ட அணி
1920ம்	ஆண்டு	மைதான அளவுத்திட்டம் (60' — 30')
1922ம்	ஆண்டு	அணிக்குரிய 3 தொடுகை (3 Touches)
1924ம்	ஆண்டு	பெண்களுக்கான கரப்பந்தாட்ட விதிகள்
1928ம்	ஆண்டு	அமெரிக்க வொலிபோல் சம்மேளனம்

கரப்பந்தாட்ட வளர்ச்சிக் காலங்கள்

அமெரிக்காவைத் தொடர்ந்து பின்வரும் நாடுகள் இவ்வாட்டத்தில் பெரிதும் ஆர்வம் காட்டத் தொடங்கின.

1900ல்	இந்தோனேஷியா, கனடா
1905ல்	கியூபா
1910ல்	பிலிப்பைன்ஸ்
1914ல்	இங்கிலாந்து
1916ல்	இலங்கை
1919ல்	பிரான்சு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1921ல் செக்கஸ்லவாக்கியா
1923ல் ரஷ்யா
1938ல் இத்தாலி
1945ல் போர்த்துக்கல்
1946ல் பெல்ஜியம்

• ஸ்ரீலங்கா வெலிபோல் சம்மேளனத்தினால் வெளியிடப்பட்ட சர்வதேச வெலிபோல் சம்மேளன விதிகள் (ஆதாரம்)

1936ல் பேர்ளின் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிக்கென சமுகமளித்த நாடுகளின் அங்கீகாரத்தின் பேரில் இவ்வாட்டம் சர்வதேச அந்தஸ்தைப் பெறறது. இதன் பயனாக 1947ல் பிரான்சு நாட்டின் தலை நகராகிய பாரீஸ் நகரில் 1ம் சர்வதேச கரப்பந்தாட்டச் சங்கம் (Inter National Volleyball Association) ஒன்று அமைக்கப்பட்டது. 25 நாடுகள் அங்கம் வகித்த இந்த சங்கத்திற்கு பிரான்சு நாட்டைச் திரு. போல் லிபாலுட் (Paul Libaud)என்பவர் தலைவராக ஏற்றுக் கொள்ளப்பட்டார். இவர் தொடர்ந்து 1984 வரை அச்சங்கத்தின் தலைவராக சேவை புரிந்தார். 1984ன் பின்னர் மெக்சிக்கோ நகரைச் சேர்ந்த ''திரு. றூபன் கொஸ்கா'' (Ruban Coska) அவர்கள் இச் சங்கத்தின் தலைவராக கடமையாற்றினார். இன்று உலகின் 157 நாடுகட்கு மேற்பட்ட 160 மில்லியன்(16 கோடி) ஆண்களும் பெண்களும் இதில் அங்கம் வகிகித்து வருகின்றார்கள். இதனால் இக்கரப்பந்தாட்டம் உலகப் புகழ் பெற்ற ஓர் ஆட்டமாகத் திகழ்கின்றது.

1949ல் செக்கோஸ்லவாக்கியாவிலுள்ள ''பிறாக்'' (Prague) எனுமிடத்தில் முதலாவது வொலிபோல் உலக சுற்றுப் போட்டி நடைபெற்றது. 12 நாடுகள் இப்போட்டியில் கலந்து கொண்டன. 1952ல் இரண்டாவது சுற்றுப் போட்டி ''மொஸ்கோ'' நகரிலுள்ள ''டைனமோ'' விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. மேற்படி இரு போட்டிகளிலும் ரஷ்ய அணியே முதலிடத்தைப் பெற்றது. 1955ம் ஆண்டு மே மாதம் ''டோக்கியோ'' நகரில் நடைபெற்ற 1வது ஆசிய சுற்றுப்போட்டியில் இந்தியா, ஜப்பான் அணிகள் முறையே 1ம், 2ம், இடங்களைப் பெற்றன.

1949ல் ''பிறாக்'' நகரில் நடைபெற்ற பெண்களுக்கான ஐரோப்பிய சுற்றுப் போட்டியிலும் 1925ல் ''மொஸ்கோ''வில் நடைபெற்ற 1வது சர்வதேச பெண்களுக்கான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியிலும் ரஷ்ய பெண்களணியே வெற்றி பெற்றது. இன்று ஆண் பெண் என்ற பேதமின்றி பல வகையான நுட்பங்கள், ஆராட்சிகளுக்குட்பட்டு மிகவும் தீவிரமாக இவ்வாட்டம் முன்னேறி வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் "வொலிபோல்"

இளைஞர் கிறிஸ்தவ சங்கத்தைச் சேர்ந்த திரு. றொபேட் வோல்டர் கமக் (Robert Walter Cammack)என்பவரால் 1916ம் ஆண்டு இலங்கைக்கு அறிமுகம் செய்யப்பட்டது. கொழும்பிலுள்ள ''பிறய்ஸ் பார்க்'' எனுமிடத்திலே முதன் முதலாக ஓர் கண்காட்சி ஆட்டத் துடன் ஆரம்பித்து, கொழும்பு பயிற்சிக் கல்லூரி மற்றும் பிரபல கல் லூரிகள் சிலவற்றிலும் இவ்வாட்டம் புகுத்தப்பட்டது. இவரால் உரு வாக்கப்பட்ட சங்கங்களுள் ''சிற்றி வொலி போல் சங்கமும்'' (City Volleyball Association) ஒன்றாகும்.

1930ம் ஆண்டின் இலங்கை சிறிஸ்தவ சங்கத்தால் ''இலங்கை வொலிபோல் சங்கம்'' (Ceylon Volleyball Association) ஆரம்பிக்கப் பட்டது. 1941ல் 6 பேர் கொண்ட ஓர் வொலிபோல் சங்கம் (6 a-Side Volleyball Association) ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டது. 1951ல் ''ஸ்ரீ லங்கா வொலிபோல் சங்கம்'' (Sri Lanka Volleyball Association) அமைக்கப்பட்டது. 1978ல் ''வொலிபோல் பரிபாலன சபை'' (Board of Control for Volleyball) அமைக்கப்பட்ட போதிலும், இதன் முழுப்பொறுப்பும் ஸ்ரீ லங்கா வொலிபோல் சங்கத்திடமே மீண்டும் ஒப்படைக்கப்பட்டது. இதன் பின்னர் சர்வ தேச வொலிபோல் சம் மேளனம் (Federation of International Voilepboll) ஒன்றும் அமைக் கப்பட்டது. இச்சம்மேளனமே நாட்டின் சகல பாகங்களிலுமுள்ள வொலிபோல் ஆட்டங்களையும் மேற்பார்வை செய்து வருகின்றது.

ஒலிம்பிக்கில் வொலிபோல்

1957ம் ஆண்டு ''பல்கேரியா'' நாட்டின் ''சோப்பியா'' நகரில் நடைபெற்ற தேசிய ஒலிம்பிக் கமிடியின் (National Olympic Committee) கூட்டமென்றில் வொலிபோல் ஆட்டம் பற்றிய கூடிய விளக்கங் களை அளிக்கும் நோக்குடன் கண்காட்சி ஆட்டம் ஒன்று ஒழுங்கு செய்யப்பட்டது. ஒலிம்பிக் குழுவின் தலைவரான திரு. போல் லிபாலூட் ஆட்ட முடிவிலேயே இவ்வாட்டத்தை ஒலிம்பிக் ஆட்டத்தில் உத்தி யோக பூர்வமாக சேர்த்துக் கொள்வதற்கான உத்தரவாதத்தை அளித் தார். இம்முடிவு, அங்கு சமூகமளித்த ஏனைய நாடுகளால் ஏகமன தாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1960ல் முதன்முதலாக ஆண்களுக் கான வொலிபோல் ஆட்டம் ஒலிம்பிக்கில் சேர்த்துக் கொள்ளப்பட் டது. இதனைத் தொடர்ந்து 1964ல் நடைபெற்ற டோக்கியோ ஒலிம் பிக் போட்டியில் பெண்களுக்கான ஆட்டமும் சேர்த்துக் கொள்ளப் பட்டது. தற்போது இவ்வாட்டம் ஆண் பெண் என்ற பேதமின்றி இருபாலார்க்கும் ஒலிம்பிக் சட்டதிட்டத்திற்கமைய நடாத்தப்படுகின் றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைப் பாடசாலைகளில்
வொலிபோல்

இலங்கையில் தேசிய விளையாட்டுக்களில் வொலிபோல் ஆட்டமும் ஒன்றாகும். இவ்வாட்டம் 'ஸ்ரீலங்கா வோலிபோல் சம்மேளனத்தினால்' (Sri Lanka Volleyball Federation) நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. இது சர்வதேச வொலிபோல் சம்மேளனத்துடன் (Federation of International Volleyball) இணைக்கப்பட்டுள்ளது.
மேலும் இச்சம்மேளனம்

1. ஸ்ரீலங்கா மத்தியஸ்தர் சங்கம்
(Sri Lanka Referees Association)
2. ஸ்ரீலங்கா பயிற்றுவிப்பாளர் சங்கம்
(Sri Lanka Coaches Association) போன்றவை நிர்வகிக்கப்பட்டு வருகின்றது.

கல்வி உயர் கல்வி விளையாட்டுத்துறை அமைச்சுக்கள் (Ministry of Education, Higher Education & Sports) விளையாட்டு சம்பந்தமான முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொண்டுள்ளன. இவ்வமைச்சுக்கள் ஒன்றாக சேர்ந்து வருடாவருடம் பயிற்சி முகாம்களையும் பயிற்சி வகுப்புக்களையும் நடாத்தி வருவதால் இவ்விளையாட்டு கூடிய அபிவிருத்தியையும் புத்துணர்ச்சியையும் பெற்று விளங்குகின்றது. இவற்றுள்

1. அகில இலங்கைச் சுற்றுப்போட்டிகள்
(All Island open Tournament)
2. அகில இலங்கைப் பாடசாலைகட்கான சுற்றுப்போட்டிகள்
All Island Schools' Tournament என்பவை மிக முக்கியமானவையாகும். இரு தரப்பினருக்குமான 15,17 19 வயதின் கீழான ஆண் பெண் இரு தரப்பினருக்குமான போட்டிகள் நடாத்தப்பட்டு வருகின்றது. இதனைவிட பாடசாலைகளில் 19 வயதிற்குட்பட்ட மாணவர்களில் திறமைமிக்கவர்களை தெரிந்தெடுத்து விஷேட பயிற்சிகளும் பயிற்சி வகுப்புகளும் நடாத்தப்பட்டு வருகின்றன. 1993ன் புதிய சட்டத்தின்படி மாகாண மட்டத்தில் 1ம், 2ம், 3ம் இடங்களைப் பெற்ற அணிகள் நீங்கலாக திறமை மிக்கவர்களைத் தெரிந்தெடுத்து இன்னுமொரு அணியினை உருவாக்குதல் ஓர் விசேடமான நோக்கமாகும். இவற்றைவிட மேற்கூறிய அமைச்சுக்கள் வொலிபோல் சம்மேளனத்துடன் இணைந்து பாடசாலை சம்மேளனத்தின் மூலமாக 16, 18, 20 வயதினர்க்கான போட்டிகளை மாவட்ட ரீதியாக நடாத்தவும் திட்டமிடப்பட்டுள்ளன. இதற்குரிய மாணவர்களது வயது டிசம்பர் 31ம் திகதியன்று கணிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரப்பந்தாட்ட விதிகள்

விதி:	
01. ஆடுகளம்	(Playing Court)
02. வலையும் வலைக் கம்பங்களும்	(Net and poles)
03. பந்து	(Ball)
04. அணிகள்	(Teams)
05. விளையாட்டு வீரர்களின் உபகரணங்கள்	(Players' Equipment)
06. போட்டியாளர்களின் உரிமைகளும் பொறுப்புகளும்	(Rights and Responsibilities of the Participants)
07. நாணய சுழற்சியும், வலைக் கண்மையில் உடலைத் தயார்படுத்தலும்	(Toss up and warming up at the Net)
08. அணியின் வரிசை ஒழுங்குகளும், போட்டியாளர்களின் அமைவிடமும்	(Team line-up, location of Participants)
09. வீரர்களின் நிலைகளும், சுழற்சி ஒழுங்குகளும்	(Players' positions and rotation)
10. ஆட்டத் தடங்கல்கள்	(Game Interruptions)
11. வீரர்களின் பிரதியீடு	(Substitution of Players)
12. சுற்றுகளுக்கான இடைவேளைகளும், ஆடுதளத்தின் மாற்றங்களும்	(Intervals Between Sets and change of Courts)
13. ஆட்ட முடிவுகள்	(Game Results)
14. பணித்தல்	(Service)
15. பந்துடனா தொடுகை	(Ball Contact)
16. வலைக்கண்மையில் ஆடப்படும் பந்து	(Ball at the Net)
17. எதிரணி ஆடுகளம் ஆடுகளப் பிரதேசதினுள் ஊடுருவல்	(Penetration into the opponent's space and Court)
18. ஓங்கி அறைதல்	(Attack Hit)
19. தடுத்தாடல்	(Block)
20. தவறுகளும் தண்டனைகளும்	(Faults and Sanctions)
21. மஸ்தியஸ்தர் குழுக்கள் நடவடிக்மைககள் உத்தியோக பூர்வ கைச்சகைகள்	(Refereeing corps, Procedures & official hand Singals)
22. 1ம், 2ம் மத்தியஸ்தர்கள்	(First & Second Referees)
23. புள்ளிப் பதிவாளர்	(Scorer)
24. கோட்டுக் காவலர்கள்	(Linesmen)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதி 01 ஆடுகளம் (Playing Court)

1.1 பரிமாணங்கள் (Dimensions)

1.1.1 ஆடுகளமானது, 18மீற். நீளமும் 9மீற் அகலமும் கொண்ட ஓர் செவ்வகமாகும். இதனைச் சுற்றி ஆகக்குறைந்தது 3மீற் அளவினைக் கொண்ட சுயாதீன எல்லைப் பிரதேசமொன்றும் காணப்படும். இப்பிரதேசம், ஆடு களத்தினின்று 7மீற். உயரத்திற்கு எவ்வித தடைகளுமற்றதாகக் காணப்படல் வேண்டும்.

1.1.2 உத்தியோக பூர்வ, சர்வதேசப் போட்டிகளின் போது, இச் சுயாதின எல்லைப் பிரதேசங்கள், பக்கக் கோடுகளினின்று 5மீற். வரைக்கும், முடிவுக்கோடுகளினின்று 8மீற் வரைக்கும் நீட்டப்பட்டிருக்கும். அத்துடன், ஆடுகளத்தினின்று 12.5மீற் உயரத்திற்கு எதுவித தடைகளுமற்றதாகக் காணப்படும்.

1.2 ஆடுகளத்தின் மேற்பரப்பு (Playing Surface)

1.2.1 ஆடுகளம் சமமட்டமானதும், கிடையானது, சீரானதுமாகக் காணப்படல் வேண்டும்.

1.2.2 உத்தியோக பூர்வ சர்வதேசப் போட்டிகட்கு மட்டும், மரத்தினாலான அல்லது செயற்கையான மேற்பரப்புடைய(Synthetic Surface) ஆடுகளம் அனுமதிக்கப்படும். எந்தவொரு மேற்பரப்பும், சர்வதேச கரப்பந்தாட்ட சம்மேளனத்தினால் ஏற்கனவேயே அங்கீகரிக்கப்பட்டிருத்தல் வேண்டும். (FIVB)

1.2.3 அமைக்கப்படும் மேற்பரப்பானது, வீரர்கட்கு எதுவித காயங்களையும் ஏற்படுத்தக்கூடிய அபாயமிக்கதாக இருத்தலாகாது கரடுமுரடான ஈரலிப்பான வழுக்கும் தன்மையுள்ள(சீமெந்து மணல், புல்) மேற்பரபுகள் தடைசெய்யப்பட்டுள்ளன.

1.2.4 உள்ளக விளையாட்டரங்குகளின் ஆடுகள மேற்பரப்பானது, ஒரே நிறத்திலான பிரகாசமான, இளம் நிறத்தில் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். உத்தியோக பூர்வ சர்வதேச போட்டிகளின் போது எல்லைக் கோடுகள் வெள்ளை நிறத்தாலும் சுயாதீனப் பிரதேசங்கள் ((Free Zones) ஆடுதளம், போன்ற பிரதேசங்கள் வெவ்வேறு நிறங்களாலும் பிரித்துக் காட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

1.2.5 வெளியக விளையாட்டரங்குகள் யாவும் நீர் வழிந்தோடுவதற்காகச் சற்று சாய்வாக (1மீற்றருக்கு 5மி.மீற்) அமைக்கப்படலாம். திண்மமான பொருட்களினால் ஆக்கப்பட்ட தளக் கோடுகள் தடை செய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடுகளம் (Playing Court)



(படம் 1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதி 01 ஆடுகளம் (Playing Court)

1.1 பரிமாணங்கள் (Dimensions)

1.1.1 ஆடுகளமானது, 18மீற் நீளமும் 9மீற் அகலமும் கொண்ட ...

1.1.2 ...

1.2 ஆடுகளத்தின் மேற்பரப்பு (Playing Surface)

1.2.1 ...

1.2.2 ... (Synthetic Surface) ... (FIVB)

1.2.3 ...

1.2.4 ... (Free Zones) ...

1.2.5 ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1.3 தளக்கோடுகள் (Lines of the Playing Court)

1.3.1 எல்லாக் கோடுகளும் (5 செ.மீ. 2 அங்.) அகலமுள்ளவை. அவை ஆடுகளத்திலின்று வேறுபட்ட நிறங்களான இலகு நிறத்தினால் அடையாளம் காட்டப்படல் வேண்டும்.

1.3.2 எல்லைக் கோடுகள் (Boundary Lines)
இரு பக்கக் கோடுகளாலும், இரு முனைக் கோடுகளாலும், ஆடுகளம் எல்லைப்படுத்தப்பட்டுள்ளது. (18 x 9m கோடுகள் அடங்கலாக)

1.3.3 மத்திய கோடு (Central Line)
இம்மத்திய கோடானது ஆடுகளத்தை 9 x 9m அளவுள்ள இரு சம பகுதிகளாகப் பிரிக்கின்றது. வலையின் கீழ் நேராக இரு பக்கக் கோடுகள் வரையில் இக்கோடு நீட்டப்பட்டிருக்கும்.

1.4 ஆடுகளப் பிரதேசங்கள் (Zones of the playing court)

1.4.1 முன்னணிப் பிரதேசம் (Front Zone)
இது மத்திய கோட்டிலிருந்து 3m சமாந்தரமான இரு கற் கோடுகளால் எல்லைப்படுத்தப்பட்டிருக்கும்.

1.4.2 பரிமாற்றுக் கோடும் பிரதேசமும் (Service Line and Service Zone)
ஆடுகளத்தின் முனைக் கோட்டின் பின்புறம் [illegible] அமைந்திருக்கும். [illegible] முனைக்கோட்டுக்கு [illegible] 15 செ.மீ. நீளமுடைய இரு கோடுகளால் காணப்படும். இவ்விரு கோடுகளுக்கிடையே [illegible] இப் பிரதேசம் ஆடுகளத்தின் [illegible] அடங்கும் பிரதேசம் [illegible] நீட்டப்பட்டிருக்கும்.

1.4.3 பதிலாட்டக்காரர் பிரதேசம் (Substitution Zone)
முன்னணிப் பகுதியிலிருந்து [illegible] வரை [illegible] இப்பிரதேசம் [illegible]

1.5 வெப்பநிலை (Temperature)
ஆகக்குறைந்த 10°C (50°F) அளவிலும் குறைவான வெப்பநிலையில் ஆட்டங்கள் தடை செய்யப்பட்டுள்ளது. சர்வதேச போட்டிகளை [illegible] அரங்குகளில் இவ்வெப்பநிலை 16°க்கு [illegible] 25°Cக்குக் கூடாமலும் இருத்தல் அவசியம்.

1.6 ஒளியமைப்பு (Lighting)
சர்வதேச போட்டிகள் உள்ளரங்குகளில் நடைபெறும் சமயங்களில் விளையாட்டுப் போட்டிகளின் போது ஒளிச்சக்தி 1000-1500க்கு (Luxes) இடைப்பட்ட ஒளியமைப்பு அவசியம். இவ்வளவீடு மைதான மேற்பரப்பின் 1 மீற். உயரத்திலிருந்து அளவிடப்படும்.

UNIVERSITY OF PERADENIYA
8-11-1995
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடுகளப் பிரதேசங்கள் (Playing Zone;)

(படம் 2)



1.3 தளக்கோடுகள் (Lines of the Playing Court)

1.3.1 எல்லைக் கோடுகள் யாவும் (5 செ.மீ 2 அங்.) அகலமுள்ளவை அவை ஆடுகளத்தினின்று வேறுபட்ட பிரகாசமான இளம் நிறத்தினால் அடையாளம் காட்டப்படல் வேண்டும்.

1.3.2 எல்லைக் கோடுகள் (Boundary Lines)
இருபக்கக் கோடுகளாலும், இருமுடிவுக் கோடுகளாலும், ஆடுகளம் எல்லைப்படுத்தப்பட்டுள்ளது. (18 × 9m கோடுகள் அடங்கலாக)

1.3.3 மத்திய கோடு (Central Line)
இம்மத்திய கோடானது ஆடுகளத்தை 9 × 9m அளவுள்ள இரு சமகூறுகளாகப் பிரிக்கின்றது. வலையின் நேர்கீழாக இருபக்கக் கோடுகள் வரையில் இக்கோடு நீட்டப்பட்டிருக்கும்.

1.4. ஆடுகளப் பிரதேசங்கள் (Zones of the playing court)

1.4.1 முன்னணிப் பிரதேசம் (Front Zone)
இது மத்திய கோட்டினின்று 3m சமாந்தரமான இரு தாக்கற் கோடுகளால் எல்லைப்படுத்தப்பட்டிருக்கும்.

1.4.2 பணித்தல் எல்லைக் கோடுகளும் பிரதேசமும் (Service Line and the zone)
ஆடுகளத்தின் முடிவுக்கோட்டின் வலப்பக்க மூலையில் இது அமைந்திருக்கும். இம்மூலையினின்று 20 செ.மீ. தூரத்தில் முடிவுக்கோட்டுக்கு பின்னாகவும் செங்குத்தாகவும் 15செ. மீ. நீளமுடைய இரு கோடுகள் காணப்படும். இவ்விரு கோடுகளுக்கிடையே உள்ள தூரம் 3மீற். ஆகும். இதுவே பணித்தல் பிரதேசம் ஆகும். இவ்விரு கோடுகளும் பணித்தற் பிரதேசத்தினுள் அடங்கும். இப்பிரதேசம் சுயாதீன எல்லைப் பிரதேசம் வரை நீட்டப்பட்டிருக்கும்.

1.4.3 பதிலாட்ட எல்லைப்பிரதேசம் (Substitution Zone)
புள்ளிப் பதிலாளரது ஆசனம் வரை கற்பனையாக நீட்டப்பட்டிருக்கும் இரு தாக்கற் கோடுசளையும் இப்பிரதேசம் உள்ளடக்கியுள்ளது.

1.5 வெப்பநிலை (Temperature)
ஆகக்குறைந்த 10°c (50°f) அளவிற்குக் குறைவான ஒளியில் ஆடுகள் தடைசெய்யப்பட்டுள்ளது, சர்வதேச உள்ளக விளையாட்டு அரங்குகளில் இவ்வெப்பநிலை 16°c குறையாமலும் 25°cக்கு கூடாமலும் இடுத்தல் அவசியம்.

1.6 ஒளியமைப்பு (Lighting)
உள்ளக விளையாட்டரங்குகளில் நடைபெறும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளின் போதுலக்சஸ் 1000-1500க்கு (Luxes) இடைப்பட்ட ஒளியமைப்பு அவசியம். இவ்வளவீடு மைதான மேற்பரப்பின் 1 மீற். உயரத்தினின்று அளவிடப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதி 02 வலையும் வலைக்கம்பங்களும் (NET AND POLES)

2.1 வலை (NET)

மத்திய கோட்டின் அச்சிற்கு நிலைக்குத்தாக 9.50 மீற் நீளமும் 1 மீற் அகலமும் கொண்ட இவ்வலையானது 10 செ.மீற் அகலம் கொண்ட சதுரக் கண்ணிகளால் அமைக்கப்பட்டு ஆடுகளத்தை இரு சம கூறுகளாக்குகின்றது. 10 செ.மீற் அகலம் கொண்ட கன்வஸ் துணியொன்று 5 செ.மீற் அகலம் கொண்ட பட்டியாக மடிக்கப்பட்டு வலையின் மேற்பக்கமாக முழு நீளத்திற்கும் தைக்கப்பட்டிருக்கும். இப்பட்டியினூடாக ஓர் வளையக் கூடிய கம்பி ஒன்று நுழைக்கப்பட்டிருப்பதால் வலையின் மேற்பக்கம் தொய்வுகளின்றி இறுக்கமாக காணப்படும். வலையின் கீழ்ப் பாகத்தில் வலைக்கண்ணிகளுக்கூடாக வலிமை மிக்க கயிறு ஒன்று நுழைக்கப்படுவதனால் கீழ்ப்பாகமும் தொய்வுகளின்றி இரு பக்கங்களிலும் இறுக்கமாகக் கட்டப்பட உதவுகின்றது.

2.2 பக்க அடையாளங்கள் (SIDE BANDS)

மத்திய கோடும் பக்கக் கோடுகளும் சந்திக்கும் இரு பக்கங்களினதும் செங்குத்தாக, வலையின் இரு புறங்களிலும் ஒவ்வொன்றும் 5.08 மீற் அகலமும் 1 மீற் நீளமும் கொண்ட இரு வெள்ளை நிறப் பட்டிகள் தைக்கப்பட்டிருக்கும். பட்டிகள் என அழைக்கப்படும் பக்க அடையாளங்களாகும் வலையின் ஒரு பகுதியாகவே கணிக்கப்படும்.

2.3 அன்ரனாக்கள் (ANTENNAS)

கண்ணாடி இழையிலான (Fiber Glass) அல்லது அதனை ஒத்த பொருளிலான வளையக்கூடிய தடிகளையே 'அன்ரனா' என்போம். இதன் நீளம் = 1.80 மீற் விட்டம் = 10 மில். மீற்றர் இவ்வன்ரானாக்கள் ஒவ்வொரு 10செ.மீற் தூரத்தில் சிவப்பு, வெள்ளை என்ற விகிதத்தில் நிறம் தீட்டப்பட்டிருக்கும். பக்கக் கோடுகளுக்கு நிலைக்குத்தாகத் தைக்கப்பட்டுள்ள இரு பக்க அடையாளங்களின் வெளியோரங்களில், வலையின் மேலால் 0.80மீற் (80செ.மீ) நீண்டு கொண்டிருக்கும் வண்ணம் வலையின் இரு பக்கங்களின் எதிர் எதிர் புறங்களில் கட்டப்பட்டிருக்கும். இவ்வன்ரனாக்களும் வலையின் பகுதிகளாகவே கணிக்கப்படும். (படம் 4) பந்து வலையின் மேலாக செலுத்தப்பட வேண்டிய எல்லைகளை இவை வரையறுத்துக் காட்டக் கூடியவையாக அமைகின்றது.

2.4. வலையின் உயரம் (HEIGHT OF THE NET)

2.4.1 ஆண் – 2.43 மீற்றர் (7' 11⅝'')
பெண் – 2.24 மீற்றர் (7' 4⅛'')

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியஸ்தர்களின் உத்தியோகபூர்வ நிலைகள் (Rule 22, 23, 24)



(படம் 3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2.1 வலை (NET)

மத்திய கோட்டின் அச்சிற்கு நிலைக்குத்தாக 9.50 மீற்றர் நீளமும் 1 மீற்றர் அகலமும் கொண்ட இவ்வலையானது 10 செ.மீ. அகலமும் கொண்ட சதுரக் கண்ணிகளால் அமைக்கப்பட்டு [illegible] இரு அருகுகளாக்குகின்றது. 10 செ.மீ. அகலம் கொண்ட [illegible] 5 செ.மீ. அகலம் கொண்ட [illegible] [illegible] வலையின் மேற்பக்கமாக [illegible] தைக்கப்பட்டிருக்கும். இப்பட்டிகளுடாக [illegible] கம்பி ஒன்று நுழைக்கப்பட்டிருப்பதால் வலையின் மேற்பக்கம் தொய்வின்றி இறுக்கமாக காணப்படும். வலையின் கீழ்ப் பாகத்தில் வலைக்கண்ணிகளுக்கூடாக வளையக்கூடிய கயிறு ஒன்று நுழைக்கப்படுவதனால் இப்பாகமும் தொய்வின்றி இரு பக்கங்களிலும் இறுக்கமாகக் கட்டப்பட உதவுகின்றது.

2.2 பக்க அடையாளங்கள் (SIDE BANDS)

மத்திய கோட்டின் பக்கக் கோடுகளைச் சந்திக்கும் இரு பக்கங்களிலும் [illegible] வலையின் இரு புறங்களிலும் [illegible] 5.0 செ.மீ. அகலமும் 1 மீற்றர் நீளமும் கொண்ட இரு வெள்ளை நிறப் பட்டிகள் அசைக்கப்படாதிருக்கும். பட்டிகள் [illegible] பக்க அடையாளங்களாகும். வலையின் ஒரு பகுதியாகவே கணிக்கப்படும்.

2.3 அன்ரனாக்கள் (ANTENNAS)

கண்ணாடி இழையிலான (Fiber Glass) அல்லது அதனை ஒத்த பொருளிலான வளையக்கூடிய குழல்களே அன்ரனாக்களாகும். இதன் நீளம் = 1.80 மீற்றர் விட்டம் = 10 மி.மீ. மற்றும் இவ்வன்ரனாக்கள் ஒவ்வொரு 10 செ.மீ. தூரத்திலும் சிவப்பு, வெள்ளை என்ற நிறத்தில் நிறம் தீட்டப்பட்டிருக்கும். பக்கக் கோடுகளுக்கு நிலைக்குத்தாக [illegible] இரு பக்க அடையாளங்களின் வெளிப்புறங்களில் வலையின் மேலால் 80 செ.மீ. (80 செ.மீ) நீண்டு கொண்டிருக்கும் வகையில் வலையின் இரு பக்கங்களிலும் எதிர் எதிர் புறங்களில் கட்டப்பட்டிருக்கும். இவ்வன்ரனாக்கள் வலையின் ஒரு பகுதியாகவே கணிக்கப்படும். (படம் 4) பந்து வலையின் மேலாக [illegible] செல்லும் [illegible] எல்லைகளை இவை வரையறுக்கின்றது.

2.4 வலையின் உயரம் (HEIGHT OF THE NET)

2.4.1 ஆண் – 2.43 மீற்றர்

பெண் – 2.24 மீற்றர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[illegible]

(Adjustable) [illegible]

[illegible]

மேலதிக உபகரணங்கள் (Additional Equipment)

மேலதிக உபகரணங்கள் [illegible] (Fivb)

படம் - 03 பந்து (Ball)

சிறப்பியல்புகள் (Characteristics)

[illegible]

நிறம்	ஒரே சீரான இளம் நிறம்
சுற்றளவு	65 செ. மீ. - 67 செ. மீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலையும் வலைக்கம்பங்களும்
(Net and Poles)

(படம் 4)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3.4.2 ஆடுகளத்தின் மத்தியிலிருந்து இவ்வுயரம் அளவுகோல் ஒன்றினால் அளக்கப்படும். பக்க அடையாளங்களின் இரு பக்கங்களிலிருந்தும் அளக்கையில் கூட்டி குறிப்பிட்ட இவ்வுயரமே காணப்பட வேண்டும். ஆயினும் மேற் கூறப்பட்ட விதிகட்கமைய உள்ள இவ்வுயரம் பக்க அடையாளங்களிலிருந்து அளக்கையில் ஆகக் கூடியது 2செ.மீற் உயரத்திற்குக் கூடலாகாது.

** இலங்கைப் பாடசாலை மட்டத்தில்:

	ஆண்	பெண்
19 வயது	7' $11\frac{5}{8}$"	7' $4\frac{1}{8}$"
17 வயது	7' 10"	7' 2"
15 வயது	7' 6"	7' 0"

3.5 (வலைக்) கம்பங்கள் (Poles)

3.5.1 வலைக்கு ஆதரவாக பக்கங்கட்கு ஒன்றாக நிலத்திலிருந்து 2.55மீற். உயரமுடையதாகவும், உருளை வடிவுடனும், கரடு முரடற்ற வழுவழுப்பு தன்மையுடனும் இது காணப்படும். நாம் விரும்பிய வண்ணம் அசைத்துக் கொள்ளக் கூடிய (Adjustable) கம்பங்கள் விரும்பத்தக்கது.

3.5.2 கம்பங்கள் ஒவ்வொரு பக்கக்கோடுகளிலிருந்து 0.50 – 1 மீற்றர் தூரத்தில் இறுக்கமாகத் தரையில் பதிக்கப்பட்டிருத்தல் வேண்டும். கம்பத்தை கம்பியினால் இழுத்துக் கட்டி நிலத்தில் பதித்தல் தடைசெய்யப்பட்டுள்ளது. இது தவிர ஆபத்து விளைவிக்கக் கூடிய வேறு ஏற்படுகளையும் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

3.6 மேலதிக உபகரணங்கள் (Additional Equipment)

மேலதிக உபகரணங்கள் யாவும் சர்வதேச கரப்பந்தாட்டச் சம்மேளனத்தின் விதிகட்குட்பட்டதாயமைந்திருத்தல் வேண்டும். (Fivb)

விதி - 03 பந்து (BALL)

3.1 சிறப்பியல்புகள் (Characteristics)

கோளவடிவான, ஈய்ந்து கொடுக்கும் தன்மையுள்ள தோலினாலான மேலுறையுடனும் றப்பர் அல்லது அதனையொத்த பொருளினாலான உள்ளுறையுடனும் காணப்படும்.

நிறம்	ஒரே சீரான இளம் நிறம்
சுற்றளவு	65 செ. மீற். - 67 செ. மீற்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறை 260 கிறாம் - 280 கிறாம்
உள்ளமுக்கம் 0.40 கிறாம் - 0.45 கி.கிறாம்/cm²

3.2 பந்தின் சீரான தன்மை (Uniformity of Balls)
போட்டிகளில் பயன்படுத்தப்படும் சகல சந்துகளும் விதி 3.1ல் குறிப்பிடப்பட்ட சிறப்பியல்புளை கொண்டிருத்தல் அவசியம் சர்வதேசப் போட்டிகளின் போது சர்வ தேச கரப்பந்தாட்ட சம்மேளனத்தினால் அங்கீகாரம் பெறப்பட்ட பந்துகளே பாவிக்கப்படல் வேண்டும்.

3.3 மூன்று பந்துகளைப் பாவித்தல் (Use of Three Balls)
உத்தியோக பூர்வமான சர்வ தேசப் போட்டிகளின் போது 3 பந்துகள் பாவனையில் ஈடுபடுத்தப்படும். இவ்வேளையில் பந்தெடுத்துக் கொடுக்கும் உதவியாளர் அறுவரில் நால்வர் சுயாதீன எல்லைப் பிரதேச மூலைகட்கு ஒருவர் வீதமும் மீதமிருவர் இரு மத்தியஸ்தர்களின் பின்புறமாகவும் நிலை கொண்டிருப்பர்.

போட்டியாளர்களின் உரிமையும் கடமையும்
(Rights and Responsibilities of the Participants)

விதி 04 அணிகள் (Teams)

4.1 அணியின் தொகுப்பும் பதிவும்
(Composition and Registration)

4.1.1. அணியில் 12 விளையாட்டு வீரர்கள், ஒரு பயிற்றுவிப்பாளர் (Coach), ஒரு உதவிப்பயிற்றுவிப்பாளர் (Asst. Coach), வைத்தியர்(Doctor) ஒருவர், செய்முறைப்பயிற்றுவிப்பாளர்(Trainer) ஒருவர் ஆகியோர் அடங்குவர். சர்வதேச போட்டிக்கு வைத்திய உதவியாளராகச் செல்பவர், சர்வதேச கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் அங்கீகாரத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

4.1.2, புள்ளிப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட பெயர்களையுடைய வீரர்களே போட்டியில் பங்கு பற்ற அனுமதிக்கப்படுவர்.

4.1.3. அணித்தலைவரும் பயிற்றுவிப்பாளரும் புள்ளிப் பதிவேட்டின் ஒப்பமிட்ட பின்னர், பதிவு செய்யப்பட்ட வீரர்களின் பெயர்களின் பெயர்களில் எதுவித மாற்றமும் செய்யப்படலாகாது.

4.2, அணித்தலைவர் நியமனம் (Appointment of Captain)

4.2.1. புள்ளிப் பதிவேட்டில் பதியப்பட்ட பெயர்களையுடைய வீரர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுள் எவரேனும் ஒருவர் அணித்தலைவராக நியமிக்கப்படுவார்

4.2.2. அணித்தலைவர் ஒருவர் தனது மேலாடை நிறத்திலிருந்து சற்று வேறுபட்ட நிறத்தில் 8செ.மீற்றர் × 2செ.மீற்றர் அளவினைக் கொண்ட ரிப்பன் (Ribbon) அல்லது பட்டியைத் (Strip) தனது இடது மார்பின் கீழ் அணிவதன் மூலம் அடையாளம் காணப் படுவர்.

4.2.3. அணித்தலைவரொருவர் பிரதியீடு செய்யப்பட்டு மைதானத்தை விட்டு வெளியேறுமிடத்து அணித்தலைவரினாலோ, அல்லது பயிறுவிப்பாளரினாலோ இன்னொரு வீரர் ஆட்டத்தின் தலைவராக நியமிக்கப்படுவார்.

விதி 05 விளையாட்டு வீரர்களின் உபகரணங்கள் (Players Equipment)

5.1. உபகரணங்கள் (Equipment)

5.1.1. மேலாடை (Jersey) அரைக்காற்சட்டை, (Shorts) விளையாட்டுக்குரிய ஒரு சோடிச் சப்பாத்துக்களைக் கொண்டதாக இருக்கும்.

5.1.2. மேலாடை, கால்சட்டை என்பன சீரானதும், துப்புரவானதும், ஒரே நிறத்திலானதுமாகக் காணப்படல் வேண்டும்.

5.1.3. சப்பாத்துக்கள் குதியற்றனவாகவும், அறப்பர் அல்லது தோலினாலாக்கப்பட்டவையாகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் பாரமற்றதாகவும், வளைந்து கொடுக்கக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

5.1.4 மேலாடையில் 1முதல் 13 வரையிலான இலக்கங்கள் இடப்படலாம். எனினும் இலக்கங்கள் 1 முதல் 12 வரையில் அமைதல் விரும்பத்தக்கது. இவ்விலக்கங்கள், வீரர்களது மார்பினதும். முதுகினதும், மத்தியில் காணப்படல் பொருத்தமானதாகும்,

1.5.5 மார்பில் அணியப்படும் இலக்கங்கள் 10 செ.மீ. உயரமுடையதாகவும், முதுகில் அணியப்படும் இலக்கங்கள் 15 செ.மீ. உயரமுடையதாகவும் இருப்பதுடன் தமது மேலாடை நிறத்தினின்றும் வேறுபட்ட நிறத்திலும் அமைந்திருத்தல் வேண்டும் இலக்கங்களை அமைக்கப்பயன்படுத்தப்படும் பட்டி 2 செ.மீ. அகலமுடையதாகவும்.

5.2 அங்கீகாரம் பெற்ற மாற்றங்கள் (Authorized Changes)

5.2.1 போட்டியில் கலந்து கொள்ளும் இரு அணிகள், ஒரே நிற மேலாடைகளுடன் சமூகமளித்திருக்கும் சந்தர்ப்பங்களில், உள்

UNIVERSITY OF PERADENIYA
8-III-1995
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞரைச் சேர்ந்த அணியே தமது மேலாடைகளை மாற்ற வேண்டி ஏற்படும். இரு அணிகளுக்குமே அந்நியமான அரங்கில் நடைபெறும் போட்டியின் போது, சீருடை பற்றிய இப் பிரச்சனை தோன்றுமாயின் புள்ளிப் பதிவேட்டின் வரிசையில் முதன் முதலில் பதியப்பட்ட அணியே தனது மேலாடைகளை மாற்ற வேண்டி ஏற்படும்.

5.2.2 1ம் மத்தியஸ்தர் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட வீரர்கட்கு பின்வரும் அங்கீகாரங்களை வழங்கலாம்.

அ) வெறும் கால்களுடன் விளையாடுதல்.

ஆ) ஒரு சுற்றின் முடிவிலோ, பதிலாட்டக்காரரை மாற்றும் இடைவேளையிலோ தமது ஈரமான மேடைகளை மாற்றுதல் (ஆனால் மாற்றப்படும் மேடைகள் ஈரமானவைப் போன்ற அதே இலக்கங்கள், நிறம் என்பவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்) (5.1.2, 5–5.1)

5.2.3 குளிர் காலங்களின்போது முறையாக இலக்கமிடப்பட்ட அதே நிறத்தை உடைய பயிற்சிக்குரிய ஆடைகளுடன் (Training Suits விளையாட 1ம் மத்தியஸ்தரால் அனுமதி வழங்கப்படும். விதி (5.1.4, 5.1.5)

5.3 தடைசெய்யப்பட்ட அணிகலன்களும், சீருடைகளும் (Forbidden Objects and Uniforms)

5.3.1 காயங்களை ஏற்படுத்தக்கூடிய ஆபரணங்கள், ஊசிகள், கைச் சங்கிலிகள் போன்றவற்றை அணிதல் தடை செய்யப்பட்டுள்ளது.

5.3.2 மூக்கு கண்ணாடி அணிதல் அத்தியாவசியமான ஒருவர், அதனால் ஏற்படும் ஊறுகட்கும் அவரே பொறுப்பாளியாவார்.

5.3.3 முறையான இலக்கங்கள் அற்ற (விதி 5.1.4, 5.1.5) வித்தியாசமான நிறத்திலான மேலாடைகளை அணிதல் தடை செய்யப்பட்டுள்ளது.

விதி 06 போட்டியாளரின் உரிமைகளும் பொறுப்புக்களும்

(Rights and Responsibilities of the Participants)

6.1 அடிப்படைப் பொறுப்புகள் (Basic Responsibilities)

6.1.1 பங்கு பற்றும் சகல போட்டியாளர்களுக்கும், வொலிபோல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆட்டம் பற்றிய சகல விதிகளையும் தெரிந்திருத்தலுடன் அவற்றுக்கமைய நடத்தலும் வேண்டும்.

6.1.2 விளையாட்டு வீரனுக்குரிய தன்மையுடன் (Sportsmanship) எவ்வித வாக்குவாதமுமின்றி மத்தியஸ்தரின் முடிவை ஏற்றுக் கொள்ளல் வேண்டும். சந்தேகங்கள் தோன்றுமிடத்து அணித் தலைவர் ஊடாகவே மேலதிக விளக்கங்களை மத்தியஸ்தரிடம் கேட்டுக் கொள்ளவும் வேண்டும்.

6.1.3 பங்கு பற்றும் வீரர்கள் மத்தியஸ்தர்களுக்கு காட்டும் அதே மதிப்பும் மரியாதையும் ஏனைய உத்தியோகஸ்தர்கள், எதிரணியினர், தமதணியினர், பார்வையாளர்கள் ஆகியோர் மட்டிலும் காட்டப்படல் வேண்டும்.

6.1.4 அணியினது நடவடிக்கைகளும் மனப்பாங்குகளும், மத்தியஸ்தரின் தீர்ப்பில் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையிலோ அல்லது தமதணியினரின் குற்றம் குறைகளை மூடிமறைத்தலிலோ ஈடுபடாத வகையில் அமைதல் வேண்டும்.

6.1.5 ஆட்டத்தின் போக்கை இழுபடக் கூடிய வகையிலோ அல்லது வேண்டுமென்றே ஆட்டத்தைத் தாமதிக்கும் செயலிலோ, எண்ணத்திலோ ஈடுபடுவதை போட்டியாளர்கள் தவிர்த்துக் கொள்ளல் வேண்டும்.

6.1.6 தத்தமது அணிகளின் ஒழுக்க நடவடிக்கைகளுக்கு அந்தந்த அணியின் தலைவர்களும், பயிற்றுவிப்பாளர்களுமே முழுப் பொறுப்பாளிகளாவர்.

6.1.7 ஆட்ட நேரத்தின் போது வீரர்கள் தம்மிடையே உரையாடுவதற்கு அனுமதியுண்டு. ஆனால் ஆடுகளத்திற்கு வெளியே நிற்கும் வீரர்கள் எவரேனும் ஆட்டத்திலீடுபட்டிருக்கும் வீரர்கட்கு எதுவித அறிவுறுத்தல்களையும் வழங்க முடியாது

6.1.8 மத்தியஸ்தரின் தீர்ப்புக்கெதிராக வீரர்கள் ஆட்டவேளையில் போது விவாதத்திலீடுபடல், ஆட்சேபித்தல், அல்லது மேலதிக விளக்கங்களைக் கோருதல் முடியாது.

6.2 அணித் தலைவரது உரிமைகளும், பொறுப்புகளும் (Rights ane Responsibilitities of the team Captain)

6.2.1 போட்டி ஆரம்பமாகுமுன் இவர்

(அ) புள்ளிப் பதிவேட்டில் கையொப்பமிடுவார்.

(ஆ) நாணய சுழற்சியில் தனதணியைப் பிரதிநிதிப்படுத்துவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6.2.2 ஆட்டம் நடைபெறும் போது

ஆடுகளத்தினுள் இவர் இருக்கும் வேளையில் இவரே ஆட்டத்தின் தலைவராயும் கடமையாற்றுவார். ஆட்டம் இடை நிறுத்தப்படும் வேளையில் மத்தியஸ்தருடன் பேச இவர் அனுமதிக்கப்படுவார்.

அ) தனக்கோ, தனதணியினருக்கோ எழும் பிரச்சனைகளையோ அல்லது அது தொடர்பான சட்ட விளக்கங்களையோ ஆட்டத்துக்குப் பொறுப்பான மத்தியஸ்தரிடம் கேட்டறியும் உரிமையும் இவருக்குண்டு. இது பற்றிய மத்தியஸ்தரின் விளக்கங்கள் திருப்திகரமாக இல்லாதவிடத்துத் தனது ஆட்சேபனையைத் தெரிவிப்பதுடன், ஆட்ட முடிவில் அச்சட்ட பூர்வமான அட்சேபனையைப் புள்ளி பதிவேட்டில் பதியவும் வேண்டும். விதி 23.3.3(இ)

ஆ) பின்வரும் விடயம் சம்பந்தமாக மத்தியஸ்தரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளல்.

1. சீருடைகளையோ உபகரணங்களையோ மாற்றுதல்.
2. எதிர் வீரர்களுக்குரிய உரிய நிலைகளைப் பரிசிலனை செய்தல்.
3. ஆடுகளத்தின் மேற்பரப்பு, வலை, பந்து என்பன பற்றிப் பரிசிலனை செய்யும்படி 1ம் மத்தியஸ்தரிடம் கேட்டல்.

இ) ஆட்டம் நடைபெறும் வேளைகளில் சட்டபூர்வமான இடைநிறுத்தத்துக்கான அமைதியைப் பெறல்.
(நேர இடைவேளை, பிரதியீடு)

6.2.3 ஆட்ட முடிவின் போது

அ) மத்தியஸ்தர்களுக்கு நன்றி கூறுவதோடு ஆட்ட முடிவைப் புள்ளிப் பதிவேட்டில் உறுதிபடுத்தும் வகையில் தனது கையொப்பத்தை இடல்.

ஆ) 1ம் மத்தியஸ்தரிடம் ஏற்கனவே ஏதும் அட்சேபனைகள் தெரிவித்திருப்பின் அவற்றையும் புள்ளிப் பதிவேட்டில் பதிந்து உறுதிப்படுத்தல் (விதி 6.2.2 அ.)

6.3 பயிற்றுவிப்பாளரின் பொறுப்புகள்
(Responsibilities of the Coach)

6.3.1 ஆட்டத் தொடக்கத்தின் முன்னரே, தமதணியினரின் பெயர்கள், இலக்கங்கள் என்பன ஒழுங்காகவும் பிழையின்றியும் பதியப்பட்டுள்ளதா என சரி பார்த்துக் கையொப்பமிடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6.3.2 ஒவ்வொரு சுற்றின் தொடக்கத்திலும் புள்ளிப் பதிவாளரிடம் அல்லது 2ம் மத்தியஸ்தரிடம் தமதணி வீரர்களின் சுழற்சி ஒழுங்கு வரிசையை (Rotation) முழுமையாகப் பூரணப்படுத்திக் கொடுத்தல்.

6.3.3 ஆட்டம் நடைபெறும் வேளையில் புள்ளிப் பதிவாளருக்கு எதிரில் அவருக்குரிய இருக்கையில் (Bench) இருத்தல் (படம் 2)

6.3.4 ஆட்டத்தின் முன்பாக, தமதணியினரை ஆடுகளத்தினுள்ளே உடலைத் தயார்படுத்தும் (Warming up) பயிற்சியில் ஈடுபடும் படி பணித்தல் போட்டி நடைபெறும் வேளையில் தமது இருக்கையில் இருந்தவாறே பதிலாட்டக்காரர்களைப் பயிற்சியில் ஈடுபடுத்துவதோடு, மைதானத்துள் ஆட்டத்தில் ஈடுபட்டுள்ள வீரர்கட்கும் ஆலோசனை வழங்கலாம். (ஏனையவர்கட்கு எதுவித தடங்கலோ ஆட்டத்திற்கு தாமதமோ ஏற்படா வகையில்)

6.4 உதவிப் பயிற்றுவிப்பாளரின் பொறுப்புகள் (Responsibilites of the Assistant Coach)

6.4.1 இவர் தமதணியினருடன் தமக்குரிய இருக்கையில் (Bench) அமர்ந்திருப்பார். ஆனால் இவருக்கு எவ்வித பொறுப்புக்களும் கிடையாது.

6.4.2 பிரதம பயிற்றுவிப்பாளர் தமதணியைவிட்டு வெளியே செல்ல வேண்டிய சந்தர்ப்பங்களின்போது, அணித்தலைவரின் வேண்டுகோளின்படி 1ம் மத்தியஸ்தரின் அனுமதியுடன் இவர் 1ம் பயிற்றுவிப்பாளரின் பொறுப்புக்களை மேற்கொள்வார்.

6.5 பந்து பற்றுவோரின் நிலைகள் (Position of Participants)

6.5.1 சுயாதீன எல்லைப் பிரதேசங்களுக்கு வெளிப்புறமாகவும், புள்ளிப் பதிவாளரின் மேசைக்கு இரு புறத்திலுமாக இவர்கட்குரிய வாங்குகள் அமைந்திருக்கும்.

6.5.2 போட்டியில் ஈடுபடாத ஏனைய போட்டியாளர்கள் தமக்குரிய இருக்கைகளிலோ, அல்லது உடலைத் தயார்படுத்தும் பிரதேசங்களிலோ இருத்தல் வேண்டும். பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் ஏனைய அங்கத்தவர்களும் இருக்கையில் அமர்ந்திருத்தல் வேண்டும்.

6.5.3 அணியில் இடம் பெற்ற அங்கத்தவர்கள் மட்டுமே மேற்படி இருக்கையில் அமரவோ உடலைத் தயார்படுத்தும் பிரதேசத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் பயிற்சியில் ஈடுபடவோ அனுமதிக்கப்படுவார்கள். (விதி 4.1.1)

6.5.4 ஆட்டத்திலீடுபடாத ஏனைய வீரர்கள் ஆட்டம் நடைபெறும் வேளைகளில் கூட பந்தின் உதவியின்றி உடலைத் தயார்படுத்தும் அப்பியாசங்களில் ஈடுபடலாம். சர்வதேச போட்டிகளின் போது இவ்வுடலைத் தயார்படுத்தும் பிரதேசமானது, வாங்கு இருக்கும் திசைகளின் மூலையிலுள்ள சுயாதீன எல்லைப் பிரதேசங்களுக்கு வெளியே 3மீற். × 3மீற். அளவுள்ள சதுரமாக வரையப்பட்டிருக்கும்.

6.5.5 சுற்று ஒன்று நடைபெற்று முடிவடைந்து அடுத்த சுற்று ஆரம்பிக்கவிருக்கும் இடைவேளைகளின் போது வீரர்கள் பந்துடன் உடலை தயார்சடுத்தும் பிரதேசங்களில் பயிற்சி செய்யலாம்

போட்டிக்கான ஆயத்தமும் விளையாட்டுக்கான செயற்பாடுகளும்
(Preparation and Development of the Match)

விதி 07 நாணய சுழற்சியும் வலைக்கண்மையில் உடலைத் தயார்படுத்தலும் (Toss up and Warming up at the Net)

7.1 நாணய சுழற்சி (Toss up)

7.1.1 ஆடுகளத்தினுள் பிரவேசிக்கு முன்பதாக 1ம் மத்தியஸ்தர் இரு அணித்தலைவர்களதும் முன்னிலையில் நாணய சுழற்சி ஒன்றினை மேற்கொள்வர். இச்சுழற்சியில் வெற்றி பெறுபவர் முதலாவது பணித்தலையோ அல்லது ஆடுகளத்தின் பக்கங்களிலொன்றின் தெரிவையோ மேற்கொள்ள உரித்துடையராவார்.

7.1.2 5வதும் இறுதியுமான சுற்றின் போது, 1ம் மத்தியஸ்தர் மீண்டும் ஒரு முறை நாணய சுழற்சியினை மேற்கொண்டு பணித்தல் அல்லது பங்கங்கள் ஒன்றினது தெரிவை உறுதிப்படுத்திக் கொள்வார்.

7.2 அணிகளது உடல் வெப்பமூட்டல் (Teams' Warming up)

7.2.1 போட்டி ஆரம்பமாவதற்கு முன்னர் இவ்வணிகள் வேறெந்த மைதானங்களிலாவது இவ்வகையான பயிற்சிகளை மேற்கொண்டிருப்பின் ஒவ்வொரு அணிக்கும் 3 நிமிட நேரமும், வேறெந்த மைதானங்களும் இல்லாத சந்தர்ப்பங்களில் ஒவ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வொரு அணிக்கும் வலைகண்மையில் இவ்வாறான பயிற்சி களில் ஈடுபட 5 நிமிட நேரமும் வழங்கப்படும்.

7.2.2. இரு அணித்தலைவர்களும் ஒரே நேரத்தில் வலைக்கண்மையில் இவ்வாறான பயிற்சிகளில் ஈடுபட விரும்பின் 7.2.1 எனும் விதிக்கிணங்க ஒவ்வொரு அணிக்கும் 6 அல்லது 10 நிமிட நேரமும் வழங்கப்படும்.

7.2.3. இரு அணியினரும் தொடர்ச்சியான வெவ்வேறான பயிற்சியை பெற விருப்பம் தெரிவிப்பின், பந்து பணிக்கவிருக்கும் அணிக்கே முதற் சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

விதி (08) அணியின் வரிசை ஒழுங்கும், நிலைகளும்

(Team Line - up, Location of Participants)

8.1. அணியின் வரிசை ஒழுங்கு (Team Line - up)

8.1.1. சுற்று ஒன்றின் ஆரம்பத்திலேயே ஒவ்வொரு பயிற்றுவிப்பாள ரும் தத்தமது அணியின் வரிசை ஒழுங்குப் படிவத்தை புள்ளிப் பதிவாளரிடம் அல்லது 2வது மத்தியஸ்தரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். (விதி 9.1.2)

8.1.2. சுற்று ஒன்றின் ஆரம்பத்தில் காணப்படும் 6 வீரர்களினதும் வரிசை ஒழுங்கே அவ் அணியின் ஆரம்ப வரிசை ஒழுங்காகும். எக்காரணங்கொண்டும் அணியின் எண்ணிக்கை 6வீரர்களுக்குக் குறைவுபடலாகாது.

8.1.3. ஆடுகளத்தினுள் காணப்படும் 6 வீரர்களதும் வரிசை ஒழுங் கானது அவ்வாட்டத்திற்குரிய வரிசை ஒழுகாகவே கணிக்கப் படும்.

8.2. பதிலாட்டக்காரர்கள் பயிற்றுவிப்பாளர்களது நிலைகள் (Location of Substitutes and Coaches)

8.2.1. சுற்று ஒன்றின் ஆரம்ப வரிசைக்கென பெயர் குறிப்பிடாத ஏனைய வீரர்கள் அச்சுற்றுக்கான பதிலாட்டக்காரராவர்.

8.2.2. பதிலாட்டக்காரர்கள், பயிற்றுவிப்பாளர்கள் ஆகியோர் தமது களத்தின் பக்கத்தில் தமக்கென ஒதுக்கப்பட்ட இருக்கைகளில் இருத்தல் வேண்டும் (படம் 2)

8.2.3. ஆடுகளத்திற்கு சற்றுத் தள்ளி அமைந்துள்ள சுயாதீன எல்லைப் பிரதேசத்தில் இப்பதிலாட்டக்காரர்கள் உடல் வெப்பமூட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சிகளில்டுபடலாமெனினும் (பந்துகளின்றி) பயிற்சி முடிவடைந்தவுடனே தத்தம் இருக்கைகளுக்குத் திரும்புதல் வேண்டும்.

8.2.4. இப்பதிலாட்டக்கரர்கள் ஆட்டத்தின் போது தத்தமது அணியினரைக் கைதட்டி உற்சாகப்படுத்தவாமேயன்றி எதுவித அறிவுறுத்தல்களையும் வழங்கலாகாது.

விதி 09 வீரர்களின் நிலைகளும் சுழற்சி ஒழுங்கும் (Players' Position and Rotation படம் 5)

9.1. ஆட்டத்தின் நிலை (Position of Game)

9.1.1. பணிப்பவர் மூலம் பந்து பணிக்கப்படும் வேளைகளில் (பணிப்பவர் நீங்கலாக) அந்தந்த அணியினர் தத்தமது ஆடுகளத்தில், மூவர் வீதம் இரு வரிசைகளில் நிற்றல் வேண்டும். 8.1.1. வரிசை ஒரே நேர் கோட்டில் அமைந்திருத்தல் அவசியமன்று.

9.1.2 வலைக்கண்மையில் காணப்படும். மூவரும் தாக்குதல் அணியை சேர்ந்த முன்னணி வீரர்களாவர். இவர்கள் 4 (இடம்) 3 (மத்தி) 2 (வலம்) என்ற நிலையிலும் எஞ்சிய பாதுகாப்பணியை சேர்ந்த பின்னணி மூவரும் 5 (இடம்) 6 (மத்தி) என்ற நிலையிலும் நிலைப்படுத்தப்படுவர். இப்பின்னணி வீரர் மூவரும் முன்னணி வீரரைவிட சற்று பின்நோக்கி காணப்படுவர்.

9.1.3 புள்ளிப் பதிவாளரிடம் வரிசை ஒழுங்குப்படிவம் Line-up Sheet சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் புள்ளிப் பதிவாளரினால் தவறுதலாக பதியப்படாமல் விடப்பட்ட அல்லது பிழையாக பதியப்பட்ட சந்தர்ப்பங்கள் தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் வரிசை ஒழுங்குப் படிவத்தில் எதுவித மாற்றமும் செய்யப்படலாகாது.

* வரிசை ஒழுங்குப் பத்திரத்திற்கும் தற்போது மைதானத்தில் நிலை கொண்டுள்ள வீரர்ளது வரிசை ஒழுங்கிற்குமிடையில் உடன்பாடுகள் காணப்படாத விடத்து போட்டி ஆரம்பிப்பதற்கு முன்பாகவே வரிசைப் பத்திரத்திற்கமைய அவை திருத்தியமைக்கப்படல் வேண்டும் (தண்டனை இல்லை) இருப்பினும் வரிசைப் பத்திரத்தில் காணப்படாத ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட வீரர்களோ மைதானத்துள் காணப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுழற்சி ஒழுங்கு (Rotation)



(படம் 5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

469324

[illegible] புயிற்சிகளிலீடுபட்டாலுமெனினும் (பந்துகளின்றி) பயிற்சி முடிவடைந்தவுடனே தத்தம் இருக்கைகளுக்குத் திரும்புதல் வேண்டும்.

8.2.4. இப்பதிலாட்டக்காரர்கள் ஆட்டத்தின் போது தத்தமது அணியினரைக் கைதட்டி உற்சாகப்படுத்தலையன்றி எதுவித [illegible]

விதி 09 வீரர்களின் நிலைகளும் சுழற்சி ஒழுங்கும் (Players' Position and Rotation படம் 5)

9.1. ஆட்டத்தின் நிலை (Position of Game) [illegible]

9.1.1. [illegible] முன்பு பந்து பணிக்கப்படும் வேளைகளில் (பணிப்பவர் நீங்கலாக) அந்தந்த அணியினர் தத்தமது ஆடுகளத்தில், மூவர் வீதம் இரு வரிசைகளில் நிற்றல் வேண்டும்.

8.1.1. வரிசை ஒழுங்கு நேர் கோட்டில் அமைந்திருத்தல் அவசியமன்று.

9.1.2 வலைக்கண்மையில் காணப்படும் [illegible] ஆக்குதல் அணியைச் சேர்ந்த முன்வரிசை வீரர்களாவர். இவர்கள் 4 (இடம்) 3 (மத்தி) 2 (வலம்) என்ற நிலையினை [illegible] பாதுகாப்பு அணியைச் சேர்ந்த பின்வரிசை மூவரும் [illegible] 6 (மத்தி) [illegible] நிலையிலும் நிலைப்படுத்தப்படுவர். இப்பின்வரிசை வீரர் மூவரும் முன்வரிசை வீரரைவிட சற்று பின்நோக்கி காணப்படுவர்.

9.1.3 புள்ளிப் பதிவாளரிடம் வரிசை ஒழுங்குப்படிவம் Line-up Sheet சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் புள்ளிப் பதிவாளரினால் தவறுதலாக பதியப்படாமல் விடப்பட்ட [illegible] முறையாக பதியப்பட்ட சந்தர்ப்பங்கள் தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் வரிசை ஒழுங்குப் படிவத்தில் எதுவித மாற்றமும் செய்யப்படலாகாது.

* வரிசை ஒழுங்குப் பத்திரத்திற்கும் தற்போது மைதானத்தில் நிலை கொண்டுள்ள வீரர்களது வரிசை ஒழுங்கிற்குமிடையில் உடன்பாடுகள் காணப்படாத விடத்து போட்டி ஆரம்பிப்பதற்கு முன்பாகவே வரிசைப்பத்திரத்திலுள்ளவாறு அவை திருத்தியமைக்கப்படல் வேண்டும் (தண்டனை இல்லை) இருப்பினும் வரிசைப் பத்திரத்தில் காணப்படாத ஒருவரோ அல்லது அதற்கு மேற்பட்ட வீரர்களோ மைதானத்தில் காணப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்சத்தில் வரிசைப் பத்திரத்திற்கேற்ப திருத்தியமைக்கும்படி அணியினர் கேட்கப்படுவர். (தண்டனைகள் இல்லை)

ஆயினும் இவ்வாறு இடம்பெறும் வீரர்கள் ஆடுகளத்தினுள் இருக்கும் அணியை அவ்வணியின் பயிற்றுவிப்பாளர் விரும்பியபடி இப்பிரதியீடு ஓர் சட்டபூர்வமான பிரதியீடாக (Legal Substitution) அவ்வணியின் புள்ளிப் பத்திரத்தில் பதிந்து வைக்கப்படும்.

9.1.4 வீரர்கள் பாதங்கள் நிலத்திலிருக்கும் நிலைகளைத் தொடர்பு அணிகளது ஆரம்ப நிலைகள் பின்வருமாறு தீர்மானிக்கப்படுகிறது. (படம் 8)

அ. முன்வரிசை வீரரொருவரின் பாதத்தின் ஒரு பகுதியேனும் … அணியை … நிலையின் … பாதத்தைவிட மத்திய கோட்டுக்குச் சமீபமாகவும் அமைந்திருத்தல் வேண்டும்.

ஆ. … இடப்பக்கமாகவும் அமைந்துள்ள (முன் அணி/பின்னணி) வீரரது பாதத்தின் ஒரு பகுதியேனும் மத்திய பகுதியிலாகும் வீரரது பாதத்தைவிட பக்கக் கோடுகளை அண்மித்தவாறு காணப்படல் வேண்டும்.

9.1.5 பந்தடித்தலொன்று மேற்கொள்ளப்பட்ட பின்னர் வீரர்கள் தமது தமது எல்லைகளுக்குள்ளேயோ, ஆடுகளத்தில் எப்பகுதியிலேயோ சென்று ஆட்டத்தில் பங்கு கொள்ளலாம்.

9.2 வீரர்களின் சுழற்சி ஒழுங்கு (Rotation of Players)

9.2.1 பந்தினை எதிர்கொள்ளும் (Receiving) ஒரு அணி பந்தின் தொடர்ச்சியான … (Rally) … பெறுமானால் அவ்வணி பந்தடிக்கும் … (Side out) … வாய்ப்பை பெறும் … பெற்ற அணி, மணிக்கூட்டுச் சுற்று முறையாக (Clockwise) சுழற்சியை மேற்கொள்ளும்.

9.2.2 ஒவ்வொரு சுற்றின் ஆரம்பத்திலும் … பதியப்படும் சுழற்சி ஒழுங்கு (Order of Rotation) அச்சுற்று முழுவதும் … பேணப்பட வேண்டும்.

9.2.3 அணிகள் தாம் விரும்பின் ஒவ்வொரு சுற்றின் ஆரம்பத்திலும் … சுழற்சி ஒழுங்கை மாற்றிக்கொள்ளலாம். … முன்கூட்டியே பதியப்பட்ட வீரரும் … வரிசை ஒழுங்கில் இடம் பெறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரியான நிலைக்குரிய விதி

A - விதி 9.1.4 (அ)
உதாரணம்

(படம் 6)



B- 9.1.4 (ஆ)
உதாரணம்



C - மத்திய வீரர்
D (R) வலதுபக்க வீரர்
G. (L I) இடதுபக்க வீரர்

படம் 6
விதி 9

பட்சத்தில் வரிசைப் பத்திரத்திற்கேற்ப விருத்தியமைக்கும்படி அணியினர் கேட்கப்படுவர். (தண்டனைகள் இன்றி)

* ஆயினும் இவ்வாறு இடம்பெற்ற வீரர்கள் ஆடுகளத்தினுள் இருத்தல் அவசியம் என அவ்வணியின் பயிற்றுவிப்பாளர் விரும்புமிடத்து, இப்பிரதியீடு ஓர் சட்டபூர்வமான பிரதியீடாக (Legal Substitution) அவ்வணியின் புள்ளிப்பதிவேட்டிப் பதிந்து வைக்கப்படும்.

9.1.4 வீரர்கள் பாதங்கள் நிலத்திற்படும் நிலைகளைக் கொண்டே அவர்களது ஆடும் நிலைகள் பின்வருமாறு தீர்மானிக்கப்படுகிறது. (படம் 6)

அ) முன்னணி வீரரொருவரின் பாதத்தின் ஒரு பகுதியேனும் அதே அணியை சேர்ந்த பின்னணி வீரரொருவரின் பாதத்தைவிட மத்திய கோட்டுக்குச் சற்றேனும் அணமித்திருத்தல் வேணடும்.

ஆ) வல, இடப்பக்கங்களில் ஆடும் அதேவரிசையிலுள்ள (முன்னணி/பின்னணி வீரரது பாதத்தின் ஒரு பகுதியேனும் மத்திய பகுதியிலாடும் வீரரது பாதத்தைவிட பக்கக் கோடுகளை அண்மித்ததாக காணப்படல் வேண்டும்.

9.1.5 பணித்தலொன்று மேற்கொள்ளப்பட்ட பின்னர் வீரர்கள் தமது சுயாதீன எல்லைக்குள்ளேயோ, ஆடுகளத்தின் எப்பகுதிக்குமோ சென்று ஆட்டத்தில் பங்கு கொள்ளலாம்.

9.2 வீரர்களின் சுழற்சி ஒழுங்கு (Rotation of Players)

9.2.1 பணித்தலை எதிர்கொள்ளும் (Receiving) ஓர் அணி பந்தின் தொடர்ச்சியான பயணத்தில் (Rally) வெற்றி பெற்றால் அல்லது பணித்தலில் ஈடுபட்ட அணி பிழைவிடும் சந்தர்ப்பத்தில் பக்க மாற்றத்தையும் பெறுவதுடன் (Side out) பணிக்கும் வாய்ப்பையும் பெறும். பக்க மாற்றம் பெற்ற அணி, மணிக்கூட்டுச் சுழற்சி முறையாக (Clockwise) சுழற்சியை மேற்கொள்ளும்.

9.2.2 ஒவ்வொரு சுற்றின் ஆரம்பத்திலும் ஒழுங்குபடிவத்தில் பதியப்படும் சுழற்சி ஒழுங்கானது (Order of Rotation) அச்சுற்று முடியும் வரை அதே ஒழுங்கிலேயே செயற்பட வேண்டும்.

9.2.3 அணிகள் தாம் விரும்பின் ஒவ்வொரு சுற்றின் போதும் புதிய சுழற்சி ஒழுங்கை மேற்கொள்ளலாம், புள்ளிப் பதிவேட்டில் ஏற்கனவேயே பதியப்பட்ட வீரருள் எவரேனும் புதிய வரிசை ஒழுங்கில் இடம் பெறலாம்/பதியப்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9.3 நிலைகளில் ஏற்படும் தவறு (Positional Fault)

பணிப்பவரால் பந்து அனுப்பப்படும் வேளையில் வீரர்கள் தமக்குரிய நிலைகளில் இல்லாமை, இவ்வாறு அழைக்கப்படும். (விதி 9.1.4)

9.4 நிலைத்தவறுகளால் ஏற்படும் விளைவுகள்
(Consequences of a Positional Fault)

9.41. வீரரொருவர் பந்தைப் பணிக்கும் வேளையில் பணித்தல் தவறொன்றை மேற்கொள்வாராயின் அது நிலைகளில் ஏற்படும் தவறொன்றாகவே கருதப்பட்டு அதற்குரிய தண்டனை வழங்கப்படும்.

9.4.2 பந்து பணிக்கப்பட்ட பின்பு அவர் பணித்தல் தவறொன்றை மேற்கொள்வாராயின் அது நிலைகளிலேற்படும் தவறொன்றிக்கு அடுத்தபடியான தவறாகக் கருதப்பட்டு நிலைகளில் ஏற்படும் தவற்றிக்குரிய தண்டனையே வழங்கப்படும்.

9.4.3 நிலைகளிற்கான தவறு பின்வருமாறு தண்டிக்கப்படும்.

அ. வீரர்கள் உடனடியாக தமக்குரிய நிலைகட்குத் திருப்பி அனுப்பப்படல்.

ஆ. தவறிழைக்கப்பட்ட சந்தர்ப்பத்தை புள்ளிப்பதிவாளர் தெளிவாகக் குறிப்பிடும் பட்சத்தில் தவறிழைக்கப்பட்ட ஒரு அணியால் தவறாக பெறப்பட்ட சகல புள்ளிகளும் ரத்துச் செய்யப்படும். ஆனால் அதே நேரம், எதிரணி பெற்ற புள்ளிகளில் எதுவித மாற்றமும் ஏற்படாது.

இ. நிலைகள் மாறியாடிய வேளையிலோ, பிழையான பணித்தல் ஒழுங்கின் மூலமாகவோ புள்ளிகள் பெறப்பட்டிருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாத சந்தர்ப்பங்களில் தவறிழைத்த அணிக்கு அபராதமாகத் தண்டனை ஒன்று வழங்கப்படும்.

9.5 சுழற்சி ஒழுங்கு முறை தவறுகள் (Rotational Faults)

சுழற்சி ஒழுங்கு முறைப்படி பணித்தல் மேற் கொள்ளப்படாத நேரங்களிலேயே இத்தவறுகள் ஏற்படுகின்றன. இது ஓர் முற்று முழுதான நிலைகளிலேற்படும். தவறாகக் கணக்கிடப்படுவதால் அத்தவறு சீர்செய்யப்படும் வரையில் ஆட்டத்தை இடைநிறுத்துவதோடு, தவறிழைத்த அணிக்கு 9.3, 9.4 எனும் விதிகட்கிணங்க நிலைகளில் ஏற்படும் தவற்றுக்கான தண்டனைகள் வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதி (10) ஆட்டத்தடங்கல்கள் (Game Interruption)

10.1 சட்ட பூர்வமான தடங்கலுக்கான வரைவிலக்கணம் (Definition of Legal Interruption)
நேர இடைவேளைகள் பிரதியீடுகள் என்பவையே ஓர் ஆட்டத்திற்கான சட்டபூர்வமான தடங்கல்களாகும். பந்து ஆட்டமிழக்கப்பட்ட வேளையில் பயிற்றுவிப்பாளர் அல்லது ஆட்டத் தலைவரின் வேண்டுகோளுக்கிணங்க அவை மத்தியஸ்தரால் அனுமதிக்கப்படும்.

10.2 அனுமதிக்கப்பட்ட தடங்களுக்கான எண்ணிக்கை (Number of Interruptions Allowed)
சுற்று ஒன்றுக்கு ஓர் அணிக்கென ஆகக் கூடுதலான 2 நேர இடைவேளைகளும் (T) 6 பிரதியீடுகளும் அனுமதிக்கப்படும்.

10.3 தடங்கல்களுக்கான அங்கீகாரமும் காலஎல்லையும் (Authorization and time limit for Interruptions)

10.3.1 ஆட்டத் தலைவர் அல்லது அணியின் பயிற்றுவிப்பாளர் உத்தியோக சட்டபூர்வமான சைகை மூலம் கேட்கப்படும்போது மட்டும் இத்தடங்கல்கள் ஏற்றுக்கொள்ளப்படும். (படம் 10)

10.3.2 பிரதியீடுக்கான தடங்கல்கள் யாவும் மாற்றங்களை பதிவு செய்தல் வீரர்கள் வெளியே செல்லல் உள்ளே வரல் போன்ற வற்றுக்கான நேர வரையறையை கொண்டதாய் இருக்கும்.

10.3.3 ஒவ்வொரு நேர இடைவேளையும் 30 செக்கன் வரையறையுடையதாகும்.

10.3.4 நேர இடைவேளையைக் கோரும் அணிக்கு தனக்களிக்கப்பட்ட நேர இடைவேளையை சுருக்கிக்கொள்ள உரிமையுண்டு. இவ்வேளையில் ஆட்டம் உடனடியாகவே ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

10.3.5 ஆட்டத்தை மீண்டும் ஆரம்பிக்கும்படி மத்தியஸ்தரால் விசில் ஊதப்பட்ட பின்னரும் தமது தடங்கலை நீடிக்கும் ஓர் அணிக்கெதிராக ஓர் மேலதிக நேர இடைவேளை கணக்கிடப்படும்

10.4 தடங்களுக்கான தொடர்ச்சியான வேண்டுகோள்கள் (Successive Requests for Interruption)

10.4.1 ஓர் அணியானது ஒரு பிரதியீட்டின் முன்னரோ அல்லது தொடர்ந்தோ ஒரு பிரதியீட்டின் முன்னரோ இடைவேளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைத் தொடர்ந்தும் கேட்கும் சந்தர்ப்பத்தில் ஆட்டத்தை உடனடியாக ஆரம்பிக்க வேண்டிய அவசியமில்லை.

10.4.2 ஆட்டம் மீண்டும் ஆரம்பிக்கும் வரை ஒரு அணியானது பிரதியீட்டுக்கென இரண்டாவது தொடர்ச்சியான ஆட்டத்தடங்கலினை கோருவதற்கு அனுமதிக்கப்படமாட்டாது. ஆனால் இரண்டோ அதற்கு மேற்பட்டவரோ ஒரே நேரத்தில் பிரதியீடு செய்யப்படலாம்.

10.5. நேர இடைவேளைகளை பயன்படுத்தும் விதம் (Use of the Time - Out)

10.5.1 வீரர்கள் பக்கக் கோடுகளை அண்மிக்கலாமன்றி ஆடுகளத்தை விட்டு வெளியேறலாகாது.

19.5.2 முதலாவது பயிற்றுவிப்பாளர் கூட பக்கக்கோடுகளை அண்மித்து வீரர்களுடன் உரையாடலாமெயன்றி மைதானத்துள் செல்லலாகாது.

10.5.3 அதே அணியை சேர்ந்த வீரர் ஒருவர் ஆடுகளத்தினுள் தமதணி வீரர்கட்க்கு துவாய் அல்லது குளிர்பானம் முதலியவற்றை கொடுக்கலாமேயன்றி அவர்களுடன் உரையாடலாகாது.

10.5.4 அட்டத்தலைவரின் வேண்டுகோளின் பேரில் மைதானத்துக்குள்ளிருக்கும் வீரர்களுக்கு தேவையான வைத்திய உதவி வழங்க 1ம் மத்தியஸ்தர் அங்கீகாரம் வழங்குவார்.

10.6 முறையற்ற வேண்டுகோள்கள் (Improper Requests) முறையற்ற வேண்டுகோளை மத்தியஸ்தர் நிராகரித்தல்

10.6.1 ஆட்டம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கையில் அல்லது பணித்தலுக்காக மஸ்தியஸ்தரால் விசில் ஊதப்பட்ட பின்னர் வேண்டுகோள் விடுக்கப்படின் ஆட்டத்தடங்கலுக்கென தவறுதலாக 2ம் மத்தியஸ்தரால் தவறாக விசில் ஊதப்படின், அவ்வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டு பணித்தல் மீண்டும் ஆரம்பமாகும்.

10.6.2 ஆட்டம் மீண்டும் ஆரம்பிக்கம்படும். முன்னர் அதேயணியினரால் பிரதியீட்டுக்கென இரண்டாவது தடங்கலுக்கான வேண்கோள் விடுக்கப்படின்.

10.6.3 அணியின் அங்கீகரிக்கப்படாத அங்கத்தவரொருவரால் வேண்டுகோள் விடுவிக்கப்படின்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10.6.4 தமக்கென ஒதுக்கப்பட்ட எண்ணிக்கை முடிவுற்ற நிலையில் ஓர் அணி சட்டபூர்வமான வேண்டுகோள் ஒன்றை விடுப்பின். இவ்வாறான சந்தர்ப்பத்தில் அவ்வணி எச்சரிக்கை ஒன்றைப் பெறும்.

10.7 அணி அங்கத்தவர்களால் ஏற்படும் தடங்கல்கள் (Interruptions due to team members)

10.7.1 பந்து ஆட்டத்திலிடுபட்டிருக்கும் வேளையில் பாரதூரமான ஓர் விபத்து நிகழுமாயின் மத்தியஸ்தர் ஆட்டத்தை நிறுத்தி பின்வருமாறு செயல்படுவார்.

அ. ஒரு வீரர் காயமுற்று தொடர்ந்தும் ஆட முடியாத நிலையிருப்பின் அவர் சட்டபூர்வமான முறையில் பிரதியீடு செய்யப்படல் வேண்டும்.

ஆ. சட்டபூர்வமான பிரதியீடு ஒன்று செய்ய முடியாத நிலையில் இருப்பின் காயமுற்ற அவ் வீரருக்கான விதிவிலக்கு அளிக்கப்பட்ட சட்டபூர்வமற்ற பிரதியீடு ஒன்றினை மேற்கொள்ள 1ம் மத்தியஸ்தரால் அங்கீகாரம் வழங்கப்படும்.

இ. பிரதியீடுகள் எதுவும் செய்ய முடியாத நிலையில் ஓர் அணி இருப்பின் காயமுற்ற அவ் வீரருக்கென 3 நிமிட அவகாசம் வ...ங்கப்படும்.

ஈ. கொடுக்கப்பட்ட 3 நிமிடங்களுக்குள் காயத்துக்குள்ளானவர் மீண்டும் பழைய நிலைக்குத் திரும்பாவிடின் அவ்வணி ஓர் பூரணமற்ற அணியாகப் பிரகடனப்படுத்தப்படும். (13.2.2, 13.3.2)

10.7.2 வீரரொருவா ஆட்டத்தினின்று வெளியேற்றப்படும் சந்தர்ப்பத்தில் அவர் பிரதியீடு செய்யப்படுவதற்காக மத்தியஸ்தரால் ஆட்டம் இடைநிறுத்தப்பட வேண்டும்.

இவ்வேளையில் அவ்வணியினால் சட்டபூர்வமான பிரதியீடொன்றை செய்ய முடியாதவிடத்து அவ்வணி அச்சுற்றுக்கு ஓர் பூரணமற்ற அணியாகப் பிரகடனப்படும். (13.2.2)

10.7.3 பிரதம பயிற்றுவிப்பாளர் வெளியேற்றப்படின் ஆட்டத்தலைவரின் வேண்டுகோளுக்கிணங்க உதவிப் பயிற்றுவிப்பாளர் 1ம் பயிற்றுவிப்பாளரது பொறுப்புகளை ஏற்பர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10.8 தடங்கல் தவறுகள் (Interruption Faults)
ஓர் அணி தவறிழைக்கும் சந்தர்ப்பங்கள்:

10.8.1 ஆட்டத்தை மீண்டும் ஆரம்பிக்கும்படி அழைக்கப்பட்ட பின்னரும் தனது 2வது நேர இடைவேளையை நீடித்தல்.

10.8.2 2வது முறையாகவும் 3வது நேர இடைவேளையைக் கோருதல்

10.8.3 2வது நேர இடைவேளை முடிவுற்ற பின்னரும்பிரதியீட்டினை நீடித்தல்

10.8.4 2வது தொடர்ச்சியான நேர இடைவேளைகளை பெற்றதற்கான தண்டனையைப் பெற்ற பின்வரும் ஆட்டத்தை தொடங்கத் தயாரற்ற நிலையில் இருத்தல். இதற்காக அவ்வணி குறித்த நேரத்தில் ஆட்டத்தில் பங்குபற்றத் தவறியதாகப் பிரகடனப்படுத்தப்படும். (13.4.3)

10.9 ஆட்டத்தின்போது ஏற்படும் நீடித்த தடங்கல்கள் (Prolonged Interruptions During a Match)
ஆட்டத்தைத் தொடர முடியாதபடி ஏற்படும் சில எதிர்பாராத சந்தர்ப்பங்களின் போது 1வது மத்தியஸ்தர் ஒழுங்கமைப்பாளர்கள் (ஜூரிகள் இருப்பின் அவர்களும்) சேர்ந்து பழைய நிலையினை மீண்டும் கொண்டுவர தம்மாலான நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்.

* இதன்போது பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்:

10.9.1 4 மணித்தியாலங்கட்கு மேற்படாத ஒன்றோ, அல்லது அதற்கு மேற்பட்ட தடலங்களின் போது:

அ) ஓர் ஆட்டம் மீண்டும் அதே ஆடுகளத்தில் இடம்பெறுமேயானால் அச்சுற்றில் அணிகளது புள்ளிகள் வீரர்களது ஆடும் நிலைகள் ஆட்ட நிலைகள் என்பவையும் அதே நிலையிலேயே காணப்படும் முன்னைய சுற்றுக்கள் அதே புள்ளிகளைக் கொண்டதாகவிருக்கும்.

ஆ) ஆட்டம் வேறொரு ஆடுகளத்தில் மீண்டும் ஆரம்பிக்கப்படும் வேளையில் ஏற்கனவேயே தங்களுக்குள்ளான அச்சுற்று(Set) ரத்துசெய்யப்பட்டு மீண்டும் புதிதாகவே ஆரம்பிக்கப்பட வேண்டும் அந்நேரத்தில் காணப்படும் ஆரம்ப ஒழுங்கு வரிசை ஆட்ட நிலைகள் போன்றன தங்களுக்குள்ளான சுற்றில் காணப்பட்டதைப் போன்றே அமைந்திருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10.9.2 தடங்கள் 4 மணித்தியாலங்கட்கு மேலாக நீடித்திருப்பின் முழு ஆட்டமும் (5 சுற்றுக்களும்) புதிதாகவே ஆரம்பிக்கப்பட வேண்டும்.

விதி (11) வீரர்களின் பிரதியீடு (Substitution of players)

11.1 வரைவிலக்கணம் (Definition)

பிரதியீடென்பது வீரர் ஒருவர் மைதானத்தைவிட்டு வெளியேறுவதற்கும், அவரது நிலையை வகிக்க அவருக்குப் பதிலாக இன்னொருவர் மைதானத்துள் வருவதற்கும், மத்தியஸ்தரால் வழங்கப்படும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு செயலாகும்.

11.1.1 ஓர் அணி, ஓர் சுற்றுக்கொன், ஆகக்கூடுதலான 6 பிரதியீடுகளை மேற்கொள்ள அங்கீகாரம் வழங்கப்படும். இப்பிரதியீடுகள் அனைத்தும் ஓரே நேரத்திலோ, அல்லது சட்டபூர்வமான ஏதாவதொரு தடங்களின்போதோ மேற்கொள்ளப்படலாம்.

11.1.2 பிரதியொன்று சட்டபூர்வமானதாகவோ (Legal) கட்டாயமானதாகவோ (Compulsory) விதிவிலக்களிக்கப்பட்ட சட்டபூர்வமானதாகவோ (illegal) இருக்கலாம்.

11.1 சட்டபூர்வமான பிரதியீடு (Legal Substitution)

11.2.1 அணியின் பயிற்றுவிப்பாளர் அல்லது அவ்வாட்டத்தின் தலைவர் உத்தியோகபூர்வமான கைச்சைகள் (Official Hand Signals) தமக்கு தேவையான எண்ணிக்கைகள் மூலம் 1ம் அல்லது 2ம் மத்தியஸ்தரிடம் கோரும் (விதி 10.5) பிரதியீடுகள் இவ்வாறு அழைக்கப்படும்.

11.2.2 பந்து ஆட்டமிழக்கப்பட்ட வேளையில் அல்லது பணித்தலுக்குரிய மத்தியஸ்தரின் விசில் சத்தத்திற்கு முன்னர் இப்பிரதியீடுகள் முறையாக கேட்கப்பட்டு அங்கீகரிக்கப்படல் வேண்டும்

11.2.3 பதிலாட்டக்காரர்களின் பிரதியீடுகள் பின்வரும் நிபந்தனைகளுக்கிணங்க மேற்கொள்ளப்படல் வேண்டும்.

அ) ஆரம்ப வரிசை ஒழுங்கிலுள்ள நிரந்தர வீரர் ஒருவர், குறிப்பிட்ட அச்சுற்றில் ஒரே ஒரு முறை மட்டுமே ஆடுதளத்தை விட்டு வெளியேற முடியும். ஆயினும் மீண்டும் அவர் உள்ளே வருவதாயின் அவரது பழைய நிலையையே வகித்தல் வேண்டும்.

ஆ) பதிலாட்டக்காரர் ஒருவர், சுற்று ஒன்றுக்கு ஒரு தடவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமே பங்கு பற்றலாம். இவர் ஆரம்ப வரிசை ஒழுங்கில் உள்ள எந்தவொரு வீரரையும் பிரதியீடு செய்யலாம். ஆயினும் இவர் யாருக்காகப் பிரதியீடு செய்யப்பட்டாரோ அவ்வீரருக்காகவே பிரதியீடு செய்யப்பட்டு வெளியேற வேண்டும்.

11.3 சட்டபூர்வமான பிரதியீடுகளை மேற்கொள்ளும் முறைகள் (Procedure for Legal Substitutions)

11.3.1 பிரதியீடுகள் ஒன்று முறையாகக் கேட்கப்பட்ட மத்தியஸ்தர் ஒருவரின் அனுமதியைப் பெற்றிருத்தல் வேண்டும் (விதி 11.2)

11.3.2 ஆடுதளத்தினுள் நுழையவிருக்கும் பதிலாட்டக்காரர், அவர்கட்குரிய எல்லைப் பிரதேசத்தினுள், புள்ளிப் பதிவாளரது மேசைக்கருகில் தயார் நிலையில் இருத்தல் வேண்டும். (படம் 2) இவர்கள் தயார் நிலையில் இல்லாதவிடத்து, அவர்களது அணி மேலும் ஓர் நேர இடைவேளையை (Time Out) எடுத்ததாகத் தீர்மானிக்கப்படுவர்.

11.3.3 பதிலாட்டக்காரர் ஒருவருக்கு, மத்தியஸ்தரால் அங்கீகாரம் வழங்கப்பட்ட பின்னர், ஆடுகளத்தினுள் நுழையவிருக்கும் வீரர், தனது கையினையோ அல்லது இலக்கமிடப்பட்ட ஓர் அட்டையினையோ உயர்த்திய வண்ணம், பக்கக் கோட்டை அண்மித்து வருகின்ற அதே சமயத்தில், மைதானத்திலுள்ள அதே இலக்கமுடைய வீரரும், தனது பதிலாட்டக்காரர் முன்னிலையில் பக்க கோடுகளை அண்மித்தும் நிற்றல் வேண்டும். 2வது மத்தியஸ்தரின் கையை மூலமான அமைதியைத் தொடர்ந்து உள்நுழைபவரிடம் இருந்து தனக்குரிய அட்டையினைப் பெற்றுக்கொண்டு மைதானத்தினின்று வெளியேற வேண்டும்.

11.3.4 பிரதியீடுகள் நடைபெறும் வேளைகளில் கூட, பயிற்றுவிப்பாளர்கள் தமது அணியினருடன் பேசுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். இப்பிரதியீடுகள் காலதாமதமின்றி உடனடியாக நடத்தப்படல் வேண்டும்.

11.4 நிர்ப்பந்திக்கப்பட்ட பிரதியீடு (Compulsory Substitution)
பின்வரும் நடைமுறைக்கிணங்க, ஓர் அணி பிரதியொன்றினை மேற்கொள்ளும்படி நிர்ப்பந்திக்கப்படலாம்.

11.4.1 வெளியேற்றப்பட்ட வீரர் ஒருவருக்கான மாற்றம், ஓர் சட்டபூர்வமான பிரதியீட்டின் மூலமாகவே மேற்கொள்ளப்படல் வேண்டும். இவ்வாறான மாற்றங்கள் எதுவும் செய்யப்படமுடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாத நிலையில் இருக்கும் ஓர் அணி, பூரணமற்ற அணியாகப் பிரகடனப்படுத்தப்படும். (விதி. 10.7.2)

11.4.2 காயமுற்ற வீரர் ஒருவர் தொடர்ந்து ஆட முடியாத நிலையில் இருப்பின், அவர் சட்டபூர்வமான முறையிலேயே பிரதியீடு செய்யப்படவேண்டும். ஆனால் தமக்கென அனுமதிக்கப்பட்ட பிரதியீடுகள் அனைத்தும் முடிவுற்ற நிலையில், அவ்வணி ஓர் சட்டபூர்வமற்ற பிரதியொன்றைச் செய்ய விதிவிலக்களிக்கப்படும். (10.7.1 ஆ)

11.5 சட்டபூர்வமற்ற பிரதியீடுகள் (Illegal Substitution)

11.5.1 விதி 11.1.1, 11.2.3 ஆகியவற்றில் கூறப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றாதவிடத்து, ஓர் பிரதியீடு சட்டபூர்வமற்றவெளிவீடு ஆகும்.

11.5.2 இவ்வாறான பிரதியீட்டின் கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டு தவறிழைத்த அணி ஓர் நேர இடைவேளையை எடுத்ததாகத் தீர்மானிக்கப்படும். (Time Out) காயமடைந்தோருக்கு விதிவிலக்குண்டு. (11.4.2)

11.6 பிரதியீட்டுத் தவறுகள் (Substitution Faults)
பிரதியீட்டுத்தவறுகள் ஏற்படும் சந்தர்ப்பங்கள்

11.6.1 அ) பதிலாட்டக்காரர் தமக்குரிய பிரதியீட்டு எல்லையும் இல்லாமை, அல்லது,

ஆ) மத்தியஸ்தரால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட பதிலாட்டக்காரர் ஆடுகளத்தினுள் நுழையத் தயாரற்ற நிலையில் இருத்தல்.

இ) தமதணிக்கென ஒதுக்கப்பட்ட 2 நேர இடைவேளைகளும் ஏற்கனவே முடிவுற்ற நிலையிலுள்ள ஓர் அணி, இன்னுமொரு இடைவேளையை கோரல்.

11.6.2 ஏற்கனவே தமக்கென ஒதுக்கப்பட்ட 2 நேர இடைவேளைகளும் முடிவுற்ற நிலையிலுள்ள ஓர் அணி, சட்டபூர்வமற்ற பிரதியீடொன்றை 2வது முறையும் கோருதல்.

11.6.3 ஓர் அணி சட்டபூர்வமற்ற முறையில் ஓர் பிரதியீடொன்றை மேற்கொள்ளும் ஒரு சந்தர்ப்பத்தில் பின்வரும் நடவடிக்கைகளை மத்தியஸ்தர் மேற்கொள்வார்.

அ) தவறுக்குரிய தண்டனை வழங்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) பிரதியீடு உடனடியாக சேர்ப்படுத்தப்படும்

இ) தவறிழைத்த சந்தர்ப்பத்தினின்று பெறப்பட்ட புள்ளிகள் யாவும் இரத்துச் செய்யப்படும்

ஈ) இவ்வேளையில் எதிரணியினர் பெற்ற புள்ளிகள் எந்த வித மாற்றத்திற்கும் உள்ளாக மாட்டாது.

விதி (12) சுற்றுக்களுக்கிடையிலான இடைவேளைகளும் ஆடுகளங்களின் மாற்றங்களும் (INTERVALS BETWEEN SETS AND CHANGES OF COURTS)

12.1 சுற்றுக்கள் (ஆட்டங்கள்) இடையிலான இடைவேளைகள் (Intervals Between Sets Games)

12.1.1 சுற்றுக்களுக்கிடையிலான அங்கீகரிக்கப்பட்ட நேர இடைவேளைக்குரிய கால வரையறை நிமிடங்களாகும். இவ்விடைவேளைகளின் போது, ஆடுகளங்களின் மாற்றம், புள்ளிப் பதிவேட்டில் ஆரம்ப ஒழுங்கு வரிசைகளின் பதிவு என்பவை இடம் பெறும். (8.1.1)

4வது 5வது ஆட்டங்களுக்கிடையிலான இடைவேளை 5 நிமிடங்களாகும்.

12.1.2 ஆட்டத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்காக 1ம் மத்தியஸ்தரால் அழைக்கப்படும் நேரத்தில் அணிகள் முடிவுக்கோடுகளில் வரிசையாக நிற்றல் வேண்டும்.

ஆட்டத்தை ஆரம்பிக்கும்படி மத்தியஸ்தர் அழைக்கையில் அணிகள் சமூகமளிக்கத் தவறின், அவ்வணி 10.8.4, 13.4.3 என்ற விதிகளின்படி தண்டிக்கப்படும்.

12.2 ஆடுகளங்களின் மாற்றங்கள் (Change of Court)

12.2.1 இறுதி ஆட்டம் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு சுற்றில் முடிவிலும், அணிகள் அடுத்த சுற்றுக்கென ஆடுகளங்களை மாற்றிக் கொள்ளும் (7.1.2)

பதிலீட்ட வீரர்களும், அணியின் ஏனைய அங்கத்தவர்களும் தமது இருக்கைகளை மாற்றிக் கொள்வர்.

12.2.2 5வது, இறுதியுமான ஆட்டத்தில் ஓர் அணி 8 புள்ளிகள் எடுத்த நிலையில், எதுவித காலதாமதமுமின்றி ஆடுகளங்கள் மாற்றப்படும் இவ்வேளைகளில், பயிற்றுவிப்பாளர்கள் அறி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வுறுத்தல்கள் கொடுத்தல், தமது நிலைகளை மாற்றி ஆடுதல் போன்றன தடை செய்யப்பட்டுள்ளது. மாற்றம் நடைபெறு முன்னர், கடைசியாக பணித்தலில் ஈடுபட்டவரே மீண்டும் பணித்தலை மேற்கொள்வார்.

குறித்த நேரத்தில் இம்மாற்றம் நடைபெறத் தவறின், இத் தவறு கண்டுபிடிக்கப்படும் சமயத்திலேயே அம்மாற்றமும் நடைபெறும். இவ்வேளையில்கூட அணிகள் பெற்ற புள்ளி களில் எந்தவித மாற்றமும் செய்யப்பட மாட்டாது.

விதி (13) ஆட்ட முடிவுகள் (RESULTS OF GAMES)

13.1 புள்ளி ஒன்றை பெறும் அணி (Team that Scores a Point) பணித்தலில் ஈடுபடும் ஓர் அணியே புள்ளியையும் பெறும். அதாவது, பந்தின் தொடர்ச்சியான பயணத்தை (Rally) வெற்றி கொள்வதாலோ, அல்லது தமது பணித்தலின்போது எதிரணி இழைக்கும் தவறுகளால் இப்புள்ளிகள் கிடைக்கும் அத்துடன் தொடர்ந்து பணிக்கும் வாய்ப்பும் கிடைக்கும்.

13.2 சுற்று ஒன்றில் (ஆட்டம்) வெற்றி பெறுவோர் (Winner of a set Game)

13.2.1 எதிரணியை விட ஆகக்குறைந்த 2 புள்ளிகளை அனுகூலமாகப் பெற்ற நிலையில் 15 புள்ளிகளை முதன்முதலில் பெறும்ஓர் அணி யோ (15:13) அல்லது இரு அணிகளும் 14;14 என்ற சமமான புள்ளிகளைப் பெற்றிருக்கும் சந்தர்ப்பத்தில் 2 புள்ளிகளை அனுகூலமாகப் பெறும் ஓர் அணியோ (16-14, 17-15 ....) வெற்றி பெற்ற அணியாகக் கருதப்படும்.

இரு அணிக்கும் 16:16 என்ற புள்ளிகள் பெற்ற நிலையில், முதன் முதலாக 17 புள்ளிகளைப் பெறும் அணியே வெற்றி பெற்ற அணியாகக் கருதப்படும். (இறுதியாட்டம் தவிர்ந்த)

13.2.2 ஓர் அணியானது பூரணமற்றது என மத்தியஸ்தரால் பிரக டனப்படுத்தப்பட்ட வேளையில், அச்சுற்றில் வெற்றி பெறுவ தற்கு தேவையான புள்ளிகள் அதன் எதிரணிக்குக் கொடுக்கப் படும். அவ்வேளையில் பூரணமற்ற அணியானது தான் பெற்ற புள்ளிகளைத் தன்னிடம் கொண்டிருக்கும்.

13.3 5வதும் இறுதியானதுமான ஆட்டம் (5th and Final Set)

13.3.1 இவ்வாட்டத்தில் புள்ளிகள் தொடர்ச்சியாகக் கிடைப்பதுடன் (பக்கமாற்றமின்றி) பணிக்கும் சந்தர்ப்பமும் வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13.3.2 பணித்தலை மேற்கொள்ளும் அணி பந்தின் தொடர்ச்சியான பயணத்தில் (Rally) வெற்றி பெறின், அவ்வணிக்கு ஒரு புள்ளி யும் மீண்டும் பணிக்கும் வாய்ப்பும் கிடைக்கும்.

13.3.3 பணித்தலை ஏற்கும் அணி (எதிரணி) அவ்வொழுக்கில் வெற்றி பெறின் இவ்வணிக்கு 1 புள்ளியும், பணிக்கும் வாய்ப்பும் கிடைக்கும். அத்துடன் இவர்கள் சுழற்சி முறையை மேற் கொள்ளல் வேண்டும்.

13.4 போட்டி ஒன்றில் வெற்றி பெற்றோர்
(Winner of a Match)

13.4.1 விதி 13.2 இல் கூறப்பட்டதற்கிணங்க 3 சுற்றுக்களில் வெற்றி பெறும் ஓர் அணியே முழு போட்டியிலும் வெற்றி பெற்ற அணியாகக் கருதப்படும்.
இரு அணிகளுக்கும் 2;2 என்ற சமமான சுற்றுக்களில் வெற்றி பெற்றிருக்கும் சந்தர்ப்பங்களில், 5வதும் இறுதியுமான சுற்றில் பக்க மாற்றங்கள் இன்றி (Side Out) புள்ளிகள் தொடர்ச்சி யாக வழங்கப்படும். (13.3)

13.4.2 போட்டியின் மீதமுள்ள சுற்றுக்களிலும் ஆட ஓர் அணி பூரண மற்ற நிலையில் காணப்படின், ஆட்டத்தில் வெற்றி பெறுவ தற்குத் தேவைப்படும் புள்ளிகளும் சுற்றுக்களும் எதிரணிக்கு வழங்கப்பட்டு, அதன் வெற்றி உறுதிப்படுத்தப்படும். (பூரண மற்ற அணி ஏற்கனவே பெற்ற புள்ளிகளும் சுற்றுக்களும் அதே நிலையில் காணப்படும்.)

13.4.3 ஆனால் 1ம் மத்தியஸ்தரால் ஒரு முறை எச்சரிக்கப்பட்ட பின்னரும், ஒரு அணி தொடர்ந்தும் ஆட மறுப்புத் தெரிவிப் பின், அது தவறு இழைத்ததாகப் பிரகடனப்படுத்தப்படுவது டன், ஒவ்வொரு சுற்றிலும் 15-0 என்ற புள்ளியடிப்படையில் 3-0 என்ற சுற்றுக்களில் எதிரணியினரிடம் தோல்வியுற்றதாக வும் பிரகடனப்படுத்தப்படும்.

13.4.4 ஓர் அணி தகுந்த காரணமின்றிகுறித்த நேரத்திற்கு ஆடுகளத் தில் சமூகம் அளிக்கததவறின், அது தவறிழைத்ததாகக் கருதப் பட்டு, எதிரணிக்கு ஒவ்வொரு சுற்றிலும் 15–0 என்ற புள்ளி களும், 3-0 என்ற சுற்றுக்களும் கொடுக்கப்பட்டு ஆட்டத்தில் எதிரணியே வெற்றி பெற்றதாகப் பிரகடனப்படுத்தப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளையாட்டு செயல் முறைகளும் தவறுகளும்
(Playing Actions and Faults)

விதி (14) பணித்தல் (SERVICE)

14.1 வரைவிலக்கணம் (Definition)

14.1.1 ஆட்டத்திலீடுபடும் பந்தின் தொடர்ச்சியான பயணத்தை (Rally) ஆரம்பிப்பதற்காக, பணித்தல் பிரதேசத்தில் இருந்து பின்னணி வலது பக்க மூலையில் நிற்கும் வீரர் ஒருவரால் கையினால் பந்து அடிக்கப்பட்டு அனுப்பப்படும் ஒரு செய்கையே பணித்தல் ஆகும்.

14.2 முதலாவது பணித்தல் (First Service)

14.2.1 1வது, 5வது சுற்றுக்களில் 1வது பணித்தலானது, நாணய சுழற்சியின் பின்னர் அணித்தலைவர்களது தெரிவுக்காக விடப் படும்.

14.2.2 ஏனைய சுற்றுக்கள், முந்தைய சுற்றில் முதலில் பணித்தலில் ஈடுபடாத அணியின் பணித்தலை தொடர்ந்து ஆரம்பமாகும்

14.3 பணித்தல் ஒழுங்கிற்கான அடிப்படை ஒழுங்குகள் (Principles for Service Order)

வரிசை ஒழுங்குப் படிவத்தில் குறிப்பிட்ட படியே ஒவ்வொரு அணியும் பணித்தல் ஒழுங்கினை மேற்கொள்ளல் வேண்டும். ஆட்டத்தின்போது பணித்தலுக்குரியவர் பின்வருமாறு தீர்மானிக்கப்படுவார்.

14.3.1 பணிக்கும் அணியே. பந்தின் தொடர்ச்சியான பயணத்தில் வெற்றி பெறுமாயின், பணித்தலில் முன்பு ஈடுபட்ட வீரரே தொடர்ந்தும் பணித்தலில் ஈடுபட வேண்டும்.

14.3.2 பணித்தலில் ஈடுபட்ட அணி தவறுசெய்யுமிடத்து அல்லது பந்தின் தொடர்ச்சியான பயணத்தில் எதிரணி வெற்றி பெறுமாயின், இரண்டாவதாக சொல்லப்பட்ட அணி சுழற்சியில் ஈடுபடும் (விதி 9.2.1) அத்துடன் முன்னணி வலது பக்கத்தினின்று பின்னணி வலது பக்கத்திற்கும் இடம் பெயரும் வீரரினால் பணித்தல் மேற்கொள்ளப்படும். (படம் 5)

14.4 பணித்தலுக்குரிய நிபந்தனைகள் (Conditions for Service)

14.4.1 பணிப்பவர் பணித்தல் பிரதேசத்திலேயே இருத்தல்வேண்டும் பணிக்கும் வேளையில் முடிவுக்கோட்டிலோ, அல்லது அதற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கப்பாலுள்ள சுயாதீன எல்லைப்பிரதேசத்திலோ நிலம்படாமல் (1.4.2) சுயமாக அசைந்தோ, பாய்ந்தோ பணித்தலில் ஈடுபடலாம். பந்து பணிக்கப்பட்ட மறுகணமே அவர் ஆடுகளத்தினுள்ளோ அல்லது சுயாதீன பிரதேசத்தினுள்ளோ நிலம்படலாம்.

14.4.2 பணித்தலுக்கென மத்தியஸ்தரால் விசில் ஊதப்பட்ட 5 செக்கன்களுள் பந்து பணிக்கப்படல் வேண்டும்.

14.4.3 மத்தியஸ்தரின் விசில் சத்தத்திற்கு முதல், பணிக்கப்படும் பணித்தல் ரத்துச் செய்யப்பட்டு மீண்டும் பணித்தலை மேற்கொள்ளும்படி பணிக்கப்படும்.

14.4.4 பணிக்கப்படும் பந்து தெளிவாகக் கையினால் அடிக்கப்படல் வேண்டும். பந்தை உயரப்போட்டோ, அல்லது கையிலிருந்து விடப்பட்ட பந்து நிலத்தை தொடு முன்னரோ பணித்தல் இடம்பெறல் வேண்டும்.

14.5 பணித்தல் நெறிவாழ்க்கைக்கான நிபந்தனைகள் (Conditions for Directing the Service)

பின்வரும் நடவடிக்கைகளை உறுதிப்படுத்திய பின்னர், 1ம் மத்தியஸ்தரால் பணித்தலுக்கான அங்கீகாரம் வழங்கப்படும்.

14.5.1 பணித்தல் அணிக்குரிய வீரர் பணித்தல் பிரதேசத்தினுள் நிற்றல்.

14.5.2 இரு அணிகளுமே ஆடுவதற்குத் தயார் நிலையில் நிற்றல்.

14.6 பணித்தலுக்கான முயற்சி (Attempt to Serve)

பணித்தலுக்கென மேலே போடப்பட்ட பந்தானது, பணிப்பவரின் உடலில் படுதல். அல்லது அப்பந்து நிலத்தில் படுமுன்னர் அவரால் பிடிக்கப்படல் தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில், பந்து நிலத்தில்படல் போன்றன பணித்தலுக்கான ஓர் எத்தனமாக கணக்கிடப்படும்.

14.6.2 பணித்தல் எத்தனம் ஒன்றில் பின்னர், மீண்டும் பணித்தலை மேற்கொள்ளும்படி மத்தியஸ்தரால் பணிக்கப்பட்ட 5 செக்கன்களுள், மீண்டும் பணித்தல் மேற்கொள்ளப்படும்.

14.6.3 இவை தவிர்ந்த, வேறு எந்தவொரு எத்தனமும் அங்கீகரிக்கப்பட மாட்டாது.

14.7 திரையிடல் (Sereening)

பணித்தலின் போது பந்து பயணம் செய்யும் சீரான பாதையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரணியினர் தெளிவாக எதிர் நோக்குவதை பணித்தலணியை சேர்ந்த வீரர் எவரும் திரையிட்டு மறைக்கலாகாது.

14.7.1 பணித்தலின் போது, அதே அணியைச் சேர்ந்த வீரர் ஒருவர் எதிர் அணியின் கவனத்தை திசை திருப்பும் நோக்குடன் கைகளை அசைத்தல், உடலைத் திருப்புதல், பாய்தல் போன்ற செய்கைகளில் ஈடுபடல் தனித்திரையிடல்(Individual Screening) ஆகக் கணிக்கபபடும்.

14.7.2 பணித்தலின் போது இருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் சேர்ந்து திரையிடுதல் மூலம் அவரது பணித்தலை மறைப்பாராயின் அது ஓர் குழுத் திரையிடல் ஆகும்.

14.8 பணித்தல் தவறுகள் (Faults in Serving)

அணியின் பணித்தல் வீரர், ஒருவர் பின்வருவனவற்றுள் எவையேனும் ஒரு தவறை புரியுமிடத்து, மத்தியஸ்தரால் பணித்தலில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். (எதிரணினர் பிழையான நிலையில் இருப்பினும் கூட)

14.8.1 அ) பணித்தல் ஒழுங்கு வரிசைக்கேற்ப பணிக்கத் தவறிய விடத்து (14.3)

ஆ) பணித்தலுக்குரிய நிபந்தனைகளுக்கேற்ப பணிக்கத் தவறிய விடத்து (14.4)

இ) பணித்தல் எத்தனத்துக்குரிய நிபந்தனைகளை நிறைவேற்றத் தவறிய விடத்து (14.6)

14.9 பணித்தலைத் தொடர்ந்து ஏற்படும் பணித்தல் தவறுகள் (Service Faults after the has been hit Ball)

(வீரர் ஒருவர் தவறான நிலை ஒன்றில் இடம் பெற்றிருக்கும் சந்தர்ப்பம் தவிர்ந்த ஏனைய வேளைகளில்) ஒழுங்காக பணிக்கப்பட்ட பந்தும் தவறெனக் கணிக்கப்படும். அவையாவன:-

14.9.1 பணித்தல் அணியை சேர்ந்த வீரர் ஒருவரிலோ, வெளிவாரிப் பொருட்களிலோ பந்து படுதல் அல்லது வலைக்கு மேலால் பந்து செல்ல வேண்டிய சீரான பாதையை கடக்கத் தவறுதல்

14.9.2 பந்து கடக்க வேண்டிய பாதையைக் கடக்காமல், வலை அன்ரனா போன்ற பொருட்களில் படல். (படம் 7)

14.9.3 எதிரணி வீரர் ஒருவரது கைகளிலும் தொடுகையுறாமல், எல்லைக் கோட்டிற்கு மேலால் ஆடுகளத்திற்கு வெளியே நிலம்படல்.

14.9.4 தனித்திரையிடல், குழுத்திரையிடல் என்பவற்றுக்கு மேலாக பணிக்கப்படல். (படம் 14.7)

UNIVERSITY OF PERADENIYA
8-11-1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதி 15 பந்துடனான தொடுகை Ball (Contact)

15.1 பந்து ஆட்டத்தில் ஈடுபடல் (Ball in Play)
பணித்தலுடன் ஆரம்பிக்கப்பட்ட ஆட்டமானது, மத்தியஸ்தரின் விசில் மூலம் ஆட்டம் இடைநிறுத்தப்படும் வரை பந்து ஆட்டத்தில் ஈடுபடுத்தப்படும்.

15.2 அணிக்குரிய தொடுகைகள் (Number of contacts per team)
ஏவ்வொரு அணியும் ஆகக்கூடிய 3 தொடுகைகளில் (தடுத்தல் தவிர்ந்த 19.4.1) வலைக்கு மேலால் எதிரணி நோக்கி பந்தை அனுப்பும் உரித்துடையதாகும்.

15.2.1 வீரர் ஒருவர் பந்தைத் தொடும் ஒவ்வொரு வேளையும், அது அவ் அணிக்குரிய ஒவ்வொரு தொடுகையாகவே கணிக்கப்படும்.

15.2.2 தடுப்பாளர் தவிர்ந்த வேறெந்த வீரரும் பந்தைத் தொடர்ச்சியாக இரண்டாம் முறையும் தொடுகையுறல் (19.4) ஆகாது

15.3 தொடுகையுறவுக்குரிய சிறப்பியல்புகள்
(Characteristies of the Contact)

1553.1 முழங்காலிலோ, முழங்காலின் மேல், உடலின் எப்பகுதியிலோ பந்து தொடுகையுறலாம்.

15.3.2 ஒரே நேரத்தில் பந்தின் தொடுகை உடலின் வேறுசில பாகங்களில் பட்டுத் தெறிப்பினும் அதுவும் சரியானதொரு தொடுகையாகும். ஆயினும் அணியின் முதலாவது தொடுகையின் போது (15.2) விரல்களால் ஆடுதல் தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் பந்து ஒரே சமயத்தில் உடலின் வேறுசில இடங்களிலும் தொடுகையுறலாம்.
(தொடுகை ஒரே செய்கையாய் இருத்தல் அவசியம்)

15.3.3 பந்து கைகளில் தங்கி நிற்காமல் தெளிவாக அடிக்கப்படல் வேண்டும். (தூக்குதல், தள்ளுதல், தூக்கிவாரிப் போடுதல் தவறாகும்)

15.3.4 பந்துடனான தொடுகையினை மத்தியஸ்தர் தீர்மானிக்கும் வேளையில். வீரர்களினது தொடுகைக்கு முன்னர் அல்லது அதனைத் தொடர்ந்து ஏற்படும்/ஏற்பட்ட சத்தங்களையோ கருத்தில் கொள்ளலாகாது.

15.4 ஒரே நேரத்தில் ஏற்படும் தொடுகையுறல்
(Simultaneous Contacts)
இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட வீரர்கள் ஒரே நேரத்தில் தவறுகள் எதுவுமின்றி பந்தினில் தொடுகையுறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15.4.1 இவ்வாறாக, வலைக்கு மேலாக வரும் பந்தை இரு எதிரணி வீரர்களும் ஒரே நேரத்தில் தொடுகையுற்ற போதிலும் பந்து ஆடத்தகுந்த நிலையில் காணப்படின், எந்த அணியின் ஆடுகளப் பக்கத்தில் பந்து காணப்படுகிறதோ, அவ்வணி மேலும் 3 தொடுகைகட்கு உரித்துடையதாகும்.

இவ்வாறு தொடுகையுற்ற பந்து ஆடுகளத்தின் வெளியே நிலம் படுமாயின், பந்து விழுந்து பக்கத்திற்கு எதிரணியே தவறிழைந்த அணியாக கருதப்படும்.

15.4.2 ஒரே அணியைச் சேர்ந்த இருவரின் ஒரே நேரத்திலான தொடுகை:

(அ) ஒரே அணியைச் சேர்ந்த இரு வீரர்களும் ஒரே நேரத்தில் பந்தில் தொடுகையுறின், அவ் அணிக்கு 2 தொடுகைகளாகவே கருதப்படும். (தடுத்தாடல் தவிர்த்த) இருவரில் ஒருவர் மட்டுமே பந்தில் தொடுகையுறின் அது ஒரு தொடுகையாகவே கருதப்படும்.

(ஆ) எதிரணி இருவர் ஒரே நேரத்தில் தொடுகையுற்ற பந்து வலையினுள் தங்கி விடும் சந்தர்ப்பங்களில், இருவருமே தவறிழைத்ததாகக் கருதி ஆட்டம் இடை நிறுத்தப்பட்டு மீண்டும் பணித்தல் மேற்கொள்ளப்படும்.

15.5 உடற் தொடுகை (Physical Contact)

15.5.1 தமது அணி வீரர் ஒருவர் தவறிழைக்க நேரும் சந்தர்ப்பத்தில் அதே அணியை சேர்ந்த வீரர் ஒருவர் அதை தடுக்கும் முகமாக அவரை பிடித்திழுத்தில், நிறுத்துதல் என்பன தவறாகாது. (உ-ம்: வலையில் தொடுகையுறல், எதிரணி ஆடுகளத்தினுள் ஊடுருவல்) பந்தைக் கையாளும் நோக்குடன் தமதணி வீரர் ஒருவரில் முட்டி மோதுதல் தவறன்று.

15.5.2 பந்தைக்கையாளுவதற்காக தமதணி வீரரினதோ அல்லது வெளிவாரிப் பொருள்களினதோ ஆதாரங்களைப் பெறலாகாது.

15.6 பந்துத் தொடுகையுறலின் தவறுகள்: (Faults in Ball Contact)

15.6.1 வீரர் ஒருவர் பந்தை முறையாக கையாளாதவிடத்து அல்லது அவரது கைகளில் பந்து கணப் பொழுதேனும் தங்கிச் செல்லும் பட்சத்தில் அவர் ''தங்கி வந்த பந்து'' (Held Ball) *(15.3.3)* என்ற குற்றமிழைத்தவர் ஆவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15.6.2 வீரர் ஒருவர், வேறெவரினதும் கைகளில் பந்து படுமுன்ப தாக ஏற்கெனவே தொடுகையுற்ற பந்தைத் தொடர்ச்சியாக இரண்டாம் முறையும் தொடுகையுறுவாராகில் அவர் ''இரட்டைத் தொடுகை'' (Double Contact) எனும் தவறிழைத்த தாகக் கருதப்படுவர். (விதி 15.2.2, 15.3.2 நீங்கலாக)

15.6.3 முழங்காலின் கீழ் உடலின் எப்பாகத்தாலும் பந்தைத் தொடுகையுறின் அவர் ''சட்டபூர்வமற்ற தொடுகை'' (illegal Contact) எனும் குற்றத்திற்காளாகுவார்.

15.6.4 வலையின் மேலாக ஒரே நேரத்தில் இரு எதிரணி வீரர்களும் பந்தைப் பிடித்து வைத்திருப்பார்களாயின் இருவரும் இரட்டை தவறு ஒன்றை (Double Fault) இழைத்தவர்களாக கருதப்பட்டு விதி 20.2.3 இணங்க ஆட்டத்தை தொடரும் படி கேட்கப்படும்.

15.6.5 ஓர் அணி 4வது தடவையாகவும் பந்தில் தொடுகையுறுமாயின் அது, 4 தொடுகை என்ற (Four Contacts) குற்றம் இழைத்தது ஆகும். (15.2)

விதி 16 வலைக்கண்மையில் ஆடப்படும் பந்து
Ball at the Net

16.1 பந்து வலையை கடத்தல் (Ball Crossing the Net)

16.1.1 எதிரணி நோக்கி அனுப்பப்பட்ட பந்தானது அது கடத்தப்படவேண்டிய வலையின் நிலைக்குத்தான பாதையை கடத்தல் வேண்டும்.

16.1.2 இந்தக்கடத்தப்படவேண்டிய பகுதியானது வலையினது மேல் பகுதி ஓரங்களும் பக்க அடையாளங்களில் காணப்படும் அன்ரனாக்கள் கற்பனையாக நீட்டப்பட்ட சுயமான பிரதேசமுமாகும்.

16.2 வலையில் தொடுகையுறும் பந்து (Ball Touching the Net)

16.2.1 பணித்தல் தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் உரிய பிரதேசத்தினூடாக எதிரணி நோக்கி செலுத்தப்படும் பந்து வலையினில் தொடுகையுறலாம்.

16.3 வலையினுள் தொடுகையுற்ற பந்து (Ball in the Net)

16.3.1 (பணிக்கப்பட்ட) பணித்தல் தவிர்ந்த, வலையினுள் அனுப்பப்பட்ட ஓர் பந்து, நிலத்தில் தொடுகையுறுமுன்னர் அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பந்து பயணம் செய்யவேண்டிய பாதை
(Correct Ball Crossing)

(படம் 7)



தவறான பாதை

சரியான பாதை

விதி- 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணியினால் 4வது முறையாக தொடுகையுறாமலும், வரும் பந்து ஆடத்தகுந்த ஓர் பந்தாகக் கருதப்படும்.

16,3.2 செலுத்தப்பட்ட பந்து வலைக்கண்ணிகளை கிழித்தல், அல்லது வலையை தாழ்த்துதல் போன்ற சந்தர்ப்பங்களில் ஆட்டம் இடை நிறுத்தப்பட்டு மீண்டும் தொடரப்படும்.

16.4 வலையின் நிலைக்குத்தான தளத்தை பந்து கடக்கையில் ஏற்படும் தவறு.

(Faults when the Ball Crosses the Vertical Plane of the Net)

எதிரணி நோக்கி அனுப்பப்படும் பந்து வெளியேறிய பந்தாகக்கணிக்கப்படும் சந்தர்ப்பங்கள்:-

16.4.1 மைதானத்துக்கப்பால் காணப்படும் வெளியாளொருவர், கூரை அல்லது வலைக்கு வெளிப்புறமாயுள்ள (அன்ரனா, கயிறு, கம்பம் போன்ற) பொருட்களில் தொடுகையுறல்.

16.4.2 கடத்தப்பட வேண்டிய நிலைக்குத்தான பாதைக்கு வெளிப்புறமாக பந்து முழுவதுமாக கடத்தல்.

16.4.3 வலையின் கீழ்ப் பாகத்திலுள்ள நிலைக்குத்தான பாதையை பந்து முழுமையாக கடத்தல்.

விதி 17 எதிரணி ஆடுகளம், மற்றும் ஆடுகளப் பிரதேசத்தினுள் ஊடுருவல் (PENETRATION INTO THE OPPONENT'S SPACE AND COURT)

பின்வரும் சந்தர்ப்பங்கள் தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் ஒவ்வொரு அணியும் தத்தமது ஆடுகளத்தினுள்ளும் அதனுடன் தொடர்பான பிரதேசத்தினுள்ளும் ஆடுதல் வேண்டும்.

17.1 நிலைக்குத்தாக அமைந்துள்ள வலையின் பரப்பை கைகள் தாண்டுதல் (Hands crossing the vertical plane of the net)

17.1.1 தடுத்தாடுகையின் போது மட்டும், வலைக்கு மேலால் எதிரணியினரின் ஆடுகளத்திலுள்ள பந்தில் தொடுகையுறலாம். ஆயினும் எதிரணியினர் பந்தை ஆடும்போதோ, ஆடுவதற்கு முன்னரோ இவ்வாறு தலையிடுதலாகாது.

17.1.2 தனது எல்லைப்பிரதேசத்தினுள் வைத்து அறைந்த அறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைத் தொடர்ந்து, அவரது கைகள் எதிரணி ஆடுகளத்தினுள் செல்ல அனுமதிக்கப்படும்.

17.2 வலையுடனான தொடுகை (Contact with the net)

17.2.1 வலை மற்றும் அத்துடன் இணைக்கப்பட்டுள்ள அன்ரனாக்கள் போன்றவற்றுடன் தொடுகையுறல் தடைசெய்யப்பட்டுள்ளது.

17.2.2 பந்தினை ஆடி முடித்த பின்னர், வீரர் ஒருவர், ஆட்டத்தில் ஓர் தாக்கத்தை ஏற்படுத்தாத வகையில் வலைக்கயிறு, கம்பம் போன்றவற்றிலோ அல்லது வலைக்கப்பாலுள்ள வெளிவாரிப் பொருட்களிலோ தொடுகையுறலாம்.

17.2.3 விசையுடன் வலையினுள் செலுத்தப்பட்ட பந்தொன்றினால் வலை, எதிரணி வீரர் ஒருவரில் தொடுகையுறுமாயின் அது ஒரு தவறன்று.

17.1 வலையின் கீழான ஊடுருவல் (Penetration under the net)

17.3.1 எதிரணியினரில் தொடுகையுறாமலோ, அல்லது அவரது ஆட்டத்திற்கு இடையூறின்றியோ, வீரரொருவரின் உடலின் எந்த ஒரு பகுதியும் மட்டும் வலையின் கீழாக எதிரணி ஆடுகளத்தினுள் ஊடுருவுதல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

17.3.2 17.4.2 இல் கூறப்பட்டவை தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் எதிரணியினரின் ஆடுகளத்தினுள் ஊடுருவல் தடை செய்யப்பட்டுள்ளது.

17.4 எதிரணியினரின் ஆடுகளத்தினுள் தொடுகையுறல். (Contact with the Opponent's Court)

17.4.1 ஆட்ட வேளையின்போது எமது கால்/கால்கள் தவிர்ந்த உடலின் ஏனைய பகுதிகள் மத்திய கோட்டைத்தாண்டி எதிரணியினது ஆடுகளத்தினுள் நிலம்படல் தடை செய்யப்பட்டுள்ளது.

17.4.2 எதிரணியினரின் ஆடுகளத்தினுள் எமது ஒரு காலோ கால்களோ தொடுகையுறல் அனுமதிக்கப்படும். ஆனால் அவ்வாறு தொடுகையுற்ற கால்/கால்களின் ஒரு பகுதியேனும் மத்திய கோட்டுடன் அல்லது கோட்டின் மேல் அல்லது கோட்டுடன் தொடுகையுற்றிருத்தல் வேண்டும்.

17.4.3 எதிரணியினரது ஆட்டத்திற்குத் தடங்கல் அல்லது தொந்தரவு இன்றி அவர்களது ஆடுகளத்தைச் சுற்றி உள்ள சுயாதீன எல்லைப் பிரதேசத்தினுள் தொடுகையுறலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17.4.4 பந்தினை ... பயணம் முடிவுற்றதைக் காட்டும் நடுவரின் விசில் சத்தத்தின் பின்னர், வீரர் ஒருவர் எதிர் அணியினரின் ஆடுகளத்தினுள் பிரவேசிக்கலாம்.



17.5 ஊடுருவல் தவறுகள் (Penetration Faults)
வீரர் ஒருவர் கீழ்க்காணும் ஏதாவது ஒன்றினைச் செய்யும் சந்தர்ப்பங்கள்:-

17.5.1 எதிரணியினரின் அறைதலுக்கு முன்பதாகவோ அல்லது அறைதலின் போதோ அவர்களது எல்லைப் பிரதேசத்தினுள் உள்ள பந்தினைத் தொடுகின்றமை.

17.5.2 எதிரணி எல்லைப் பிரதேசத்தினுள் ஊடுருவி வேறு தொடுகைகளில் ஈடுபடுதல்.

17.5.3 வலையின் கீழாக எதிரணியினரின் பிரதேசத்தினுள் ஊடறுத்து அவர்களைத் தொடல், அல்லது சந்தர்ப்பத்தில் ஆட்டத்திற்கு இடையூறு விளைவித்தல்.

17.5.4 பந்து ஆட்டத்தில் ஈடுபட்டிருக்கும் வேளையில் எதிரணியினரின் ஆடுகளத்தினுள் பிரவேசித்தல். (17.4)

17.5.5 தனது நடவடிக்கைகளின் மூலம் வலை அல்லது அன்ரனாக்களில் தொடுகையுறுதல்.

விதி 18 ஓங்கி அறைதல் (Attack Hit)

18.1 வரைவிலக்கணம் (Definition)

18.1.1 எதிரணியினரின் ஆடுகளத்தை நோக்கி வலையின் மேலால் வீரர் ஒருவர் (ஓங்கியறைந்து) பந்தை அனுப்பும் ஒரு செயல்.

18.1.2 வலைக்கு நேர்மேலாக உள்ள சமதளத்தைப் பந்து முற்றாகக் கடக்கும் வேளையிலோ அல்லது தடுப்பாளர் ஒருவரால் பந்து தொடப்படும் வேளையிலோ ஓங்கியறைதல் முடிவுற்றதாகக் கருதப்படும்.

18.2 முன்னணி வீரரின் ஓங்கியறைதல்
(Front line Player's Attack - Hit)
தமது ஆடுகளத்தின் எல்லையினுள் பந்தின் ஒரு பகுதியோ அல்லது முழுவதுமோ இருக்கும் சந்தர்ப்பத்தில் முன்னணி வீரர்கள் ஆகிய எல்லையைத் தின்று எந்த உயரத்திலும் விரும்பியவாறு ஓங்கியறையலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓங்கி அறைதல் (Attack Hit)

(படம் 8)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17.4.4 பந்தினுடைய தொடர்ச்சியான பயணம் முடிவுற்றதைக் காட்டும் மத்தியஸ்தரின் விசில் சத்தத்தின் பின்னர், வீரர் ஒருவர் எதிர் அணியினரின் ஆடுகளத்தினுள் பிரவேசிக்கலாம்.

17.5 ஊடுருவல் தவறுகள் (Penetration Faults)

வீரர் ஒருவர் ஊடுருவல் தவறு ஒன்றினை புரியும் சந்தர்ப்பங்கள்:-

17.5.1 எதிரணியினரின் அறைதலுக்கு முன்பதாகவோ அல்லது அறைதலின் போதோ அவர்களது எல்லைப் பிரதேசத்தினுள் உள்ள பந்தில் தொடுகையுறுதல்.

17.5.2 எதிரணி எல்லைப் பிரதேசத்தினுள் பந்துடனான வேறு தொடுகைகளில் ஈடுபடுதல்.

17.5.3 வலையின் கீழாக எதிரணியினரின் பிரதேசத்தினுள் ஊடறுத்து அவர்களைத் தொடல், தொந்தரவு செய்தல், ஆட்டத்திற்கு இடையூறு விளைவித்தல்

17.5.4 பந்து ஆட்டத்தில் ஈடுபட்டிருக்கும் வேளைகளில் எதிரணியினரின் ஆடுகளத்தினுள் பிரவேசித்தல். (17.4)

17.5.5 தனது நடவடிக்கையின் மூலம் வலை அல்லது அன்ரனாக்களில் தொடுகையுறல்.

விதி 18 ஓங்கி அறைதல் (Attack Hit)

18.1 வரைவிலக்கணம் (Definit on)

18.1.1 எதிரணியினரின் ஆடுகளத்தை நோக்கி வலையின் மேலால் வீரர் ஒருவர் (ஓங்கியறைந்து) பந்தை அனுப்பும் ஒரு செயல்

18.1.2 வலைக்கு நிலைக்குத்தாக உள்ள சமதளத்தைப் பந்து முற்றாக கடக்கும் வேளையிலோ அல்லது தடுப்பாளர் ஒருவரில் பந்து தொடுகையுறும்போதோ ஓங்கி அறையும் இச்செயல் முடிவுற்றதாகக் க்ருதப்படும்.

18.2 முன்னணி வீரரின் ஓங்கியறைதல்
(Front line Player's Attack - Hit)

தமது ஆடுகளத்தின் எல்லையினுள் பந்தின் ஒரு பகுதியோ அல்லது முழுவதுமோ இருக்கும் சந்தர்ப்பத்தில் முன்னணி வீரர்கள் தமது எல்லையுள் நின்று எந்த உயரத்திலும் விரும்பியவாறு ஓங்கியறையலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18.3 பின்னணி வீரரின் ஓங்கியறைதல்
(Back line Player's Attack - Hit)

18.3.1 தமது கால்கள் தாக்கற் கோடுகளில் படுதல் அல்லது தாண்டுதல் தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் பின்னணி வீரர்கள் தாம் விரும்பிய விதத்தில், விரும்பிய உயரத்தில் வைத்து பந்தை அறையலாம். அறைதலைத் தொடர்ந்து அவர் முன்னணிப் பிரதேசத்தினுள் நிலம் படலாம். (படம்-8)

18.3.2 மேற்பக்க வலையின் கிடைத்தளத்திலும் குறைவான உயரத்தில் வரும் பந்தை, பின்னணி வீரர் ஒருவர் முன்னணி பிரதேசத்தினுள் வைத்து ஓங்கி அறையலாம்.

18.4 ஓங்கி அறைதலின் தவறுகள் (Attack - Hit Faults)
ஓங்கி அறைதலின் தவறிழைக்கும் சந்தர்ப்பங்கள்:

18.4.1 எதிரணியினரின் ஆடுகளத்தினுள் உள்ள பந்தை அறைதல்

18.4.2 அவரால் அனுப்பப்பட்ட பந்து வெளிவாரிப் பொருட்களில் படல். அல்லது, எதிரணி வீரரெவரதும் கைகளில் படாமல் எதிரணி ஆடுகளத்தை விட்டு பந்து முற்றாக வெளியே நிலம் படல்.

18.4.3 வலையின் உயரத்திலும் பார்க்க மேலாக வரும் பந்தை பின்னணி வீரரொருவர் முன்னணிப் பிரதேசத்தினுள் வைத்து அறைதல் (படம் 8)
(விதி 18·1.2, 18.3.1 17.5.1)

18.4.4 எதிரணியால் பணிக்கப்பட்ட பந்தின் ஒரு பகுதியேனும் வலையைத் தாண்டு முன்னர் ஓங்கி அறைதல்.

விதி (19) தடுத்தாடுதல் (Block)

19.1 வரைவிலக்கணம் (Definiton)
எதிரணி ஆடுகளத்தினின்று வரும் பந்தை வலைக்கண்மையில் வைத்து முன்னணி வீரர்களால் (தடுப்பாளர்கள்) தடுக்கும் ஓர் செய்கையே தடுத்தாடல் எனப்படும்.
இச்செய்கை பின்வருமாறு கருத்தில் கொள்ளப்படும்.

19.1.1 தடுத்தாடுதலுக்கான எத்தனம் (An attempt to Block)
வீரரொருவர் வலைக்கண்மையில் நின்று கொண்டு பந்தில் தொடுகையுறாமல் தனது கையினையோ அல்லது கைகளையோ வலையின் மேலாக நீட்டுதல் தடுத்தாடலுக்குரிய ஓர் எத்தனமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19.1.2 தடுந்தாடல் ஒன்று (A Block)

தடுத்தாடல் என்பது பந்து இன்னுமொரு வீரரில் படுதலாகும். வலையின் மேல் ஓரத்திலும் வீரரொருவரிலும் ஒரே நேரத்தில் பந்து தொடுகையுறல் அல்லது வலையில் பட்டுத் தெறித்து பந்து வீரரொருவரில் படுதல் என்பனவும் தடுத்தாளலாகவே கருதப்படும். (படம் 8 ஆ)

19.1.3 கூட்டுத் தடுப்பு (Collective Block)

2 அல்லது 3 முன்னணி வீரர்கள் அருகருகே இருந்த வண்ணம் மேற்கொள்ளப்படும் ஓர் தடுப்பு முறையாகும்.

19.2 தடுந்தாடலின்போது ஏற்படும் தொடுகை (Blocking Contact)

19.2.1 ஒன்றோ அதற்கு மேற்பட்ட தடுப்பாளர்களால் தொடர்ச்சியான தொடுகைகள் நேரலாம். ஆனால் அத்தொடுகையானது ஒரே செய்கையினாலானதாயிருத்தல் வேண்டும்.

19.2.2 தடுத்தலின்போது தடுப்பாளர்களின் கைகளில்பட்ட பின்னர் தலை அல்லது முழங்காலின் மேலுள்ள வேறொரு உறுப்பினில் தொடுகையுறலாம்.

19.3 எதிரணியின் ஆடு பிரதேசத்திலுள்ள பந்தைத் தடுத்தல் (Blocking within the opponent's space)

19.3.1 எதிரணியினரின் ஆட்டத்திற்கு இடையூறு ஏற்படாவண்ணம் தடுப்பாளர்கள் ஒருவரோ மேற்பட்டவரோ வலையின் மேலால் தடுத்தலிலோ தடுத்தலுக்குரிய முயற்சிகளிலோ ஈடுபடலாம்.

19.3.2 எதிரணியினரின் அறைதலின் பின்னரேயே தடுப்பாளர் ஒருவர் பந்தைத் தடுத்தாள அனுமதிக்கப்படுவார்.

19.4 தடுத்தலின் பின்னர் இடம்பெறும் தொடுகை (Contact Subsequent to the Block)

19.4.1 தடுத்தாடல் ஒரு தொடுகையாகக் கணக்கிடப்படமாட்டாது. தடுத்தாடலைத் தொடர்ந்து ஓர் அணி பந்தை எதிரணியின் ஆடுகளத்தை நோக்கிப் பந்தைத் திருப்பி அனுப்ப மேலும் 3 தொடுகைகட்கு உரித்துடையது.

19.4.2 தடுத்தாடலைத் தொடர்ந்து தடுப்பிலீடுபட்டவர் மீண்டும் பந்தில் தொடுகையுறலாம்.

19.4.3 ஒற்றைத் தடுப்பு அல்லது கூட்டுத்தடுப்பின் பின் கைகளில் பட்டு வரும் பந்தை சற்று தூரத்தில் நிற்கும் இன்னுமொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரர் தனிப்பட்ட முறையில் தடுக்க முயற்சிப்பின், அது அவ்வணிக்குரிய முதலாவது தொடுகையாகும்.

19.5 தடுத்தலின் தவறுகள் (Faults in Blocking)

தடுப்பாளர் ஒருவர் பின்வரும் சந்தர்ப்பங்களில் தவறிழைத்தவராவர்:-

19.5.1 அன்னராக்களுக்கு வெளியே நின்று தடுத்தலும் எதிரணி ஆடு பிரதேசத்தினிலுள்ள பந்தில் தொடுகையுறலும்.

19.5.2 தனது நடவடிக்கையின் போதோ அதன் முன்னரோ எதிரணி ஆடு பிரதேசத்தினிலுள்ள வீரரின் ஆட்டத்தில் தலையிடல் (17.1.1)

19.5.3 அணியின் பின்னணி வீரரொருவர் தடுத்தாடலிலோ அல்லது அதற்குடந்தையாகவோ இருத்தல்.

19.5.4 எதிரணிவீரரொருவரின் பணித்தலைத் தடுத்தல் (வலையின் உயரத்திலும் மேலாகவரும் பந்தை முன்னணிப்பிரதேசத்தில் வைத்து தடுக்கவோ அறையவோ முடியாது)

விதி 20 தவறுகளும் தண்டனைகளும் Faults and Sanctions

போட்டியாளர் ஒருவர் ஆட்டத்திற்கு விரோதமான அல்லது தவறான நடத்தை காரணமான தனது செய்கையால் தவறிழைப்பாராயின் முதலாவது மத்தியஸ்தர் கீழ்க்காணும் விதிமுறைக்கிணங்க அவருக்குப் பொருத்தமான நடவடிக்கைகளை தீர்மானிப்பார்.

20.1 ஆட்டத்தில் ஏற்படும் தவறுகள் (Faults in Game)

தனிப்பட்ட/அணியினது நடவடிக்கைகள் சட்ட விதிகட்கு முரணாக நடைபெறும் பட்சத்தில் ஆட்டத்தவறுகள் ஏற்படுகின்றன. அவை பின்வருமாறு அமையும்:

20.1.1 எதிரணி நோக்கி பந்தை முறையாக வலைக்கு மேலால் அனுப்பத் தவறுதல்.

20.1.2 தவறு என விதிகளில் தெளிவாகக் காணப்பட்ட நடைமுறைகளை மேற்கொள்ளல்.

20.2 தவறுக்கான விளைவுகள் (Conse quences of a Fault)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20.2.1 எந்தவொரு தவறுக்கும் தண்டனை எப்போதும் உண்டு.

20.2.2 இவ்விளையாட்டைப் பொறுத்த மட்டில் தண்டனை எனும் போது ஒரு அணி பிழைவிடும் சந்தர்ப்பங்களில் அதன் எதிரணி ஒரு புள்ளியையோ அன்றேல் பக்க மாற்றத்தினையோ பெறும். (14.3.2)

20.2.3 இரு எதிரணியினரும் ஒரே நேரத்தில் தவறு செய்யுமிடத்து தண்டனையின்றி ஆட்டம் மீண்டும் ஆரம்பிக்கப்படும்.

20.3 முறைகேடான நடத்தை (Misconduct)
மத்தியஸ்தர்கள், எதிரணியினர், பார்வையாளர்கள், தமதணியினர் என்போர் மட்டில் மதிப்பு மரியாதையுடன் நடந்து கொள்ளல் வேண்டும். தவறுமிடத்து, தவறுகளின் தன்மையைப் பொறுத்து பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

20.3.1 விளையாட்டு வீரனுக்கு பொருத்தமற்ற நடத்தை (Unsportsman-like Conduct)
போட்டியாளர் ஒருவர் ஆட்டத்தைத் தாமதப்படுத்தல், தடை செய்யப்பட்டுள்ள வேளைகளில் கூட பயிற்சி வழங்குதல், கூச்சலிடல், எதிரணியினரை பயமுறுத்தல் அல்லது வீரர்கள் மத்தியஸ்தர்கள், பார்வையாளர் ஆகியோருடன் வாக்கு வாதத்திலீடுபடல் என்பனவாகும்.

20.3.2 மூர்க்கத்தனமான நடத்தை (Rude Conduct)
போட்டியாளர் ஒருவர் நீதி நியாயங்கட்கு கட்டுப்படாமலும் நன்நடத்தைகட்கு எதிராகவும் நடத்தல் அல்லது தனது செய்கையால் அல்லது முகபாவத்தினால் மத்தியஸ்தர்கள் எதிரணியினர் பார்வையாளர்களை அவமதித்தல்.

20.3.3 கோபமூட்டும் நடத்தை (Offensive Conduct)
கோபமூட்டும் நடத்தை அல்லது எத்தனம் என்று சொல்லப்படுவது யாதெனில் மத்தியஸ்தர்கள் எதிரணியினர் பார்வையாளர்கள் மரியாதைக் குறைவான வார்த்தைகளால் திட்டுதல் அல்லது சைகை மூலம் காட்டுதல்.

20.3.4 வன் செயலீடுபாடு (Aggression)
மத்தியஸ்தர்கள் எதிரணியினர் பார்வையாளர்களை நேரடியாகவே தாக்குதல் அல்லது தாக்குதலுக்கு உடந்தையாயிருத்தல்.

20.4 முறைகேடான நடத்தைக்கான நடவடிக்கைகள் (Sanctions for Misconduct)
1வது மத்தியஸ்தரின் தீர்ப்பின் பேரில் முறையற்ற நடத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின் தன்மையைக் கொண்டு பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

20.4.1 விளையாட்டு வீரனுக்குரிய தன்மையற்ற நடத்தைகட்கு எச்சரிக்கை (Warning) வழங்கப்படும். இதற்குத் தண்டனைகள் வழங்கப்படாவிடினும் அதே சுற்றில் இது போன்ற தவறை மேலுமொருமுறை செய்யாமல் எச்சரிக்கையாக அமையும்.

20.4.2 வன் செயலீடுபாட்டுக்கென தண்டனை வழங்கப்படும். இத்தகைய நடத்தையைப் புரிந்தவர் அல்லது புரிந்த அணியின் பெயர் புள்ளிப் பதிவேட்டில் பதியப்படுவதுடன் எதிரணிக்கு புள்ளி அல்லது பக்கமாற்றம் வழங்கப்படும்.

20.4.3 கோபமூட்டும் நடத்தைகட்காக குறிப்பிட்ட அச்சுற்றில் அவர் ஆடத் தகுதியற்றவராக கருதப்பட்டு அச்சுற்றிலின்று வெளியேற்றப்படுவார்.

வன்செயலீடுபாட்டில் இறங்கிய நடவடிக்கைக்காக அவர் உடனடியாகவே ஆடுகளத்தை விட்டே வெளியேற்றப்படுவார். அதாவது நடைபெறும் சுற்றிலோ மீதமுள்ள சுற்றுகளிலோ ஆட முடியாததுடன் ஆடுகளத்தை விட்டே வெளியேற்றப்படுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையற்ற நடத்தைக்குரிய தண்டனை அட்டவணை
(SANCTION SCALE FOR MISCONDUCT)

முறையற்ற நடத்தைக்குரிய தண்டனை	எத்தனம்	தண்டனை	காட்டவேண்டிய அட்டைகள்	தொடர் நடவடிக்கை
விளையாட்டு வீரர்களுக்குரிய தன்மைகளற்ற நடத்தை	1வது	எச்சரிக்கை	மஞ்சள்	மீண்டும் செய்யாமல் தவிர்த்தல்
	2வது	தண்டனை	சிவப்பு	எதிரணியினர்க்கு 1 புள்ளி/பணித்தல் கிடைக்கும்
மூர்க்கத்தனமான நடத்தை	1வது	தண்டனை	சிவப்பு	எதிரணியினர்க்கு 1 புள்ளி/பணித்தல் கிடைக்கும்
	2வது	வெளியேற்றல்	இரண்டும் சேர்த்து	குறிப்பிட்ட சுற்றில் ஆடாமல் ஆடுகளத்தை வெளியேற்றல்
கோபமூட்டும் நடத்தை	1வது	வெளியேற்றல்	இரண்டும் சேர்த்து	குறிப்பிட்ட சுற்றில் ஆடாமல் ஆடுகளத்தைவிட்டு வெளியேற்றல்
	2வது	விலக்குதல்	இரண்டும் வெவ்வேறாக	முழு ஆட்டத்திற்கும் ஆடாமல் ஆடுகளத்தினின்று விலக்கப்படல்
ஆக்கிரமிப்புக்குரிய நடத்தை	1வது	விலக்குதல்	இரண்டும் வெவ்வேறாக	முழு ஆட்டத்திற்கும் ஆடாமல் ஆடுகளத்தினின்று விலக்கப்படல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20.5 நடவடிக்கை அட்டவணை (Sanction Scale) படம் 9

20.5.1 முறைகேடான நடத்தைக்குரிய அட்டவணைக் கிணங்க விரரொருவர் ஒரே தவறினை மீண்டும் புரிவாராயின் அவ்வட்டவணையில் காட்டப்பட்டுள்ளபடி (படம் 9) தண்டிக்கப் படுவார்.

20.5.2 வன்செயவிடுபாட்டுக்கென ஆடும் தன்மையை இழக்கும் வீரர் சார்பாக, முன்னர் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் எவையேனும் கருத்தில் கொள்ளப்பட மாட்டாது.

20.6 ஆட்டத்திற்கு முன்னும் ஆட்டத்தின் கடைசியிலும் இடம்பெறும் முறைகேடான நடத்தைகள்
(Misconduct before and between set)
சுற்று ஒன்றின் தொடக்கத்திலோ அல்லது சுற்றின் இடையிலோ ஏற்படும் முறைகேடான நடத்தைகள் விதி 20.4 இல் கூறப்பட்டபடி மேற்கொள்ளப்படுவதுடன் அவை அடுத்த சுற்றிலும் நடைமுறையில் இருக்கும்.

மத்தியஸ்தர்களும் மத்தியஸ்தமும்
REFEREES AND REFEREEING

விதி 21 மத்தியஸ்தர் குழுக்கள், நடைமுறைகள், உத்தியோகபூர்வ கை சைகைகள் (Refereeing Corps, Procedures, and Official Hand Signals)

21.1 மத்தியஸ்தர் குழுக்களின் தொகுப்பு (படம் 3)
(Composition of the Refereeing Corps)

1வது மத்தியஸ்தர் — ஒருவர்
2வது மத்தியஸ்தர் — ஒருவர்
புள்ளிப் பதிவாளர் — ஒருவர்
சுவட்டுக் காவலர் — (இருவர்) நால்வர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமிக்ஞைகளுக்குரிய சம்பவங்கள்	நிறைவேற்றப்படவேண்டிய கைச்சமிக்ஞைகள் 1ம் மத்தியஸ்தர் F 2ம் மத்தியஸ்தர் S

ஆடத்தகுந்த பந்து அல்லது பணித்தலுக்குரிய அனுமதி **F**

Play Ball or Permission for Service
விதி 21.2.1

கையை உயர்த்திப் பணிக்கவிருக்கும் அணியை நோக்கிச் சரித்தல்

அணியொன்று புள்ளியை பெறலும்/அல்லது பணித்தலைப் பெறலும் **F** **S**

Team winning a Point and or the Service
விதி 21.2
21.3

பணிக்க வேண்டிய குழுவை நோக்கிக் கையைப் பக்கவாட்டில் நீட்டுதல்

ஆடுகள மாற்றம் **F** **S**

Change Court
விதி 12.2

முன்னங்கைகளை எமது உடலின் முன்னும் பின்னுமாக மாற்றி மாற்றிச் சுழற்றுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர இடைவேளை

Time out
விதி 10.1
10.3.1



நிலைக்குத்தாக வைக்கப்பட்ட விரல்களின் மேல் மறுகையின் உள்ளங்கையை வைப்பதன் மூலம் T என்ற வடிவமைப்பைச் செய்து காட்டுதல்

பிரதியீடு

Substitution
விதி 10.3.1
11.2.1
11.3.1

முன்னங்கைகள் ஒன்றையொன்று ஓர் வட்டமான ஒழுங்கில் சுற்றுவதைப்போன்ற அசைவை ஏற்படுத்துதல்

எச்சரிக்கை அல்லது தண்டனை

Warnning or Penalty
விதி 20.4.1 அல்லது
20.4.2

எச்சரிக்கைக்கென மஞ்சல் அட்டையையும் தண்டனைக்கென சிவப்பு அட்டையையும் காட்டுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியேற்றம்

Expultion
விதி 20.4.3

வெளியேற்றப்படலுக்கென இரு அட்டைகளையும் ஒருமித்துக் காட்டுதல்

தகமையிழத்தல்

Disqualification
விதி 20.4.3

முழுஆட்டத்திற்குமே தகைமையற்ற தன்மையைக் காட்ட இரு அட்டைகளையும் வெவ்வேறாக காட்டுதல்

ஆட்டத்தின் சுற்று ஒன்றிற்கான முடிவு

End of set for Match
விதி 13.2
13.3



இரு முன் கைகளையும் திறந்த நிலையில் மார்புக்குக்குறுக்காக வைத்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணிக்கும் வேளையில்
பந்து கையினின்று விடு
விலக்கப்படாமை

Ball not Released
at the time of service
விதி 14.4.4
14.8.2



மேற்பார்த்த நிலை
யில் நீட்டப்பட்ட
உள்ளங்கையை சற்று
மேலே உயர்த்துதல்

பணித்தலில் தாமதம்

Delay in Service
விதி 14.4.2
14.6.2

5 விரல்களையும் விரித்த
நிலையில் உயர்த்துதல்

தடுத்தற் தவறுகள்
திரையிடல்

Block Fault
Screening
விதி 19.5.3 அல்லது
14.7



உள்ளங்கைகள்
முன்பார்த்த நிலை
யில் இரு கைகளை
யும் நிலைக்குத்
தாக உயர்த்துதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைத்தவறு அல்லது சுழற்சித்தவறு

Position fault
or
Rotation fault
விதி 9.3 அல்லது
9.5

சுவட்டு விரலால் வட்டஒழுங்கைசவில் சுற்றுவதுடன் தவறிழைத்தஅணியை மறுகையால் காட்டுதல்

உள்விழுந்த பந்து

Ball in
விதி 21.2
21.3

கையை நீட்டி சுட்டு விரலினால் நிலத்தைச் சுட்டிக்காட்டுதல்

வெளியே விழுந்த பந்து

Ball out
விதி 14.9.3
18.4.2

மேற்பார்த்த நிலை முன் நீட்டப்பட்ட முன்கைகளை நிலைக்குத்தாக உயர்த்திக் காட்டுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கிவந்த பந்து

Held Ball

விதி 15.6.1

உள்ளங்கை மேற்பார்த்த நிலையில் முன்னங்கையை மேலே உயர்த்துதல்.

இரட்டைத்தொடுகை

Double Contact

விதி 15.2.2
15.6.2

இருவிரல்களை விரிந்த நிலையில் மேலே தூக்குதல்.

நான்கு தொடுகைகள்

Four Contact

விதி 15.6.5

நான்கு விரல்களை உயர்த்திக் காட்டுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டவிரோதமான
தொடுகை

Illegal contact
விதி 15.6,3

UNIVERSITY OF PERADENIYA
8-11-1995
LIBRARY

பணிக்கப்படும் பந்து அல்லது வீரரொருவர் வலையினில் தொடுகையுறல்

Net contacted by a ball from a service or a Player
விதி 14.9.2 அல்லது 17.2.1 17.5.5

தவறுகளின் இயல்பினுக்கேற்ப வலையின் உச்சியையோ அல்லது வலையையோ தொட்டுக் காட்டுதல்

எதிரணி ஆடுபிரதேசத்தினுள் ஊடுருவல்

Penetration into the opponents space
விதி 17.5
18.4.1

உள்ளங்கை நிலத்தைப் பார்த்தவண்ணம் வலையின் உச்சிக்கு நேராக ஒரு கையை நீட்டுவதோடுதவறிழைத்தஅணியின் பக்கம் மறுகையினை நீட்டுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னணி வீரர் மேற் கொண்ட தடைசெய்யப் பட்ட அறைதல்

Forbidden Attack hit by back line player
விதி *18.4.3*



உயர்த்தப்பட்ட திறந்த நிலையிலுள்ள முன்கையை கீழ்நோக்கிச் சரித்தல்

எதிரணி ஆடுகளத்தினுள் ஊடுருவல்

Peneration into the opponents court
விதி *17.3.2*
17.5.4

மத்திய கோட்டை ஒரு கையினால் சுட்டிக் காட்டுவதுடன் தவறிழைத்த அணியின் பக்கம் மறுகையினையும் காட்டல்.

இரட்டைத்தவறு

Double Fault
விதி *15.6.4*
20.2.3



இரு பெருவிரல்களையும்செங்குத்தாக உயர்த்துதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடுகையுற்ற பந்து

Ball Condact
விதி 24.2.1

நிலைக்குத்தாகப் பிடிக்கப்பட்ட விரல்களை மறுகையின் உள்ளங்கையினால் தேய்த்து/தடவிக் காட்டுதல்

சமிக்ஞைகளுக்குரிய சம்பவங்கள்	நிறைவேற்றப்பட வேண்டிய கைச் சமிக்ஞைகள் கோட்டுக் காவலர் L

உள்விழுந்த பந்து

Ball in
விதி 24.2.1 (அ)

கொடியைக் கீழே தாழ்த்திக் காட்டுதல்

வெளியேறிய பந்து

Ball out
விதி 14.9.3
18.4.2
24.2.1 (ஆ)

கொடியை நிலைக்குத்தாக உயர்த்திக் காட்டுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடுகையுற்ற பந்து

(Ball Contacted)
விதி. 24.2.1 (இ)

கொடியை உயர்த்தி மறு கையின் உள்ளங்கையால் அதன் உச்சியைத் தடவிக் காட்டுதல்.

அன்ரனாவுக்கு வெளிப்புறமாகச் சென்ற பந்து அல்லது பணித்தல் தவறு
Ball Crossing outside the Antenna or serving fault.
விதி. 16.4, 14.4.1
24.2.1 (ஈ) (உ)

தலைக்கு மேலால் கொடியை உயர்த்தி அசைப்பதோடு அன்ரனாவையோ, முடிவுக் கோட்டையோ சுட்டிக் காட்டல்.

தீர்வுகாண முடியாத சந்தர்ப்பம்

Impossible
Judgment

இரு கைகளையும் உயர்த்தி மார்புக்குக் குறுக்கே வைத்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21.1 மத்தியஸ்தம் வகிக்கும் நடைமுறைகள் (Refereeing Procedures)

21.2.1 ஆட்டத்தின் போது 1ம், 2ம் மத்தியஸ்தர்கள் மட்டுமே விசில் ஊத அனுமதிக்கப்படுவார்கள்.

அ. பந்தின் தொடர்ச்சியான பயணத்தை ஆரம்பிக்கும் முகமாக பணித்தலை மேற்கொள்ள 1ம் மத்தியஸ்தரால் காட்டப்படும் ஒரு சைகை.

ஆ. தொட்டத் தெளிவான தவறொன்று இழைக்கப்படுதலை கண்கூடாகக் காணுமிடத்து பந்தின் தொடர் பயணத்தை 1ம், 2ம் மத்தியஸ்தர்கள் சைகை மூலம் நிறுத்துவர்.

21.2.2 1ம், 2ம் மத்தியஸ்தர்கள் ஓர் ஆட்டத் தடங்கலின் போதும் தமது விசில்களை ஊதுவார்.

(அ) ஓர் அணியினது வேண்டுகோளை அங்கீகரித்தல் அல்லது மறுத்தல் என்பவற்றைச் சுட்டிக் காட்டல்.

(ஆ) வீரரொருவரோ/அணியோ முடைகேடாக நடக்குமிடத்துஅவர்களை எச்சரிக்க/தண்டிக்க 1ம் மத்தியஸ்தர் தனது விசிலை ஊதுவார்.

21.2.3 பந்தின் தொடர் பயணத்தை தமது விசில் மூலம் மத்தியஸ்தர்கள் முடிவுக்குக் கொண்டு வரும் அதேவேளையிலேயே பின்வருவனவற்றை சுட்டிக் காட்டல் வேண்டும்.

(அ) தவறுக்கு உரிய தன்மையை உரிய சைகையுடன்

(ஆ) தவறிழைத்த வீரர்.

(இ) அடுத்துப் பணிக்கவிருக்கும் அணி

21.3 மத்தியஸ்தர்களுடைய உத்தியோக பூர்வ கை சைகைகள்(படம்10) (Referees' Official Hand Signals) 1-25

மத்தியஸ்தர்கள் கோட்டுக் காவலர் ஆகியோர் இடம் பெற்ற தவறின் தன்மைகள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தடங்கல்களுககான நோக்கங்கள் என்பனவற்றை பின்வரும் முறைகளில் தமது உத்தியோக பூர்வ கைச் சைகைகள் மூலம் சுட்டிக் காட்டல் வேல்ண்டும்.

21.3.1 காட்டப்படும் சைகைகள் 1கண நேரம் நீடிக்கும். அத்துடன் ஒரு கையினால் சைகை காட்டப்படுமானால் அது தவறிழைக்கப்பட்ட அணி அல்லது வேண்டுகோன் விடுக்கப்பட்ட அணியை நோக்கியும் இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21.3.2 அதன் பின்னர் மத்தியஸ்தர் தவறிழைக்கப்பட்ட வீரரையோ அல்லது வேண்டுகோள் விடுக்கப்பட்ட அணியையோ சுட்டிக் காட்டுவார்.

21.3.3 அடுத்துப் பணிக்கவிருக்கும் அணியை சுட்டிக் காட்டுவதோடு மத்தியஸ்தரின் சைகை முடிவுறும்.

விதி 22 1ம், 2ம் மத்தியஸ்தர்கள் (First and Second Referees)

22.1 நிலை (Position)

22.1.1 வலையின் முடிவினில் அமைந்திருக்கும் மத்தியஸ்தருக்கான ஆசனத்தில் இவர் இருந்தோ நின்று கொண்டோ தனது கடமையிலீடுபடுவார். இவரது பார்வை வலையின் மேலோரத்தினின்று அண்ணளவாக 50 செ. மீ உயரத்தில் இருத்தல் வேண்டும்.

22.1.2 2வது மத்தியஸ்தர் 1ம் மத்தியஸ்தரை எதிர் நோக்கிய திசையில் நின்று அவரது கடமையினை மேற்கொள்வார். பணித்தல் நடைபெறும் வேளையில் இவர் பணித்தலை ஏற்கும் அணியினது நீட்டப்பட்ட முன்னணிப் பிரதேசத்தில் நிலை கொண்டிருப்பார். பணித்தலின் பின்னர் சுயாதீன பிரதேசத்தின் வழியாகப் புள்ளிப் பதிவாளரின் முன்னிலையில் நிலை கொள்வார்.

22.2 1ம் மத்தியஸ்தரின் அதிகாரங்கள் (Authority of the First Referee)

22.2.1 ஓர் ஆட்டத்தை ஆரம்ப முதல் முடிவு வரை நெறிப்படுத்தவும் தமது மத்தியஸ்தர் குழு மற்றும் அணிகள் போன்றோர் மட்டில் முழு அதிகாரமும் உடையவர் இவரே. பந்து எடுத்துக்கொடுக்கும் உதவியாளர்களின் (Ball Retrivers) கடமைகளையும் இவர் மேற்பார்வை செய்வார்.

22.2.2 ஆட்டம் சம்பந்தமானதும் ஆட்டவிதிகட்குட்பட்டதுமான எந்தவொரு விவகாரத்திலும் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் இவருக்குண்டு.

22.2.3 ஓர் ஆட்டம் நடைபெறும் வேளையில் சட்டதிட்டங்கட்கமைய அவர் எடுக்கும் தீர்மானமே, இறுதியும் முடிவுமான தீர்மானமாகும். ஏனைய உத்தியோகத்தர்களின் தீர்ப்புதவறானதுஎனக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருதுமிடத்து அத்தீர்ப்பினை மாற்றியமைக்கும் அதிகாரமும் இவருக்குண்டு. உத்தியோகத்தர்கள் தமது கடமையினை சரிவர செய்யாதவிடத்து அவர்களை மாற்றும் அதிகாரமும் இவருக்குண்டு.

22.2.4 ஆட்டத்தின் முன்னரும் ஆட்டத்தின்போதும் ஆடுகளம் ஆடுவதற்கு உகந்த நிலையிலுள்ளதா எனத் தீர்மானிக்கும் முழுப் பொறுப்பும் இவரையே சார்ந்ததாகும்.

22.2.5 ஆட்டத்தின் முன்னும் ஆட்டத்தின்போதும் 1ம், 2ம். மத்தியஸ்தர்கள் பந்து சட்டதிட்டங்களுக்கு அமைய உள்ளனவா எனப் பரிசீலனை செய்வர். சட்டதிட்டங்கட்கமையாத எந்தவொரு பந்தோ அல்லது ஈரமடைந்திருக்கும் தன்மையுள்ள பந்தோ மாற்றப்படும்.

22.3 1ம் மத்தியஸ்தரின் பொறுப்புகள்
(Respons bilities of the First Referee)

22.3.1 ஆட்டத்தின் முன்னர் இவர்,

அ) ஆடுகளத்தின் தன்மை ஆட்டத்தில் பாவிக்கப்படும் உபகரணங்களின் தன்மை என்பவற்றை பரிசீலித்தல்.

ஆ) பணித்தல் ஆடுகளத்தின் பக்கம் என்பவற்றின் தெரிவுக்கான நாணய சுழற்சியினை மேற்கொள்ளல்.

இ) அணிகளுக்குரிய உடல் வெப்பமூட்டலை கட்டுப்படுத்தல்

22.3.2 ஆட்டத்தின்போது இவர்,

அ) ஆட்டத் தவறுகள் நடத்தைத் தவறுகள் பற்றி சைகை பண்ணவும் அதற்கான தண்டனையை வழங்கவும் அதிகாரம் கொண்டவர்.

ஆ) பணித்தல் தவறுகள் பணிக்கும் அணியின் நிலை, தவறுகள் திரையிடல் பணித்தல் பாதையில் ஏற்படும்தொடுகைகள் பந்துத் தொடுகைத் தவறுகள் வலையின் மேலால் ஏற்படும் தவறுகள் அதன் கிடையான பட்டிகளில் ஏற்படும் தவறுகள் ஒரே நேரத்திலான தொடுகைகள் போன்றவற்றில் தீர்மானம் எடுக்கும் அதிகாரமும் இவருக்கே உண்டு.

இ) தவறுகளின் தன்மைகள் பற்றிய எந்தவொரு வாக்குவாதமும் இவரால் அங்கீகரிக்கப்படமாட்டாது. ஆயினும் தவறுகள் பற்றிய தெளிவான விளக்கங்களையும் அதற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கான சட்டப் பிரயோகத்தையும் விளங்கிக் கொள்ளும் முகமாக அணித்தலைவரால் விடுக்கப்படும் வேண்டு கோள் இவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஈ) அளிக்கப்பட்ட சட்ட விளக்கம்பற்றி, அணித்தலைவரும் மத்தியஸ்தரும் உடன்பாடு காணாத விடத்து அதை அவர் புள்ளிப் பதிவேட்டில் பதியப்போவதாக கேட்கு மிடத்து அவ்வாட்சேபனையை ஆட்டமுடிவின் போது புள்ளிப் பதிவேட்டில் பதிய அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும்.

22.4 2ம் மத்தியஸ்தரின் அதிகாரம் (Authority of the Second Referee) இவர் 1ம் மத்தியஸ்தரின் உதவியாளராவார். 1ம் மத்தியஸ் தரால் ஆட்டத்தை தொடர முடியாத சந்தர்ப்பங்களில் 1ம் மத்தியஸ்தரைப் பிரதியீடு செய்து அவரது கடமைகளை இவர் மேற்கொள்வார்.

22.4.1 சுற்றுக்களின் ஆரம்பத்திலும் சுற்றுக்களின் போதும் இவர் வீரர்களின் ஆட்டநிலைகளைப் பரிசீலனை செய்வதுடன் இறுதித் தீர்மானச் சுற்றில் ஆடுகளத்தின் மாற்றத்தையும் கண்காணிப்பார்.

22.4.2 வீரர்களது இருக்கையில் வீற்றிருக்கும் ஒவ்வொரு அணி அங் கத்தவர்களதும் நடத்தையை அவதானித்து முறைகேடான நடத்தைகளை முதலாவது மத்தியஸ்தருக்கு அறிவிப்பார்.

22.4.3 ஆட்டம் நடைபெறும் வேளைகளில் பதிலாட்டக்காரர்கள் இறுதியான உடலை உஷ்ணப்படுத்தும் பயிற்சிகளில் அதற் குரிய இடங்களில் பயிற்சி பெறுவதையும் தடைசெய்வார்.

22.4.4 ஒவ்வொரு அணிக்குமுரிய நேர இடைவேளைகள் பிரதியீடு கள் என்பனவற்றைக் கட்டுப்படுத்துவதுடன் இத்தரவுகளில் சட்ட பூர்வமான தரவுகளை ஆட்டத்தடங்களின்போது 1ம் மத்தியஸ்தருக்கும் பயிற்றுவிப்பாளர்களுக்கும் அறிவிப்பார்.

22.4.5 ஆட்டத்தடங்களுக்கான முறையற்ற வேண்டுகோளை நிரா கரித்தலும் முறையான வேண்டுகோளை அங்கீகரித்தலும் அவை நீடிக்கும் காலத்தை கட்டுப்படுத்தலும் இவரது செயலே.

22.4.6 தனது அதிகார வரம்பிற்கு அப்பால் நடைபெறும் ஏனைய தவறுகளைக் கூட, விசில் இன்றி சைகை மூலம் சுட்டிக் காட் டலாம். ஆனால், அத்தவறு பற்றி 1வது மத்தியஸ்தருக்கு வற்புறுத்திக் கூறமுடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22.4.7 ஆடுகளத்தை காயவிடுதல் அவசியமா? இல்லையா? என்பது பற்றி தீர்மானம் எடுப்பவர் இவரே.

22.5 2ம் மத்தியஸ்தரின் பொறுப்புகள் (Responsibilities of the Second Referee)

22.5.1 ஒவ்வொரு சுற்றின் முன்னரும், 2வது மத்தியஸ்தர், ஏற்கனவே வழங்கப்பட்ட வரிசை ஒழுங்குப்பிரகாரம் தற்போதைய ஆடும் வீரர்களின் வரிசை ஒழுங்கு அமைந்துள்ளதா என்பதை பரிசீலனை செய்வார்.

22.5.2 ஆட்டம் நடைபெறும் போது பின்வரும் தவறுகளை தமது விசிலை ஊதி சைகை மூலம் சுட்டிக்காட்டுவார்.

அ. பணித்தலைப் பெற்ற அணியினது நிலைகள் தொடர்பான தவறுகள்.

ஆ. பந்து வலையை கடக்க வேண்டிய பிரதேசத்தைவிட்டு வெளிச் செல்லுதல் அல்லது தனது பக்கத்தில் காணப் படும் அன்ரனாவில் தொடுகையுறல் போன்றதவறுகள்.

இ. வலையின் மேல் விளிம்பின் கீழுள்ள பகுதிகளில் அல்லது அன்ரனாவில் வீரர் ஒருவர் தொடுகையுறல்.

ஈ. எதிரணியின் ஆடுகளத்தினுள் ஊடுருவல்.

உ. பின்னணி வீரரால் மேற்கொள்ளப்படும் சட்டபூர்வமற்ற அறைதல் அல்லது தடுத்தல்.

ஊ. பந்து வெளிவாரிப் பொருட்களில் படல்.

எ. வீரர் ஒருவர் விபத்துக்குள்ளான சந்தர்ப்பத்தில், அவர் குணம் அடைந்து மீண்டும் பழைய நிலைக்கு திரும்புவதற்கான நேர இடைவேளைக்கு அங்கீகாரம் அளிப்பார்.

விதி (23) புள்ளிப்பதிவாளர் (Scorer)

சட்டதிட்டங்களுக்கமைவான புள்ளிவிபரப்பட்டியலை வைத்திருப்பதுடன் ஆட்டத்தினைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கக்கூடிய தேவையான சகல பதிவுகளையும் தன்னுடன் வைத்திருத்தல்.

23.1 நிலை (Position)

1ம் மத்தியஸ்தருக்கு எதிர்திசையில் அவரை எதிர் நோக்கியபடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமக்குரிய இருக்கையில் அமர்ந்தபடியே தமது கடமையினை மேற்கொள்ளுவார்.

23.2 அதிகாரம் (Authority)

23.2.1 ஒவ்வொரு அணிக்கும் வழங்கப்பட்ட நேர இடைவேளைகள் பிரதியீடுகள் என்பவற்றை பதிந்து வைத்து மத்தியஸ்தர்களுக்கு தெரியப்படுத்துவார்

23.2.2 இவர் சட்டபூர்வமான நடவடிக்கைகளை கட்டுப்படுத்தல், புள்ளிப் பதிவேட்டின் பதிவுகள் மற்றும் 1ம் மத்தியஸ்தர், பயிற்று விப்பாளர், பொதுமக்கள் ஆகியோருக்குரிய அறிக்கைகள் என்னும் விடயங்களில் 2ம் மத்தியஸ்தர்களுக்கு உறுதுணையாக இருப்பார்.

23.2.3 ஆட்டத்தடங்கல்களின்போது வீரர்களின் வரிசை ஒழுங்கினில் காணப்படும் தவறுகள் அல்லது வீரர்களின் பணித்தல் ஒழுங்கினில் காணப்படும் தவறுகள் பற்றி மத்தியஸ்தர்களுக்கு சைகை மூலம் தெரிவிப்பார்.

23.3 பொறுப்புக்கள் (Responsibilities)

23.3.1 1. ஆட்டத்துக்கு முன்பதாக இவர்,

அ) அங்கீகரிக்கப்பட்ட முறைகட்கிணங்க, ஆட்டங்கள், அணிகள் பற்றிய தரவுகளை பதிந்து வைப்பதுடன், பயிற்றுவிப்பாளர்கள் அணித்தலைவர்கள் ஆகியோரின் கையொப்பங்களையும் பெற்றுக்கொள்வார்.

ஆ) அணிகளின் ஆரம்ப வரிசை ஒழுங்கை பதிந்து வைப்பதற்காக ஒவ்வொரு அணியிடமிருந்தும் அவர்களது வரிசை ஒழுங்குப் பத்திரங்களை பெறல் அவ்வாறு பெற்றுக் கொள்ள முடியாத சந்தர்ப்பங்களில் இவர் இது பற்றி உடனடியாக 2ம் மத்தியஸ்தருக்கு அறிவித்தல் வேண்டும். முதலாவது பணித்தல் மேற்கொள்ளப்படும் வரைக்கும் இவ்வாரம்ப ஒழுங்கு வரிசையானது மத்தியஸ்தர்கள், புள்ளிப்பதிவாளர்கள் தவிர்ந்த எவருக்குமே தெரிவிக்கப் படமாட்டாது.

23.3.2 ஆட்டத்தின்போது இவர்,

அ) ஒவ்வொரு அணியும் பெறும் புள்ளிகளை பதிந்து வைத்திருப்பதுடன் புள்ளிப் பலகையில் (Score Board) உரிய புள்ளிகள் காட்டப்பட்டுள்ளதா எனவும் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆ) வீரர்களின் பிரதியீடுகள் நேர இடைவேளைகள் ஆகிய வற்றை பதிந்து வைப்பதுடன் அதன் எண்ணிக்கையையும் கட்டுப்படுத்துவார்.

இ) ஒவ்வொரு அணியினதும் பணித்தல் ஒழுங்கினையும் கட்டுப்படுத்துவார்.

ஈ) அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு ஆட்டத்தடங்கல்களின் போதும் ஒவ்வொரு அணிக்கென பதியப்பட்ட நேர இடைவேளைகள், பிரதியீடுகள் என்பவை பற்றி 2ம் மத்தியஸ்தருக்கு தெரியப்படுத்தல் வேண்டும்.

உ) வீரர்களின் சுழற்சி ஒழுங்கினில் காணப்படும் தவறு பற்றியோ அல்லது சட்டதிட்டங்கட்குமான அல்லது ஆட்டத் தடங்களுக்கான வேண்டுகோள் பற்றியோ பிழையைமத்தியஸ்தர்கட்கு தெரிவித்தல் வேண்டும்.

ஊ) ஒவ்வொரு சுற்றின் முடிவிலும் இறுதியாட்டத்தின்போது ஒரு அணி 8ஆவது புள்ளி எடுத்த நிலையிலும் மத்தியஸ்தர்களுக்கு ஆடுதளத்தின் மாற்றம்பற்றியும் அறிவிப்பார்.

23.3.3 ஆட்ட முடிவின்போது இவர்,

அ) ஆட்டத்தின் இறுதி முடிவினை பதிவு செய்வார்

ஆ) மத்தியஸ்தர்கள், ஆட்டத்தலைவர்களின் கையொப்பங்களைப் பெற்றுக்கொள்வார்,

இ) ஆட்ட வேளையின்போது அணித்தலைவரினால் மத்தியஸ்தரிடம் தெரிவிக்கப்பட்ட ஆட்சேபனை குறித்து அணித்தலைவரினது சொந்த வாக்குமூலத்தை புள்ளிப் பதிவாளர்தானே பதிவேட்டில் எழுதுவார், அல்லது அணித்தலைவரை எழுத அனுமதிப்பர். (விதி 6.2.2(அ)

விதி 24 சுவட்டுக் காவலர்கள் (Linesmen)

தத்தமக்கு கொடுக்கப்பட்ட தவறுகளை சுட்டிக்காட்டும் சைகைகட்கு இவர்களே முழுப் பொறுப்பாளியாவர்.

24.1 அமைவிடம் (Location) படம் 3

24.1.2 சர்வதேச போட்டிகளின் போது 4 கோட்டுக் காவலர்கள் அவசியமாகும். இவர்கள் மைதானத்தில் தமக்கென ஒதுக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்ட ஒவ்வொரு மூலைகளினின்றும் கற்பனையாக நீட்டப் பட்ட 1ம், 3ம் தூரத்தில் அமைந்துள்ள சுயாதீன எல்லைப் பிரதேசத்தினுள் நிலை கொண்டிருப்பர். முடிவுக் கோடுகள் பணித்தல் மூலையினின்றும் பக்கக் கோடுகள் அதற்கு எதிர் மூலையினின்றும் கட்டுப்படுத்தப்படும்.

24.1.2 2 கோட்டுக் காவலர்கள் மட்டும் உபயோகப்படுத்தப்படும் வேகளைளில் பணித்தல் பிரதேசத்திற்கு சற்று தள்ளி எதிர் எதிராகமூலை விட்டங்களுக்கு ஒருவராக நிலைகொண்டிருப்பர். இதனால் ஒவ்வொருவரும் தத்தமக்கண்மையிலுள்ள முடிவுக் கோட்டையும் பக்கக்கோட்டையும் கட்டுப்படுத்தக் கூடிய வர்களாக காணப்படுவார்.

24.1 ஆட்டவேளையின் போது அவருக்குரிய பொறுப்புக்கள் (Responsibilities During the Match)

24.2.1 கோட்டுக் காவலர்கள் தம்மிடமுள்ள (30 × 30cm அளவுள்ள) கொடிகளால் சைகைகள் மூலம் பின்வரும் முறையில் கடமை யிலீடுபடுவர். (படம் 10, 26-30)

(அ) பந்து ஆடுகளத்தினுள் அல்லது எல்லைக் கோடுகளின் மேல் நிலம் படுமானால் அது உள் விழுந்த பந்தாகும். (Ball in) இதற்கு கொடியை கீழே தாழ்த்துதல்.

(ஆ) பந்து எல்லைக் கோடுகட்கு வெளியே விழுமாயின் கொடியை மேலே உயர்த்துதல். (Ball out)

(இ) பந்து வெளியே விழுந்த போதிலும் பந்தை ஏற்கும் அணி வீரர் ஒருவரின் கையினில் பட்டு வெளியேறி இருப்பின் கொடியை உயர்த்துவதோடு மறு கையினால் கொடியின் நுனியை தொட்டுக்காட்டுதல். (Ball Touched)

(ஈ) பந்தைப் பணிப்பவர் பணிக்கும் வேளையில் பணித்தல் பிரதேசத்தின் எல்லைகளினின்று கால்களை வெளியே வைப்பின் கொடியை உயர்த்தி அசைப்பதுடன் சுட்டு விரலினால் தவறிழைத்த வீரரையும் முடிவுக் கோட்டை யும் சுட்டிக்காட்டல்.

(உ) அன்ரனாக்களுக்கு அப்பாலுள்ள பிரதேசத்தினூடாவே அன்ரனாக்களுக்கு மேலாகவோ செல்லும்போது அல்லது அன்ரனாக்களில் தொடுகையுறும் போது, கொடியை மேலே உயர்த்தி அசைப்பதுடன் சுட்டுவிரலால் அன்ர னாக்களை சுட்டிக்காட்டல். (Ball out)

24.2.2 1ம் மத்தியஸ்தரால் கேட்கப்படுமிடத்து அவர்கள் மீண்டும் சைகையை காட்டுதல் வேண்டும்.

24.2.3 பந்து நிலம் பட்ட இடத்திற்கு அண்மையில் அல்லது தவறி ழைக்கப்பட்ட இடத்திற்கண்மையில் உள்ள கோட்டுக்காவலரே அத்தவறுக்குரிய சைகையை புரிவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வொலிபோல் அடிப்படைத் திறன்கள்
(BASIC SKILLS IN VOLLEYBALL)

ஓர் விளையாட்டின் அடிப்படைத் திறன்களை முறையாகவும் முழுமையாகவும் பயின்ற வீரர்களிடமிருந்தே சிறந்தவொரு ஆட்டத் தினையும் நாம் எதிர்பார்க்க முடியும். நாம் அடிப்படைத் திறன்களைக் கற்கையிலேயே எமது உடல் அசைவுகளையும் முறையாகப் பயன்படுத் திக் கொள்ளல் வேண்டும். ஓர் விளையாட்டில் நாம் திறமையுடன் விளங்க வேண்டுமாயின் மேற்கூறிய அறிவுரைகளை நன்கு புரிந்து கொண்டு செயலாற்ற வேண்டும். இனி இவ்வாட்டத்திலேற்படக்கூடிய அடிப்படைத் தவறுகள் பற்றிப் பார்ப்போம்.

அடிப்படைத் தவறுகள்

- பணித்தலின்போது ஏற்படும் தவறுகள்
- பந்தை எதிரணியினருக்கு முறையாக அனுப்பாமை
- கைகளால் பந்தைப் பிடித்தல், அல்லது கைகளில் தங்க வைதல்,
- ஒருவர் தொடர்ச்சியாக பந்தைத்தொடல்
- வேண்டுமென்றே ஆட்டத்தைத் தாமதித்தல்
- முழங்காலின் கீழ் உள்ள பகுதிகளில் பந்து படல்
- வலையில் தொடுகையுறல்
- ஒரு அணியினர் 3ற்கு மேற்பட்ட எத்தனங்களில் பந்தை அனுப்புதல்
- எதிரணியினரின் ஆடுகளத்திலுள்ள பந்தை எட்டித்தொடல்
- வலையின் கீழாக வரும் பந்தைப் பிடித்தல் அல்லது எதிரணி யினருக்குக் குந்தகம் விளைவித்தல்.
- சுழற்சி ஒழுங்கு முறையின் ஒழுங்கீனங்கள்
- பின்னணி வீரர்கள் முன்னணிக்கு வந்து அறைதலில், தடுத்த லில், பாய்ந்து பந்தை உயர்த்துவதில் பங்கு பெறல்
- தனிப்பட்ட முறையில் வீரரொருவரை எச்சரித்தல்
- முறையற்ற நேர இடைவேளையை (illegal Time out) 3ம் முறையும் கேட்டல்
- முறையற்ற ஆள் மாற்றம்
- முறையற்ற விதத்தில் தடுத்தாடல்
- நேர இடைவேளைகளை நீடித்தல்
- மத்தியஸ்தரின் அனுமதியின்றி ஆடுகளத்திலுள் பிரவேசித்தல்/ ஆடுகளத்தைவிட்டு வெளியேறல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❋ எதிரணியினரின் கவனத்தை திசை திருப்பும் நோக்குடன் சில செய்கைகளில் ஈடுபடல். (கூச்சலிடல், காலை நிலத்தில் உதைத்தல் போன்றன)

❋ பந்து பணிக்கப்படும்போது உரிய நிலைகளிலில்லாமை.

அடிப்படைத் திறன்கள்

1. பந்தைப் பணித்தல் (Servicing)
2. பந்தைக் கடத்துதல் (Passing)
3. பந்தை அறைதல் (Spiking)
4. பந்தை தடுத்தாடல் (Blocking)
5. பந்தை காத்தாடல் (Defending)

1. பந்தைப் பணித்தல்

பணித்தல் என்பது எதிரணி நோக்கி வேகமாக பந்தை அனுப்பும் ஓர் தாக்குதல் ஆயுதமாகும். பணித்தல் எல்லைப்பிரதேசத்தினின்று எல்லைக் கோடுகளை மிதிக்காமல் பணித்தல் வேண்டும். அடிப்படை நுட்பங்களினடிப்படையில் வெவ்வேறு வகையான பணித்தல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(அ) கீழ்க்கைப் பணித்தல் (Under Arm Service)

(ஆ) பக்கக்கைப் பணித்தல் (Side arm or wind mill Service)

(இ) பக்கக்கைப் பணித்தல் (Tennis or Floating Service)

(அ) கீழ்க்கைப் பணித்தல் **(Under arm Service)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பணித்தல்களில் மிக இலகுவானதும், பிழையின்றிப் பணிக்கக் கூடியதுமான பணித்தல் இதுவேயாகும். கீழ்க்கைப் பணித்தலை ஒருவர் மேற்கொள்ளும்போது பின்வரும் தொடர் அறிவுறுத்தல்களை கவனத்திற் கொள்ளல் வேண்டும். (வலக்கைப் பழக்கமுள்ளவர்கள்)

- இடது வலது கால்களை சற்று முன் பின்னாக வைத்து வலையை நோக்கி நிற்றல்.
- முன் கால் முடிவுக் கோட்டை மிதிக்காமல் சற்று பின்னால் தள்ளி இருத்தல் வேண்டும்.
- உடல் சற்று முன் வளைந்த நிலையிலும், இடது கையில் பந்தை முழங்கால் மட்டத்திலும் வைத்திருத்தல் வலது கை சற்று பின் நோக்கி இருக்கும்.
- கண்கள் பந்தை நோக்கியே இருப்பதுடன் கடைக் கண்களால் எதிரணியினரின் மைதானத்தையும் நோட்டமிடல் வேண்டும்.
- முழங்கால்களையும், உடலையும் சற்று முன்நோக்கி வளைத்து வலது கையால் பந்தை அனுப்பத் தயாராகுதல்.
- பந்தின் அடிப்பாகத்தில் உள்ளங்கை படும் வண்ணம் வலது கையை வேகமாக முன் நோக்கிக்கொண்டு வந்து விசையுடன் அடிக்கத் தயாராகுதல்.
- பணிக்கு முன் பந்தை காற்றில் சற்று இலகுவாக மிதிக்கவிட்டு உள்ளங்கையின் அடிப்பாகத்தால் (Heel of the hand) அல்லது விரல்களை மூடிய நிலையில் வைத்து (Closed fist) அடித்தல்.
- வேகமாக விசையைப் பிரயோகிப்பதன் மூலம் பணித்தலை நேராகவும் வேகமாகவும் சுழற்சியாகவும் பணிக்கும் உத்திகளைக் கையாளலாம்.

கீழ்க்கை வலச்சுழற்சி (Under Arm Right Spin)

கீழ்க்கைப் பணித்தலுக்குரிய நிலையே இதற்கும் பொருந்தும் ஆயினும்,

- உடலை இன்னும் சற்றுக் கூடுதலாக முன் வளைத்து பந்தை இடது கையில் முழங்கால் மட்டத்தில் வைத்திருத்தல்.
- பந்தை அளவாக காற்றில் மிதக்கவிட்டு, விரல்களை சற்று விரித்து, உள்ளங்கையும் விரல்களும் சற்று படும் வண்ணம் பந்தின் வலப்பக்கமாக அடித்தல்.
- உடலை சற்று வேகமாகத் திருப்பி (twist) வலது கையால் பந்திற்கு இடப்பக்கமாக அடித்தல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ அடிக்கையில் போதுமான வேகத்துடன் விசையுடனும் பந்து வல மிருந்து இடமாக சுழன்று போகும் வண்ணம் அடித்தல்.

❖ வலது கையை தோல் மூட்டினின்று அசைப்பதன் மூலம் தேவை யான கூடுதலான விசையையும் பெற்றுக்கொள்ளலாம்.

கீழ்க்கை இடச்சுழற்சி (Under arm Left Spin)

கீழ்க்கை இடச்சுழற்சியானது வலச் சுழற்சியின் பண்புகளையே கொண்டதாகும். ஆயினும் பந்து செல்லும் பாதை மட்டும் வேறுபட்டுக் காணப்படும் பந்தின் இடப்பக்கத்தில் எமது சின்ன விரலால் ஓர் சுழற்சியை ஏற்படுத்துவதன் மூலம் இது இடமிருந்து வலமாகச் சுழலக்கூடிய சுழற்சியைப் பெறுகின்றது. பணித்தல் வேகமாக இருப்பின் அதன் பயனும் உறுதி யாக இருக்கும்.

(ஆ) பக்கக்கைப் பணித்தல் (Side arm/wind mill Serving)

இப்பணித்தல் மூலம் வேகமாகவும் வலம் இடம் எனவும் சுழற்சி யாகவும் பணிக்க முடியும். எதிரணியினரைத் திணறடிக்கும் ஆயுதமா கவும் இதனைப் பயன்படுத்தலாம்.



❖ இடது தோல் வலையைப் பார்த்த வண்ணமும் கால்கள் சற்று அகன்ற நிலையிலும் காணப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இரு கைகளாலும் பந்தை நெஞ்சின் முன்பதாக வைத்திருத்தல்.
- பந்தை உடலின் முன் புறமாக 2'—3' வரை தள்ளி நிலத்திற்கு சமாந்தரமாக தலைக்கு மேலே சற்று உயரமாகப் போடல்
- உடலை வலப்பக்கமாக சற்று வளைத்து வேகமாகத் திரும்பும் அதே வேளையில் இட முழங்காலை சற்று மடித்து வலது கையை நிலத்தை நோக்கி நீட்டிய வலது கையை மடிக்காமல் தோள் மூட்டின் சுழற்சியால் மேலே கொண்டு வரல்.
- கைவிரல்களை விரித்த நிலையில் வைத்து வேகமாயும் விசையுடனும் பந்தின் நடுப்பாகம்படும் வண்ணம் ஓங்கி அறைதல்.
- அறையும்போது நமது உடல் ஓர் வில் போன்ற அமைப்பில் வளைந்திருத்தல் நன்று.
- பணித்தலைத் தொடர்ந்து எமது உடலை நிமிர்த்தி பழைய நிலைக்கு கொண்டு வருதல்.
- பின்னர் உடலின் பாரத்தை இடது காலுக்குக் கொடுத்து சம நிலையை அடைதல். கால்களை குறுக்காக வைத்தல் கூடாது.

மேற்கைப் பணித்தல் (Tennis/Floating Service)

- கால்களை சற்று முன் பின்னாக வைத்து வலையைப் பார்த்த வண்ணம் நிற்றல்.
- முழங்கால்கள் சற்று முன்புறம் மடிந்த நிலையில் பந்தை இரு கைகளாலும் உடலுடன் சேந்த்து வைத்திருத்தல் இடுப்பின் மேற்பாகம் நேராக இருத்தல் வேண்டும்.
- பந்தை உடலினின்று 2'—3' முன்புறமாக நிலத்திற்கு செங்குத்தாக தலைக்குமேலே போடும் போதே மடிந்த முழங்கால்களையும் நேராகக் கொண்டு வரல் வேண்டும்

- எந்நேரமும் பந்திலேயே கண்ணாயிருத்தல் வேண்டும் பந்து தலைக்கு மேலே போடப்பட்டவுடனேயே வலது முழங்கையை சற்று மடித்த நிலையில் தலைக்கு மேலே தூக்குதல்.
- உடலை சற்று வலப்பக்கமாகத் திருப்பி பின்புறமாக சற்று வளைந்தும் நிற்றல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* தலைக்கு மேலே உள்ள மடிந்த கையை பந்தை நோக்கி சுழற்றுதல்.

* பந்தைத் தலைக்கு மேலே விரல்கள் ஒன்று சேர்ந்த நிலையில் ஓர் கோப்பை போன்ற வடிவில் வைத்து வேகமாக அறைதல்.

* அறைகையில் பந்தின் மேல் பாகத்தில் 5 விரல்களும் படும் வண்ணம் வேகமாக அறைதல்.

* உடலை சற்று இடப்பக்கமாகவும் வலது தோளை முன் பக்கமாகவும் திருப்பி அறைகையில் கூடிய வேகத்தையும் பெற லாம்.

மேல் கைச் சுழற்சி **(Over arm spin service)**

மேற்கைப் பணித்தலையொத்த நிலையையே இதற்கும் கூறலாம்.

* மணிக்கட்டின் ஒழுங்கான சுழற்சியின் மூலம் பந்திலும் சுழற்சியை ஏற்படுத்தலாம்.

* வலம், இடம் என பந்தில் சுழற்சியை ஏற்படுத்துவதன் மூலம் வல, இட சுழற்சிகளைப் பெறலாம்.

* பந்தின் பின்புறம் உள்ளங்கையினால் அடிப்பதன் மூலம் பின்புற சுழற்சியையும் பெறலாம்.

மேல்கை மிதத்தல் முறை **(Over arm floating service)**

இது மூற்றியும் டெனிஸ் முறையை ஒத்த அசைவுகளுடனான சற்று வித்தியாசமான ஒரு பணித்தல் முறையாகும்.

பந்தைத் தலைக்கு மேலாக சற்று உயரமாகப் போட்டு கை விரல்களை விரித்து பந்தின் அடியில் அடித்தல் ஆனால் கூடிய விசையைப் பயன்படுத்துதல் ஆகாது.

மணிக்கட்டை அசைத்து பந்தைத் தள்ளுவதன் மூலம் பந்து பறப்பது போன்ற நிலைமையை ஏற்படுத்தலாம். தேவையேற்படின் வலது காலை சற்று முன்னும் வைத்து பணிக்கலாம்.

பணித்தல் தவறுகள் **(Service faults)**

* பணிக்கையில் எல்லைக் கோடுகளை மிதித்தல்/கடத்தல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* பந்தைக் காற்றில் மிதக்க விட்டுப் பணிக்காமை
* பந்து வலையின் மேலால் பக்க அடையாளங்களைத் தாண்டிச் செல்லுதல்
* பணித்த பந்து வலையில் தொடுகையுறல்
* பணித்த பந்து ஆடுகளத்தின் எல்லைக்கு வெளியே நிலம்படல்
* பணித்த பந்து தமதணி ஆடுகளத்தினுள்ளேயே விழல்
* பணித்த பந்து தமதணி வீரரொருவரில் பட்டுத் தெறித்தல்

சிறந்த பணித்தலுக்கான உதவிக் குறிப்புகள் (Hints for better serving)

பணித்தல், எதிரணியினரைத் திணறடிக்கும் ஓர் பயங்கரமான ஆயுதம் என்பதை நீங்கள் அறிவீர்கள். எனவே இதனைச் சிறந்த முறையில் பயன்படுத்தும் விதத்தைத் தெரிந்து கொண்டோமாயின் ஆட்டத்தின் வெற்றியையும் இலகுவில் தட்டிக்கொள்ளலாம். கீழே தரப்பட்டுள்ள சில குறிப்புகள் சிறந்த பணித்தலை மேற்கொள்ள உறுதுணையாக அமையும் என எண்ணுகிறேன்.

* எப்போதும் ஒரே வகையான பணித்தலைப் பாவிப்பதைத் தவிர்த்து வெவ்வேறு வகையான பணித்தல்களை மேற் கொள்ளத் தெரிந்திருக்க வேண்டும்.

* தனி நபர் ஒருவருக்கு ஆகக் குறைந்தது 3 பணித்தல் முறைகளும், ஓர் அணிக்கு ஆகக் குறைந்தது 5 பணித்தல்களும் தெரிந்திருத்தல் வேண்டும்.

* நாம் பணிக்கப் போகும் இடத்தை எமது பார்வையைக் கொண்டு இனம் கண்டு கொள்ளக்கூடிய வகையில் எமது பார்வை அமைதல் கூடாது, இடத்தைப் பார்த்துக்கொண்டு வேறிடம் போடுதல் நன்று.

* பணித்தல்கள் முறையாகவும் முழுமையாகவும் பயிற்றப்பட்டவையாக இருத்தல் வேண்டும்.

* பணித்தலை எதிரணியினரின் இது பக்க மூலைக்கு மேற் கொள்ளுவதன் மூலம் எதிரணியால் அப்பந்தை நேரடியாக வளமாக உயர்த்திக் கொடுக்க முடியாமல் போகலாம்.

* பணித்தவுடனேயே ஆடுகளத்தினுள் இறங்கி அடுத்த பாது காப்பு நடவடிக்கையில் ஈடுபடல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✤ கேளிக்கைக்குரிய விநோதமான (Fancy) பணித்தல்களைத் தவிர்த்தல் வேண்டும்.

✤ வேகமாகப் பணிக்கையில் சுழற்சிப் பணித்தல்கள் கூடிய பயனைத் தரலாம்.

✤ காலநிலைகளை நன்கு அவதானித்து பணித்தல் வேண்டும்.

* மங்களான ஒளியின்போது வலைக்கண்மையில் பணித்தலை மேற்கொள்வதனால் பந்தின் போக்கை இனங்காண்பது சிரமம்.

* எதிர் திசை நோக்கி காற்று வீசுகையில் சற்றுக் குறைந்த வேகத்துடன் எதிரணியின் பின் வரிசைக்குப் போகுதல்

* காற்று எதிர் திசையினின்று வீசுமாயின் சற்று வேகமாகப் பணித்தல் இதனால் எதிரணியினர் பந்தைத் திருப்பி அனுப்புவதில் சிரமப்படலாம்.

* சூரியன் உச்சியிலிருக்கையில் பந்தை உயரமாகப் பணிப்போமாயின் எதிரணியினரால் சூரியனை எதிர் நோக்கிப் பார்த்து பந்தைத் திருப்பி அனுப்புவது சிரமமாகலாம்

* மழைத்துளிகள் தூறல்களின்போது சுழற்சிப் பண்புகள் கூடிய பலனை அளிக்கும். இதனால் பந்து கையாள முடியாமல் வழுக்கிச் செல்லும் சந்தர்ப்பங்கள் உண்டு.

✤ சில சமயங்களில் குறும் பணித்தல் (Short Service) நல்ல பலனைத் தரலாம்.

✤ பணித்தல்கள் எப்போதும் வெற்றிடங்களை நோக்கியோ அல்லது இரு வீரர்களின் மத்தியிலோ அல்லது வீரரொருவரின் இடப்பக்கமாகவோ மேற்கொள்ளப்படல் நன்று.

✤ பந்து கையாள்வதில் சற்று அனுபவம் குறைந்தவர்களை இனங்கண்டு அவர்களது இடப்புறமாகப் பணித்தலை மேற்கொள்ளல் சிறந்த பயனைத் தரலாம்.

பந்தைக் கடத்துதல்

பந்தைக் கடத்துவதற்குப் பல்வேறு முறைகள் கையாளப்பட்டு வருகின்றன. அவைகளுள் மிக முக்கியமானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(i) தோண்டிச் செலுத்துதல்/டிக்பாஸ் (Dig Pass)

(ii) வளமாக உயர்த்துதல்/வொலிபாஸ் (Volley Pass)

(i) டிக்பாஸ் முறை (Dig Pass)

இம் முறையினைக் கையாள்வதன் மூலம், பந்தை நீண்ட நேரம் கையில் தங்க வைத்திருத்தலுக்கான தவறுகள் ஏற்பட இடமேற் படாது. இரு கைகளையும் உடலின் முன்னால் ஒன்றாகச் சேர்த்து நீட்டிப் பந்தை ஏற்றும் ஒரு முறையாகும்.

❖ இருகால்களையும் சற்று முன்பின் னாக இடந்து வைத்து நிலை கொள்ளல் முழங்கால்களைசற்று முன்புறமாக மடித்து இடுப்பின் மேற்பாகம் நேராக இருக்கும் வண்ணம் நிலைகொள்ளல்.

❖ உள்ளங்கையின் மேல் அடுத்த கையை வைத்து ஒன்றாகச் சேர்த்து பெருவிரல்களை மடித்து நெஞ்சுக்கு நேராக முழங் காலுயரத்திற்கும் சற்று மேலாக நீட்டுதல்.

❖ நீட்டிய கைகளின் முழங்கைக்கும் மணிக்கட்டுக்கும் இடையில் பந்து தொடுகையுறும் வண்ணம் தம்மை இடப்படுத்திக் கொள்ளல்.

❖ முன்னங்கைகளைப் பந்து அண்மிக்கும் வேளையில் முழங்கால் கள் சற்று அகன்று இருக்கு வண்ணம் கால்களை இடப்படுத் திக் கொள்ளல். அத்துடன் இரு கைகளையும் ஒன்றாகச் சேர்த்து பந்தினை எதிர் கொள்ளல்.

❖ கைகளிரண்டும் நெருக்கமாக ஒன்றோடொன்று சேர்ந்திருப் பின் நாம் விரும்பிய வகையில் விரும்பிய இடத்திற்கு கைகளை அசைக்கவோ, பந்தை செலுத்தவோ முடியாது.

❖ வலையில் பட்டுத் தெறித்து விழும்பந்தை உயர்த்திக்கொடுக்க மிக இலகுவான முறையாகும்.

❖ தமக்கு முன்னே தரைக்கு வெகு அண்மித்து விழப்போகும் சந்தர்ப்பத்தில் முன்நோக்கிப் பாய்ந்து பந்தை பந்தின் பின் புறத்தில் உள்ளங்கையாலோ, மணிக்கட்டாலோ தட்டுவௗடன் நிலத்தின் விழுந்து உருண்டு பின்னர் கைகளை ஊன்றி சம நிலையை அடைதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கீழ்க்கை கடத்தல்



மிகவும் தாழ்வாக வரும் பந்தை கைவிரல்களை மூடி மணிக் கட்டினால் அடிக்கையில் தவறுகள் ஏற்பட இடமேயில்லை.

* மைதானத்தில் குந்தியிருந்து இறுக்கமாக மூடிய நிலையில் கைகளை முன்னே நீட்டல் மூடப்பட்ட விரல்கள் ஆகாயத் தைப் பார்த்த வண்ணம் இருத்தல் வேண்டும்.

* வரும் பந்தை நீட்டிய கையின் உள்புற மணிக்கட்டால் மேல் நோக்கி தட்டுதல்.

* இதன் தோள் மூட்டும் மணிக்கட்டும் ஒன்றிணைந்து செயற் பட வேண்டும்.

* இதே போன்று மணிக்கட்டின் மேற்பாகத்தாலும் அடிக்கலாம்

* இவ்வாறு பந்தைத் தடுக்கையில் இன்னொருவர் அதை எடுக் கக் கூடியளவு உயரத்திற்கு தட்டுதல் மிகவும் விரும்பத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ii) வொலி பாஸ் முறை (Volley Pass)

UNIVERSITY OF PERADENIYA 8-11-1995 LIBRARY

இது இரு கைகளாலும் (10 விரல்கள்) பந்தை உயர்த்தும் ஒரு முறையாகும். எதிரணியிலிருந்து உயரமாக வரும் பந்தை ஆடுவதற்கு இம்முறை மிகவும் சிறந்தது. ஆனால் இடுப்பு மட்டத்தில் வரும் பந்தை உயர்த்த சிறந்த முறை டிக்பாஸ் முறையே. கால்களை சற்று முன் பின்னாக வைத்து நிலை கொள்ளல்.

* முழங்கால்களை சற்று முன் வாங்கிய நிலையில் முண்டத்தை நேராகவும் உடலைச் சற்று முன் வளைத்தும் நிற்றல்
* முழங்கைகள் தோளுக்கு சமாந்தரமாக சற்றுத் தாழ்வாக இருக்கும் வண்ணம் கைகளை முகத்திற்கு நேரே வைத்திருத்தல்.
* கைவிரல்கள் விரிந்த நிலையில் ஒன்றையொன்று பார்க்கும் வண்ணம் கோண வடிவில் அமைதல் வேண்டும்.
* மணிக்கட்டுகள் ஒன்றையொன்று அதிகமாக நெருக்காமல் சற்று விலகி இருத்தல்.
* பந்து அண்மையில் வரும் வேளையில் முழங்காலை இன்னும் சற்று மடித்து உடலை சற்று பின்புறமாக வளைத்து முன் புறமாக பாய ஆயத்தமாயிருத்தல்.
* கைகளை நாடிக்கு முன்பாக வைத்திருந்து வரும் பந்தை நெற்றிக்கு மேலோகத் தூக்குதல்.
* பந்தை எப்போதும் முகத்திற்கு நேராகவே சந்தித்துத் தூக்குதல் வேண்டும்.
* முழங்கையானது தோளுக்கு சமாந்தரமாக வந்து முழங்கால்களாலும் இடுப்பாலும் குனிந்து பந்து கையில் படும்போதே அதை அனுப்புவதுடன் நாமும் நேராகி விடுதல் வேண்டும். 10 விரல்களும் ஓரே நேரத்தில் பந்தில் படுதல் மிகவும் அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* வீரர்கள் பந்தினில் பட்டவுடன் உடலைப் பழைய நிலைக்குக் கொண்டு வந்து மணிக்கட்டால் உந்திக் தள்ளுதல் வேண்டும்.

பந்து கடத்தும் வீரர்களுக்கான சில உதவிக் குறிப்புகள் (Hints for Passers)

* பந்து காத்தல், கடத்தல் சம்பந்தமான நுட்பங்களை முறையாகவும் முழுமையாகவும் பயிலுதல் வேண்டும்.
* பந்து கடையியாக்கப்பட்ட வீரர் அறைபவரது நிலை, என்ன என்பது பற்றிய போதிய அறிவு தேவை.
* எப்போதும் பந்திமிலேயே கண்ணாயிருத்தல் வேண்டும்.
* தான் ஆட வேண்டிய நிலைகள் பற்றிய கவனம் தேவை.
* பந்து வரும் வரை காத்திராமல் தானே சென்று பந்தை தொடுகையுறல் வேண்டும்.
* வலையின் அன்மையில் கவனமாக ஆடுவதுடன் மைதானத்துக்கு வெளியே செல்லும் பந்தினை ஆடாமல் விடல். (நமதணியில் பட்ட பந்து தவிர்த்தல்) நன்று.
* அநாவசியமாக ஒரு கையினைப் பாவிப்பதை தவிர்த்தல் நன்று.
* அறைபவருக்கு தேவைப்படும் உயரம், தூரம் என்பவற்றை கணக்கிட்டுப் பந்தை உயர்த்தல் வேண்டும்.
* எதிர்பாராத சந்தர்ப்பத்தில் பாய்ந்து உயர்த்திக் கொடுத்தல் சிறந்த பயனைக் கொடுக்கும்.
* ஒரே இடத்திலேயே பந்தை உயர்த்திக் கொடுத்துப் பழகாமல் முன், பின், வலம், இடம் என தாலா பக்கங்களுக்கும் மாற்றி மாற்றி உயர்த்தப் பழகுதல் வேண்டும்.

நொறுங்க அறைதல் (Spiking)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறைதல் என்பது எதிரணியினரை திறனடிக்கும் ஓர் தாக்குதல் ஆயுதமாகும். ஆட்டத்தில் மிகுந்த விறுவிறுப்பும், பிரமிப்பூட்டும் ஓர் நிகழ்ச்சியாக இது அமைகின்றது. எதிரணியினரின் பாதுகாப்பு அரண்களை உடைத்தெறியும் சக்தி வாய்ந்த இத்தாக்குதல் ஆயுதங்கள் எதிரணியினரை உளவியல் ரீதியாக வலுவிளக்கச் செய்யவும் உதவுகின்றது. இத்தாக்குதல்களின் பயன்கள் முழுமையாகப் பெற பின்வரும் நடவடிக்கைகளில் கவனம் செலுத்த வேண்டியது மிகவும் அவசியம்.

i. அணுகுமுறை (Approach)
ii. மிதித்தெழல் (Take off)
iii. நிலம்படல் (Landing)
iv. அறைதல் (Spiking)

I அணுகுமுறை (Approach)

✤ அறைபவரின் கண்கள் எப்போதும் பந்திலேயே இருத்தல் வேண்டும். பந்து பயணம் செய்யும் திசையை அறிந்து தாக்கற் பிரதேச எல்லையின் மூலையினின்று 2–3 கவடுகளில் ஓடிவந்து தான் எண்ணும் உயரத்திற்குப் பாய்தல்.

✤ முதலிரண்டு கவடுகளையும் விட கடைசிக் கவடு சற்று அகலமானதாகவும் வலுவானதாகவும் அமைதல் வேண்டும்.

✤ அறையுமுன்னர் பந்து பயணம் செய்யும் திசையையும் எதிரணியின் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் கவனித்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

II மிதித்தெழல் (Take off)

அறைபவர் தாக்கற் பிரதேச எல்லையினின்று 2-3 கவடுக ளில் ஓடி வருதல் வேண்டுமெனவும் கடைசிக்கவடு ஏனைய கவடு களைவிட சற்று அகலமாயிருத்தல் வேண்டும் எனவும் முன்னர் அறிந்தோம்.

- 3 வது கவடு ஏனைய கவடுகளைவிட சற்று அகலமாயிருப்ப துடன் நுனிவிரல்களால் உந்திப் பாய்ந்து மிதித்தெழல் வேண்டும்.
- பின்னேயுள்ள கையை கூடிய விசையுடன் முன்னே கொண்டு வருவதால் கூடிய உயரத்திற்குப் பாய்தல் சாத்தியமாகும்.
- பாயும்போது முன்னங்காலினால் சற்று கூடுதலாக உந்திப் பாய்ந்தெழுந்து பின்காலினையும் அத்துடன் சேர்த்தல் வேண்டும்.
- வலக்கைப் பக்கமுள்ள ஒருவர் வலக்காலினால் கூடிய விசை யையும் இடக்கைப் பழக்கமுள்ள ஒருவர் இடக்காலினால் கூடிய விசையையும் சேர்த்து உந்திப் பாய்தல் வேண்டும்.
- அறையும் நிலைக்கு வருவதற்காக வானில் எமது உடலை சற்று பின்னோக்கி வில் போன்று வளைத்தல் வேண்டும்.
- அடிக்கும் கையானது தலைக்குப் பின்னாலிருந்து முன்னோக்கி வருதல் வேண்டும்.
- அடிக்கையில் எமது உடலின் முழுப்பாரமும் பந்தில்படும் வண்ணம் உடலை முற்புறமாக வளைத்துப் பாய்ந்து அறை தல்.
- நிலம்படுகையில் நுனிக்காலால் முதலில் தரையிறங்கி சம நிலையைப் பேணல் வேண்டும்.

III நிலம்படல் (Landing)

சமநிலையினை அடைவதற்காக நுனிக்கால்கலால் தரையிறங்கி குதிக்கால்களை ஊன்றி கைகளை விரித்து சமநிலையைப் பேணல்

IV அறைதல் நிலைகள்

- அறைதலில் ஈடுபடும் போது எமது உடலை வில் போன்று அமைப்பின் பின் பக்க வளைந்த நிலையில் வேகமாக முன் னால் கொண்டு வந்து அறைதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அறையும் கையானது நமது தோளுக்கும் தலைக்கும் பின்னாலிருந்து வேகமாக முன்னோக்கி வருதல் வேண்டும்.
- அறைதலில் ஈடுபடாத கையானது எமது உடலுக்கு சற்று முன்புறமாக நீண்டு இருத்தல் வேண்டும்.
- அறையும் பேபது மணிக்கட்டானது தளர்வாயும் வேகமாக இயங்கக் கூடிய நிலையிலும் இருக்க வேண்டும்.
- எமது உடலுக்கு 2' தூரத்தில் நிலத்திற்கு சமாந்திரமாக தலைக்கு மேலே பந்து உயரமாக வருகையில் உந்திப்பாய்ந்து பந்தை நிலத்திற்கு சமாந்திரமாய் வைத்து அறைதல் வேண்டும்.
- அறையப்போகும் நிலைக்கு முந்திய நிலையில் முழங்கை எதிரணியை நோக்கியும் கைவிரல் தலைக்கும் தோளுக்கும் பின்னாலும் இருத்தல் வேண்டும்.

04. தடுத்தாடல் (Blocking)



எதிரணியிடமிருந்து வரும் பந்தை தனது ஆடுகளத்தினுள் நிலம்படாதவாறு தடுத்தலே இதன் முக்கிய நோக்கமாகும். எதிரணியிடமிருந்து வரும் பந்துகளை தொடர்ந்து தடுத்தாடுதல் மூலம் எதிரணியினரை உளவியல் ரீதியாக தளர்வடையவும் செய்யலாம். அத்துடன் தமதணிக்கு மென்மேலும் நம்பிக்கையையும் ஊட்ட முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தாக்குதலைத் தொடர்ந்து அதனை முறியடிப்பதற்கே தடுத்தல் அவசியமாகின்றது. தடுத்தலில் ஒற்றைத்தடுப்பு, இரட்டைத்தடுப்பு, கூட்டுத்தடுப்பு என பல முறைகள் உண்டு.

தடுக்கும் முறைகள்

- வலையின் அண்மையில் கால்கள் சற்று பின் நோக்கி நிற்கும் வண்ணம் முழங்கால்களை மடித்து காலின் நுனிப்பகுதியில் உந்திப் பாய்ந்து வலைக்கு மேலால் இயன்றவரையில் கைகளை உயர்த்துதல்.
- எமது மணிக்கட்டின் மேற்பகுதி வலைக்கு மேலால் போகும் அளவிற்கு உயரப் பாய்தல் போதுமானது.
- பாய்ந்து தடுக்கையில் சமாந்திரமாக நின்று கைகளை நீட்டு வதை விடுத்து எமது உடலை சற்று முன் வளைத்து கைகளை வலையை நோக்கி நீட்டுதல் வேண்டும்.
- உயரப் பாய்கையில் எமது வயிற்றுப் பகுதியை உள்ளிழுத்து நுனிக்கால்களால் உந்திப் பாய்ந்து கைகளை வலையை நோக்கி நீட்டுதல் வேண்டும். நீட்டப்பட்ட கைகள் இறுக்கமான நிலையில் இருத்தல் வேண்டும்.
- கை விரல்கள் மணிக்கட்டினின்று சற்று முன் மடிந்த நிலையில் இருத்தல் வேண்டும்.
- பந்து பயணம் செய்யும் பாதையையும் அடிப்பவரின் சாமர்த்தியத்தையும் கணக்கிட்டு அதற்கேற்ப தடுத்தாடலில் ஈடுபடல் வேண்டும்.
- எந்நேரமும் பந்திலேயே கண்ணாயிருத்தல் வேண்டும்.
- எதிரணித் தாக்குதல் வீரர்களதும் பந்தை உயர்த்திக் கொடுப்பவர்களதும் நிலைகளை அவதானித்து அதற்கேற்ப தடுப்புகளை அமைத்தல் வேண்டும்.

சிறந்த தடுப்புக்குரிய உதவிக் குறிப்புகள்

- பந்து உயர்த்தப்படும் திசை அடிப்பவரின் குறி என்பனவற்றிலும் கவனமாயிருத்தல்.
- நேரக் கணிப்பில் மிகுந்த கவனம் தேவை. அதாவது மேலே உயர்த்தப்பட்ட பந்து அறைபவரின் வசதிக்கேற்ற உயரத்தில் வரும் வேளையில் தடுப்பாளர்களின் கைகள் பந்தை மறைக்கும் வகையில் அவர்களது பாய்ச்சல் இருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அறைபவர் பாய்வது போன்ற உயரத்திற்குப் பாயத் தேவையில்லை. ஆனால் முழங்கையின் மேல் பாகம் வலையின் மேல் இருக்கும் வண்ணம் பாய்ந்தாலே போதுமானது.
- அறைபவரின் கையசைவிற்கேற்ப தடுப்பாளர்களின் கையசைவுகளும் காணப்படல் வேண்டும்.
- அறைபவரின் வழமையான இடம் வலுவான அசைவுகள் தடுத்தாடல் பற்றிக் கவனமாயிருத்தல் வேண்டும்.
- எதிரணியினரின் நடவடிக்கைகளில் நுணுக்கமான கண்ணோட்டம் தேவை.
- வலையின் மேலாக வரும் பந்தைத் தடுத்தாட நமது அணியின் சிறந்த பாதுகாப்பாட்ட வீரருக்கு பந்தை எடுத்தாடக் கூடிய தெளிவான பாதையை ஏற்படுத்திக் கொடுத்தல் வேண்டும்.
- எதிரணியின் அறைபவரின் நேரக் கணிப்பிற்கு முன்பதாக எமது கைகளை வலைக்கு மேலாக தூக்கி தடுத்தாட முனைதல் கூடாது.
- தடுத்தாடிய பந்து தமதாடுகளத்தினுள்ளோ, தமது பக்கத்துள்ளோ விழும் சந்தர்ப்பங்களில் அவற்றை சுறுசுறுப்புடன் மீண்டும் எடுத்தாடல் வேண்டும்.
- தடுத்தாடலில் முழுமையை அடைய வேண்டின் தொடர்ச்சியானதும் கடுமையானதுமான பயிற்சிகள் இன்றியமையாதனவாகும்.

05. பாதுகாத்தல் (Defending)

மேற் கூறப்பட்ட சகல திறன்களையும் தம்முள் அடக்கமாகக் கொண்டிருந்தாலும் பாதுகாத்தல் திறனில் திறமையில்லாத ஒருவர்/அணியினர் ஆட்டங்களில் வெற்றி பெறல் மிகமிகக் கடினமான தொன்றாகும்.

பாதுகாப்பு 3 நிலைகளில் மேற்கொள்ளப்படுகின்றது அவை:

i) அறைதலைத் தொடர்ந்து ஈடுபடும் பாதுகாப்பு
ii) உத்திகளைத் தொடர்ந்து ஈடுபடும் பாதுகாப்பு
iii) வேகமாக வரும் பந்தைத் தொடர்ந்து ஈடுபடும் பாதுகாப்பு என்பனவாகும்.

அறைதலைத் தொடர்ந்து வரும் பாதுகாப்பு

தரைக்கண்மையில் தாழ்வாக வரும் பந்துகளை 'டிக்பாஸ்' முறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலமும் தலைக்கு மேலாக வரும் பந்தை 'வொலிபாஸ்' முறை மூலமாகவும் தடுத்தாடலாம். பணித்தலை மேற்கொள்ளுகையில் எமது நிலைகளை சாவதானமாக நிலைப்படுத்திக் கொள்வதற்கு கிடைக்கும் அவகாசம் இதன்போது கிடைப்பதில்லை. ஆயினும் சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற வகையில் உடனடியாக செயற்பட வேண்டியதவசியம்.

- தோள் மட்டத்திற்கு சற்று அகலமாக எமது கால்களை வைத்து நிலை கொள்ளல்.

- உடற்பாரம், இரு கால்களுக்கும் சமமாகக் கொடுக்கப்படுவதுடன் வயிற்றுப் பகுதியை உள்ளிழுத்து முன் பக்கமாக சற்று சரிந்து நிற்றல்.

- முழங்கால்களிரண்டும் கால் விரல்களினின்று சற்று முன்பக்கம் தள்ளிக்கொண்டிருக்கும் வண்ணம் மடிந்திருப்பதுடன் உடலையும் சற்று முன்பக்கமாக சரித்து நிற்றல்.

- தலையானது நிமிர்ந்த நிலையில் கண்கள் பந்தை நோக்கிய வண்ணமும் இருத்தல் வேண்டும்.

- தோள் மூட்டு இறுக்கமின்றி சற்று தளர்வாயும் (Relax) இருத்தல்.

- முழங்கைகள் சற்று இலேசாக மடிந்த நிலையில் முன்னகைகள் வலையை நோக்கி சற்று நீண்டும் இருத்தல் வேண்டும்.

இதுவரையில் நாம் வொலிபோல் ஆட்டத்தின் முக்கிய திறன்களையும் அவற்றிற்கான நிலைப்பாடுகள் உதவிக் குறிப்புகள் என்பவற்றையும் அறிந்து கொண்டோம். இவ்வடிப்படைத் திறன்கள் கரப்பந்தாட்டத்தின் முக்கியம் வாய்ந்தவைகளாகும். ஒன்றையொன்று விட்டுப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிய முடியாத மிதமிஞ்சிய வகைகளில் ஒன்றாக இணைந்துள்ளன. அவற்றில் ஏதாவது ஒரு திறனில் குறைபாடுகள் காணப்படுமாயின் சிறந்தவொரு விளையாட்டு வீரனாகவோ / அணியாகவோ உருவாதல் முடியாத ஓர் காரியமாகும். எனவே மேற் காணப்பட்ட இத்திறன் களை முழுமையாகவும் விருப்பத்துடனும் பயில வேண்டியது மிகமிக அவசியமாகின்றது.

புதிய விளையாட்டு வீரர்களும், பயிற்சியும்

''வொலிபோல்'' ஓர் தேசிய விளையாட்டாகப் பிரகடணப் படுத்தப்பட்ட பின்னர், நமது நாட்டில் வெகு வேகமாக முன்னேறி, வருவதை நீங்கள் அறிவீர்கள். பிற நாடுகள் கூட, பலவகையான உத்திகளையும் நுட்பங்களையும் ஆராய்ந்து போட்டியில் வெற்றிபெற தத்தம் அணிகளைத் தயார் செய்தும் வருகின்றன. இலங்கையைப் பொறுத்த வரையில் இவ் ஆட்டம் பல மைல் கற்களைக் கடந்து முன்னேற்றப் பாதை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றது. இதற்கு அண்மையில் நடைபெற்ற 05வது தெற்காசிய விளையாட்டுப்போட்டி ஓர் சிறந்த உதாரணமாகத் திகழ்கின்றது.

இன்றைய இளம் சமுதாயத்தில் எத்தனையோ இளம் வீரர்கள் இலைமறை காய் போன்று காணப்படுகிறார்கள். இவ்விளைஞர்கள் தமது திறமைகளை வெளிக்காட்டத் துடியாய்த் துடித்துக் கொண்டிருப்பதைக் காணக்கூடியதாய் இருக்கின்றது. இவர்களுக்கு சிறந்த பயிற்சிகளை அளித்து அவர்களை நாளைய சிறந்த வீரர்களில் ஒருவராக்கு வது பயிற்றுவிப்பாளர்களாகிய எமது கைகளிலேயே தங்கியுள்ளது. உடற்கல்வி ஆசிரியர்கள், பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் இத்துறையில் ஆர்வமுள்ள ஏனையோர் அனைவரும் சேர்ந்து இந்த இளம் சமுதா யத்தினரை நல்லதொரு எதிர்காலத்திற்கு இட்டுச் செல்ல வேண்டியது மிகவும் அவசியம். பயிற்சி என்பது சிறுபிராயம் தொட்டே முறையா கப் பயிற்றுவிக்கப்பட வேண்டியதொன்றாகும். பின்வரும் ஆலோச னைகள் புதிய விளையாட்டு வீரர்களைத் தெரிந்தெடுத்துப் பயிற்சி அளிக்கக் கூடிய சில குறிப்புகளை உள்ளடக்கியுள்ளது. இவ் ஆலோச னைகள் இவற்றிற்கு மிகவும் உறுதுணையாக இருக்கும் என எண்ணு கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* பயிற்சிக்கெனத் தெரிந்தெடுக்கப்படும் வீரர்கள், வேகம் உடற்பலம், தாங்குமியல்பு, நெகிழும் தன்மை, துவளும் தன்மை, போன்ற அடிப்படை உடற்தகைமைகளையும், விடாமுயற்சி தன்னம்பிக்கை, இறுதிவரை போராடும் தன்மை போன்ற சிறந்த பண்புகளையும் கொண்டிருத்தல் வேண்டும். (உயரம் கூடியவர்கள் விரும்பத்தக்கது)

* புதிதாகத் தெரிந்தெடுக்கப்பட்ட பயிற்சியாளர்களை எடுத்த எடுப்பிலேயே மைதானத்தினுள் வலைக்கண்மையில் ஆட விடுதல் முறையன்று. அவர்கட்கு முதலில், அவ்வாட்டம் பற்றிய அடிப்படைத் திறன்கள், நுட்பங்கள் போன்றவற்றை ஒவ்வொன்றாகவும், தெளிவாகவும் பயிற்றுவித்தல் வேண்டும்.

* ஒவ்வொரு திறனையும் முழுமையாகப் பயிற்றுவித்த பின்னரே அடுத்தடுத்த திறன்களைப் பயிற்றுவிக்க வேண்டும். ஒவ்வொரு திறனையும் முழுமையாகவும், முறையாகவும் பயின்ற பின்னரே அவரை மைதானத்துள் பயிற்சியில் ஈடுபடுத்தல் வேண்டும். அல்லாவிடில் பயிற்சியாளரினதும் பயிற்றுவிப்பாளரினதும் நோக்கங்கள் நிறைவேறியதாகாது.

* கடுமையான பயிற்சிகளின்றி நேரடியாக ஆட்டத்தில் ஈடுபடுவதனால் கைவிரல்கள், மூட்டுக்கள் போன்ற உறுப்புக்களுக்குப் பங்கம் ஏற்படவும் இடமுண்டு. அத்துடன் எமது குறிப்பிட்ட இலக்கு, திருப்தி என்பனவற்றையும் அடைய முடியாமலும் போகலாம்.

* பயிற்சியின் ஆரம்பத்தில் குழுப்பயிற்சியின் அடிப்படையிலேயே நுட்பங்கள், திறன்கள் போன்றன பயிற்றப்பட வேண்டும். ஏனெனில் இது ஒரு குழு விளையாட்டு எனும் மனப்பாங்கை இதனால் வளர்க்க முடியும்.

* ஒவ்வொரு திறனுக்கும் திட்டமிடப்பட்ட முறையான பயிற்சிகள் அவசியம். அப்போது தான் நாம் எதிர்பார்க்கும் பயனையும் அடைய முடியும்.

* ஒவ்வொரு பயிற்சியாளர் மட்டிலும் விஷேட கவனம் செலுத்துதல் ஒவ்வொரு பயிற்றுவிப்பாளரதும் முக்கிய கடமையாகும்.

வீரர்களை பயிற்றுவித்தலுக்குரிய உதவிக் குறிப்புகள்

* திறமையானதும் அனுபவம் வாய்ந்ததுமான இரு அணிகள் கலந்து கொள்ளும் ஆட்டம் ஒன்றினை நேரிடையாகவோ அல்லது தொலைக்காட்சி மூலமாகவோ பார்வையிடுவதற்குச் சந்தர்ப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளித்தல். ஆட்டம் நடைபெறும் வேளையின் போதே அதில் காணப்படும் குறை நிறைகளைச் சுட்டிக்காட்டி அவற்றை நிவர்த்தி செய்யும் வழிமுறைகளையும் எடுத்துக் கூறல்.

* பின்னர் அனுபவமும் திறமையும் உள்ள வீரர்கள் கலந்துகொள்ளும் பயிற்சிகளில் பங்குபற்றச் செய்தல். பிழைகள் விடப்படுமிடத்து அவற்றை அவ்விடத்திலேயே சுட்டிக்காட்டி அவற்றை நிவர்த்தி செய்யும் வழிமுறைகளையும் எடுத்துக் கூறல்.

* இது ஒரு குழு விளையாட்டு என்பதனை நினைவூட்டுவதுடன் பயிற்சியாளர்களை சற்று நேரம் (10 நிமிடம்) மைதானத்துள் ஆடவிட்டு பின்னர் அனைவரையும் ஓரிடத்தில் கூட்டி குறைநிறைகளை ஆராய்தல்.

* பொதுவான அடிப்படைத் திறன்களை விளக்கமாகவும் முறையாவும் பயிற்றுவித்தல் வேண்டும். இவ்வேளையில் ஒவ்வொரு பயிற்சியாளராகச் சென்று அவர்களது பிழையான உடல் நிலைகளைத் திருத்தி சரியான நிலைகளை விளக்கிச் செய்து காட்டல்.

* பந்தை வலையின் மேலால் போட்டு, அதை அவர்கள் திருப்பி அனுப்புகையில் ஏற்படும் தவறுகளை அவ்விடத்திலேயே சுட்டிக்காட்டி. அவற்றை முறையாகச் செய்து காட்டல் அல்லது செய்யும்படி செய்தல், இதன்போது அவர்களது உடல்நிலை, விரல்களது நிலைகைகளின் நிலை என்பனவற்றையும் முறைப்படி செய்து காட்டல்.

* பயிற்சியாளர்களை அரைவட்டமாகவிட்டு பயிற்றுவிப்பாளர் நடுவில் நிற்றல் வேண்டும். ஒரு குறிப்பிட்ட திறனை 10 — 15 நிமிடங்கள் வரை பயிற்றுவித்தல். அதன் பின்னர் பயிற்சியின் போது அவர்கள் விட்ட பிழைகளை அப்பொழுதே அவ்விடத்தில் சரிசெய்தல்.

* பின்னர் குழுத்தலைவரின் கீழ் அதே திறனைப் பயிற்றுவித்தல் பிழைகளை அந்தந்த இடத்திலேயே திருத்துதல்.

* சுற்று ஒன்று முடிவடைந்தவுடன் மீண்டும் ஒரு புதிய தலைவரின் கீழ் இதே பயிற்சியைத் தொடர்தல்.

* இதே பயிற்சியைத் தொடர்ந்து கைகளால் பந்தைப் பிடிக்காமல் தொடர்ச்சியாக ஒவ்வொருவராகப் பந்தைக் கையாளச் செய்வதுடன், முன்னர் பயிற்சி அளிக்கப்பட்டது போல் ஓர் தலைவரின் கீழ் பயிற்சியைத் தொடர அனுமதித்தல். சுற்று ஒன்று முடிவடைந்ததும் மீண்டும் இன்னொரு தலைவரின் கீழ் பயிற்சியைத் தொடரச் செய்தல்.

* கீழ்க் கைப் பணித்தலை மேற் கொள்ளுகையில் உள்ள, கைகளின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலை, உடலசைவுகள் போன்றனவற்றுக்குரிய தகுந்த நிலைகளை விளக்கி, செய்து காட்டுவதுடன் இரு குழுக்களாகப் பிரித்து பயிற்சியில் ஈடுபடுத்தல். பயிற்சி நடைபெறும் வேளையிலேயே பிழைகள் சுட்டிக்காட்டப்பட்டு உடனடியாகத் திருத்தப்படல் வேண்டும்.

* இரு அணிகட்குமிடையில் பணித்தல் போட்டி ஒன்றினை ஏற்படுத்தி பிழைகளை சுட்டிக்காட்டி திருத்தல்.

* வலைக்கண்மையில் பயிற்சியாளர்களை விட்டு எதிரணிக்குப் பந்தைக் கடத்தும்படி செய்தல். பிழைகளை அவ்விடத்திலேயே சுட்டிக்காட்டித் திருத்துதல்.

* பணித்தல் பிரதேசத்தில் பயிற்றுவிப்பாளர்களை நிறுத்தி பணிக்கச் செய்து குறைநிறைகளை சுட்டிக்காட்டல்.

* 6 பேர் கொண்ட இரு குழுக்களை மைதானத்துள் நிறுத்தி 10 நிமிட நேர ஆட்டத்திற்கு ஒழுங்கு செய்தல். இதன்போது குழு முயற்சி, பிரதியீடுகள், அணிக்குரிய 3 தொடுகை என்பன இடம் பெறும் வண்ணம் ஒழுங்கமைத்தல் வேண்டும்.

* இறுதியாக, நன்கு அனுபவமும் திறமையுமுள்ள வீரர்களுடன் கலந்து ஆட்டத்தில் ஈடுபடச் செய்தல்.

* ஒவ்வொரு திறனுக்கும் இத்தகைய தனித்தனியான பயிற்சிகள் அத்தியாவசியம் என்பதை உணர்தல்.

இவை தவிர ஒவ்வொரு திறனுக்கும் இவ்வாறான தனிப்பயிற்சிகள் அளிப்பதன் மூலம் தத்தமது தனித்திறமைகளை விருத்திசெய்து கொள்வதுடன் அணிகளது வெற்றிக்கும் வழி பிறக்க உதவுகின்றது. அதற்கான அறிவுறுத்தல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

01. அறைதலும் உயர்த்திக்கொடுத்தலும்: (SPIKING ANDBOOSTING)

இத்திறன்கட்குரிய முறையான அணுகுமுறை, மிதித்தெழல், கைகளின் சுழற்சி, என்பனபற்றி முறையாக விளக்கி மணிக்கட்டின் சுழற்சி, விரல் அசைவுகள் பற்றியும் எடுத்துக்காட்டல் வேண்டும். பந்தின் உதவி இன்றியும், வலையின் அண்மையிலும் இவற்றைப் பயிற்றுவித்தல் வேண்டும்.

02. தடுத்தாடல்: (BLOCKING)

பல வகையான தடுப்புகள் இருப்பினும் தனித்தடுப்பினை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஒற்றை தடுப்பு) யேனும் திறமையாகவும் முழுமையாகவும் பயி லுதல் வேண்டும்.

அணுகுமுறை, மிதித்தெழல், கைகளின் நிலை, பாயும் நேரக் கணக்கீடு, என்பனவற்றில் மிகுந்த அவதானத்துடன் பயிற்சிபெறல் வேண்டும். ஒற்றைத் தடுப்பு முறையை ஒழுங்காகச் செய்து காட்டி பயிற்சி கொடுத்தல் வேண்டும். வலையின் மேலால் பந்தைத் தொடுதல் பற்றிய படிப்படியான ஒவ்வொரு நிலையையும் செய்து காட்டி தடுத்தலின் ஒவ்வொரு அடிப்படை நுணுக்கங்களையும் தெளிவாகப் பயிலும் வரை அவர்களை அறைதலில் ஈடுபடுத்தாமல் தனிப்படுப்பை முறையாகப் பயிற்று தல் வேண்டும். பின்னர் குழுக்களுக்கு பந்தை உயர்த்திக் கொடுத்தல், தடுத்தல், அறைதல் எனும் 3 நிலைகளையும் ஒன் றாகவே பயிற்றுவித்தல்.

03: பாதுகாத்தல்: (DEFENDING)

தனித்தடுப்பை/பாதுகாத்தலை முழுமையாகப் பழகுதல். நிலத் தில் குந்தி இருக்கையில் உடல் நிலைகளை அவதானித்தல், தடுத் தலின் தொடர்ச்சியான உடலசைவுகளில் கவனம் செலுத்துதல் என்பனவற்றில் கூடிய கவனம் செலுத்துதல் வேண்டும். வலைக் கணமித்து மிகவும் தாழ்வாக வரும் பந்து பற்றி மிகுந்த கவனம் தேவை. பந்தைக் கைகளால் தூக்கி வாரிப்போடல், பந்து கை களில் தங்குதல் போன்ற விடயங்களை தவிர்ப்பதில் கூடிய கவ னம் எடுத்தல் வேண்டும்.

04. பணித்தல்: (SERVICING)

வலையின் மேலால் பந்தைப் பிழையின்றி அனுப்புதலே பணித் தலின் முக்கிய நோக்கம் ஆகும். பலதரப்பட்ட பணித்தல் பற்றிய கவனம் தேவை. குறிப்பிட்ட ஒரு பணித்தலில் முழுமையான பயிற்சியைப் பெற்றுத் தேறிய பின்னரேயே, அடுத்த பணித்தல் பற்றிய பயிற்சியினைப் பற்றி எண்ணுதல் வேண்டும். இலக்குப் பணித்தலின் அடிப்படைத் திறன்களை முழுமையாகக் கற்று அதற்கேற்ப பயிற்சி பெறல் வேண்டும்.

போட்டிக்கென ஒரு குழுவைத் தயார் செய்தல்

போட்டிக்கென, ஓர் அணியைத் தயார செய்வதென்பது ஓர் இலகுவான விடயமன்று. ஆயினும் முறையான திட்டமிடல், ஒழுங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கான பயிற்சி, நடைமுறைப்படுத்தல் என்பவற்றின் மூலம் சிறந்த முறையில் ஓர் குழுவைத் தயார் செய்ய முடியும்.

பயிற்சிக்கென வீரர்களைத் தெரிவு செய்யும் போது பின்வரும் விடயங்களைக் கவனத்தில் கொள்ளல் மிக அவசியமாகும்.

- நல்ல உயரம், உடல்வாகு, இறுதிவரை போராடுந்தன்மை, தளராத நம்பிக்கை, பற்று இளமை, கணிசமான முன் அநுபவமும் பயிற்சியும் போன்றவை கவனத்தில் கொள்ளப்படல் வேண்டும்.
- அறைபவர்கள், போதியளவு உயரம், கணிசமான உடற்பலம், தாங்குமியல்பு, வலுவான கால்கள் போன்றவற்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.
- பந்தை உயர்த்திக் கொடுப்பவர்கள், அதிக உயரமாக இல்லாவிடினும் துரிதம், வேகம், தாங்குமியல்பு, பாய்ந்து வலைக்கு மேலால் கைகளை நீட்டித்தடுத்தல் போன்ற பண்புகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

கரப்பந்தாட்டத்தை, வெறும் பொழுது போக்காகவும், கேளிக்கைக்காகவும் ஆட விரும்பின், கடுமையான பயிற்சிகள் அவசியமில்லையாயினும், தற்போது உலகளாவிய ரீதியில் இந்த ஆட்டம் பிரமிக்கத்தக்கதாய் அமைவதைப் பார்க்கையில் இதன் முக்கியத்துவம் தெட்டத் தெளிவாகத் தெரிகின்றது. எனவே, இப்போட்டியில் வெற்றி பெற வேண்டுமாயின், ஒழுங்கானதும் கடுமையானதுமான பயிற்சிகள் அத்தியாவசியமாகின்றன.

ஓர் ஆட்டத்தின் வெற்றியானது சிறந்த வழிகாட்டல், முறையான பயிற்சிகள், என்பவற்றிலேயே தங்கியுள்ளது என்பதனை எவரும் மறுக்கவோ மறைக்கவோ முடியாது. ஆட்டத்தின் நுட்பங்களை முழுமையாகப் பயின்று, உடற்தகைமைகளை விருத்தி செய்ய, திட்டமிடப்பட்ட நாளாந்த பயிற்சித்திட்டம் அவசியமாகின்றது. தமது உடலைத் தகுந்த முறையில் தயார் படுத்தாமலும், போதிய பயிற்சிகளின்றியும். திர்க்கமான முடிவின்றியும் மைதானத்துள் ஆடப் புகுவோமாயின், இவ்வாட்டம் பற்றிய எமது நோக்கங்கள், எதிர்பார்ப்புக்கள் எதுவுமே நிறைவேறியதாகாது. நாளாந்த பயிற்சிகள் பெறுவதன் அர்த்தமே அடியோடு அழிந்துவிடும்.

திறமான ஓர் அணியை உருவாக்கத் திட்டமிடப்பட்ட பயிற்சிகள் தேவை என்பதனை நாம் அறிவோம். அத்துடன் சிறந்த பயிற்றுவிப்பாளரொருவர் அவசியம் என்பதனையும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பயிற்றுவிப்பாளர்கள் + பயிற்சியாளர்கள் மத்தியில், ஓர் புரிந்துணர்வும் கட்டுப்பாடற்ற சிநேகபூர்வமான கலந்துரையாடல்களும் இன்றியமையாதனவாகும்.

- பயிற்சிகளின் போது, பயிற்றுவிப்பாளரும் சேர்ந்து பயிற்சிகளில் ஈடுபடும் வேளையில், பயிற்சியாளர்கள் மத்தியில் ஓர் மனத் திருப்தி ஏற்படுவதுடன் பிழைகளையும் உடனுக்குடன் திருத்திக் கொள்ளவும் வாய்ப்பு ஏற்படுகின்றது. ஒருவரைப் பார்த்து மற்றவர் தானும் திருந்த இடமுண்டு.

- நாளாந்த பயிற்சிகளான கயிறடித்தல், துள்ளுதல், நின்ற இடத்தில் ஓடுதல் போன்றவை பயிற்சியாளருக்குச் சிறந்த பயன்களைத் தரும்,

- சில அணிகள், போட்டி நடைபெறும் நாளன்றோ அல்லது அதற்கு முந்தைய நாளன்றோதான், தமதணிக்குரிய வீரர்களை தேடிய லைவதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. இதனால் அணிகளுக்கிடையிலான ஓர் புரிந்துணர்வுக்கு இங்கே இடமில்லாமல் போய்விடுகின்றது.

- போட்டிக்குச் செல்லும் போதோ, போட்டியின் போதோ பயிற்றுவிப்பாளரும் உடன் இருத்தல் மிகவும் விரும்பத்தக்க ஓர் விடயமாகும்.

- குழுப் பயிற்சியே ஓர் அணியினது வெற்றிக்கு மூலதனமாகும். நாம் இவ்வாட்டத்தின் திறன்களை முறையாகவும் முழுமையாகவும் பயிலுதல் வேண்டும். திறன்கள், உத்திகள். நுட்பங்கள் என்பவற்றை ஒழுங்காகப் பயின்ற பின்னரேயே நாம் போட்டியில் குதித்தல் வேண்டும்.

- பயிற்சி என்பது வெறுமனே பந்தை வலையின் மேலால் போட்டு அடித்தல் என்ற பொருளல்ல, முறையான பயிற்சிகளையே அவை குறிக்கும். திறன்கள், நுட்பங்கள், உத்திகள் என்பனவற்றை ஒவ்வொன்றாக, ஒழுங்காகவும் முறையாகவும் பயிலுதல் வேண்டும்.

- பயிற்சிகளின் போதும், பயிற்றுவிப்பாளர் சமுகமளித்திருத்தல் சாலச் சிறந்தது. அப்போதுதான் அவர்கள் விடும் பிழைகளை அந்தந்த இடத்திலேயே சுட்டிக்காட்டித் திருத்த முடியும்; வழிமுறைப்படுத்தவும் முடியும்.

- போட்டிக்கென மைதானத்துள் இறங்கு முன்பதாக வீரர்கள் தமது உடலை செம்மைப்படுத்தி தயார் நிலைக்கு கொண்டுவரச் செய்வதுடன், அவர்கள் வெற்றி பெறுவதற்கான ஆலோசனைக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளையும், உற்சாகத்தையும் ஆசிகளையும் வழங்கி, அனுப்புவது, ஒரு பயிற்றுவிப்பாளர்களது முக்கிய கடமைகளில் ஒன்றானதாகும்.

ஓர் சிறந்த பயிற்றுவிப்பாளன் மேற் கூறிய விடயங்களில் மிகுந்த கவனம் செலுத்துதல் வேண்டும்.

அணிகட்கான சில ஆலோசனைகள் (Suggestions to the Team)

பொதுவான குறிப்புகள்

- பந்து கடத்துதல், உயர்த்துதல் பற்றிய கூடிய கவனமும் பயிற்சியும் அவசியம்.
- அறைதலில் ஈடுபடும் வீரர்கள் கூட பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றிய பயிற்சியைப் பெற்றிருத்தல் வேண்டும்.
- எதிரணியிடமிருந்து வரும் பந்தைத் தடுத்து அதை வளமாக உயர்த்திக் கொடுப்பதன் மூலம் தமதணியினர் ஓர் சிறந்த தாக்குதலை மேற்கொள்ள உதவுதல் வேண்டும்.
- அணியைச் சேர்ந்த ஒவ்வொருவருக்கும் தமது அடுத்த செயல் என்ன, யார் எந்த நிலையில் ஆடுவது, அறையப் போவது யார் வளமாக உயர்த்துபவர் யார், என்ற புரிந்துணர்வு இருத்தல் வேண்டும்.
- எதிரணியிடமிருந்து விசையின்றி வரும் பந்துகளை நேரடியாகவே வலையின் மேலுயர்த்தி அறைவதில் கூடிய பயிற்சியைப் பெறல் வேண்டும்.
- இருவர் அறைவது போல் ஒரே நேரத்தில் பாய்ந்து ஒருவர் அறைதல்.
- எதிரணியினின்று வரும் பந்தை, பின்னணி வீரருக்கு கடத்த, அவர் அதை வலையின் மேல் உயர்த்திக் கொடுத்து அறைதல்
- அணியின் திறமையான வீரர் ஒருவர் சகல துறை ஆட்டக்காரராக நின்று தமதணியை வழிப்படுத்துதல் சிறந்த முறையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ பணித்தல் இடம்பெற்ற பின் தத்தம் திறமைகளுக்கேற்ப தமது நிலைகளை மாற்றி ஆடுவதாயின் அதற்கு வேகம் துரித மென்பன மிக மிக அவசியம். இவற்றை விட நிலைகள் மாறி ஆடியோர், அடுத்த பணித்தலின் போது தமது முந்தைய நிலைக்கு மீளுதல் மிகவும் முக்கியமானதாகும்.

❖ அறைபவர் எப்பக்கமிருந்தும் அறையும் ஆற்றலுடையவராகவும் சந்தர்ப்பத்திற்கேற்ப நுட்பமாக ஆடும் திறமையுடையவராயும் இருத்தல் வேண்டும்.

❖ பந்து உயர்த்தப்படும் இடத்தை எதிரணியினர் புரிந்து கொள்ள முடியாத வகையில் உயர்த்துதல் வேண்டும்.

A அறைதல் வீரருக்கான உதவிக் குறிப்புகள் (Hints for Spikers)

அறைதல், தடுத்தல் பற்றிய அடிப்படை நுணுக்கங்களை முழுமையாகத் தெரிந்து வைத்திருத்தல் வேண்டும். அறைதலில் ஈடுபடும் வீரர்கள் உயரம், தயாரான உடல்நிலை தாங்குமியல்பு, வலுவான கால்கள், விசையுடன் அறையும் ஆற்றல், சரியாக நேரக் கணக்கீடு போன்ற தகமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

❖ பந்தை வளமாக வலையின் மேல் உயர்த்தி அதன் மேற்பரப்பில் உள்ளங்கையால் விசையாக அறைதல் வேண்டும், முழங்கையை மடித்து அறைவதன் மூலம் கூடிய விசையையும் பெறலாம். மணிக்கட்டினசைவுகள் மிக முக்கியமானவை.

❖ பந்து உயர்த்தப்படும் திசையை அறிந்து அதற்கேற்ப அதனை அனுப்பும் திறன் வேண்டும் அறைதலுக்கான மேலெழுகையில் எமது உடல் வில் போன்று வளைந்திருத்தல் வேண்டும்.

❖ வெறுமையான இடங்கள், வீரரின் இடப்பக்கம், காத்தல் திறனில் சற்று குறைவான அநுபவமுள்ள வீரரை இனம் காணல், போன்ற உத்திகளை பாவித்து அறைதல் வேண்டும்.

❖ பந்தை அறைவதற்காக மேலே எழும் நேதித்திலேயே அறைய வேண்டிய இடத்தினையும் கணக்கிடல் வேண்டும்.

❖ எதிரணி எம்மிடமிருந்து பலமானதோர் அறைதலை எதிர்பார்க்கும் வேளைகளில் பந்தை மெதுவாகச் சொட்டிவிடல்.

❖ தடுப்பாளர்களது உயரம், அவர்களது தளர்வடைந்த நிலைகள் என்பவற்றையும் கணக்கிடல் வேண்டும்.

❖ தடுப்பாளர்களது கைகள் அமைந்துள்ள நிலையினை அவதானித்து வேறு பக்கமாகவோ அல்லது கைகளில் பட்டுத் தெறிக்கும் வண்ணம் விசையாகவோ அறைதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ பந்தை வளமாக உயர்த்தப் போகையில் சுற்றிவரத் தடுப்பாளர்கள் காணப்படின் பந்தை பின்னணிக்கு உயர்த்தி மீண்டும் முன்னணிக்குக் கடத்தி அறைதல்.

❖ பந்தை நேரடியாகவே பாதுகாப்பணி எல்லைக்கு நேராகத் தூக்க பாதுகாப்பணி வீரரொருவர் அறைதல்.

❖ பந்தை வலையைவிட்டு சற்று உயரமாக தூக்க, அதிரடி போல் அறைதல்.

❖ பந்தை உயர்த்துவது போல் பாசாங்கு செய்து வெற்றிடங்களில் போடல்.

❖ பணித்தலைத் தொடர்ந்து தத்தமது திறமைகட்கேட்ப உரிய முறையில் நிலைகளை மாற்றி உயர்த்தி அறைதல்.

❖ அறைபவர்கள் 3 நிலைகளிலும் மாறி மாறி அறையக் கூடியவராய் இருத்தல்.

B பாதுகாத்தல் வீரருக்கான உதவிக் குறிப்புகள் (Hints for Defenders)

ஓர் அணியின் வெற்றிக்கு தாக்குதல் எவ்வளவு முக்கியமான ஆயுதமாகத் திகழ்கின்றதோ, அதேபோல் பாதுகாத்தலும் மிகவும் முக்கியமானதாகும். ஆட்டத்தின் தன்மைகளைப் பொறுத்தே அணிகளின் பாதுகாப்பு நிலைகளும் தீர்மானிக்கப்படும். எல்லா வீரர்களாலும் சிறந்த தாக்குதல் வீரர்களாக உருவாக முடியாவிடினும், சிறந்த பாதுகாப்பு வீரர்களாகத் திகழ முடியும். பாதுகாப்புத் திறனை சிறந்த முறையில் கையாளும் அணிக்கோ தனி நபருக்கோ பார்வையாளரின் சிறந்த பாராட்டும், மதிப்பும் கிடைக்குமென்பதில் சந்தேகம் இல்லை.

❖ ஓர் அணியின் பாதுகாப்பு வீரர்களிலேயே, அவ்வணியின் வெற்றியும் தங்கியுள்ளது. எதிரணியினரின் தாக்குதலை வெற்றிகரமாக முறியடித்துத் திருப்பித் தாக்கி வெற்றி பெறுதலே, ஓர் அணியின் சிறந்தபாதுகாப்புத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

❖ எதிரணியினர் பணித்தலை ஏற்றல், வளமாக உயர்த்தல் என்பவற்றைப் பொறுத்தே ஓர் அணியின் பாதுகாப்பாட்டம் அமையும்.

❖ பந்தை உயர்த்துபவருக்கு ஏற்றவகையில் சற்று உயரமாகப் பந்தைக் கடத்தல் வேண்டும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✤ பந்தை உயர்த்துபவர், அறைபவருக்கு தேவையான உயரம், தூரம், நேரக்கணக்கீடு என்பவற்றை கணக்கிட்டு உயர்த்துதல் வேண்டும்.

✤ எதிரணியினரின் பணித்தலைக் கையாள ஓர் திட்டமிடப்பட்ட பாதுகாப்பு நிலை அவசியம், வீரர்கள் தமது இடப்பக்கத்தை சமன் செய்ய இடப்பக்கமாக சற்று சரிந்து நிற்றல் வேண்டும். இதனால் எப்பக்கங்களுக்கும் வளைந்து பந்தைக் கையாள முடியும்

✤ உடல் சமநிலை, பாத அசைவு, அவதானம் என்பவற்றில் கண்ணும் கருத்துமாய் இருத்தல் வேண்டும்.

✤ பணிப்பவரை அவதானிப்பதுடன் எந்நேரமும் பந்திலேயே கண்ணாய் இருத்தல் வேண்டும்.

C தடுப்பாளர்க்குரிய உதவிக் குறிப்புகள் (Hints for Blocking)

பாதுகாப்பணியின் முதன்மையானதும் வலுவானதுமான படி இதுவேயாகும். எதிரணியினரின் தாக்குதலாயுதமான அறைதலைத் தடுப்பதன் மூலம் அவர்களை வலுவிழக்கச் செய்து, புள்ளிகளைப் பெற்று வெற்றியையும் அடையலாம். இதனால் எதிரணியினர் உளரீதியாகப் பாதிப்படையவும் கூடும். பல வகையான தடுப்பு முறைகளை பழகி அவைகளை பாவிக்க வேண்டிய சந்தர்ப்பங்களையும் புரிந்து வைத்திருத்தல் வேண்டும். பின்வரும் குறிப்புகள் சிறந்த தடுத்தாடலுக்கு உறுதுணையாக இருக்கும்.

✤ திறமையாக அறைபவருக்கு கூட்டுத்தடுப்பினையும் (2/3 பேர்) சராசரியாக அறைபவருக்கு தனித்தடுப்பினையும் (ஒருவர்) சற்றுக் குறைவானவருக்கு தடுப்புகளின்றியும் பாதுகாப்பினை மேற்கொள்ளலாம்.

✤ கூட்டுத் தடுப்பின்போது தடுப்பாளர்கள் ஒன்றோடொன்றாகச் சேர்ந்து சுவர் போன்ற ஓர் கடினமான அமைப்பை ஏற்படுத்த வேண்டும்.

✤ மூவர் தடுப்பின் போது மத்தியிலுள்ளவர் அறைபவரை நேரடியாகவும், ஏனையோர் மற்றைய தாக்குதல்களையும் எதிர் கொள்ளல் வேண்டும்.

✤ இரட்டைத் தடுப்பின் போது அறைபவரின் சகல திசைகளையும் இருவருமே தடுத்தாள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✤ தாக்குதல் இடது பக்கமிருந்து வருமாயின் முன்னணி வலது வீரரும், முன்னணி மத்திய வீரரும் சேர்ந்து தடுத்தாளல் வேண்டும்.

✤ தாக்குதல் மையப் பகுதியினின்று வருமாயின் மத்திய நடுப்பாளருடன் இன்னொரு முன்னணி வீரரும் சேர்ந்து தடுத்தாளல் வேண்டும்.

✤ பிரதான தடுப்பாளரொருவர் தனது நிலையினை மட்டுமன்றி ஏனைய நிலைகளினின்றும் தடுத்தாடும் திறனைக் கொண்டிருத்தல் வேண்டும்.

✤ தடுத்தாடலுக்கு வேகம் துரிதம் என்பன மிகவும் முக்கியம். இதை விட நேரக் கணிப்பீடு (Timing) மிகவும் முக்கியமாகும். அதாவது எதிரணியினரின் அறைதலைத் தடுக்க, தடுப்பாளர் உயரப்பாய்ந்து ஓர் சுவர் போன்ற அமைப்பை அமைத்து தடுத்தல் வேண்டும்.

✤ கூட்டுத் தடுப்பின் போது தமதணியில் ஏற்படவிருக்கும் வெறுமையான இடங்கள் பற்றிக் கவனமாயிருத்தல் வேண்டும்.

✤ தடுத்தாடலின் முக்கிய நோக்கம் யாதெனில், எதிரணியிடமிருந்து வரும் பந்தை தடுத்தாளல் மூலம், பந்தை அவர்களது மைதானத்துள்ளேயே விழச் செய்தலேயாகும். தடுத்தாடிய பந்தானது சில சமயங்களில் எமதணியினுள்ளேயே விழுமாயின் சாமத்தியமாக அப்பந்தை சற்று உயரமாகத் தட்டி, வளமாய் உயர்த்திக் கொடுத்து, வெற்றிகரமான ஓர் தாக்குதலை மீண்டும் மேற்கொள்ள தயாராக இருத்தல் வேண்டும்.

✤ தாக்குதல் எப்பக்கத்தினின்று வருகின்றது என்பதை அறிய முடியாத வகையில் கூட்டுத்தாக்குதல் நடைபெறுமாயின், சமயோசிதமாக ஆட்டத்தில் பங்குகொள்ள வேண்டும்.

✤ தடுப்பாளர்கள் திறமையாக அறையக் கூடியவர்களாக இல்லாவிடினும் பாய்ந்து கைகளை வலையின் மேல் நீட்டித்தடுத்தாளக் கூடியவர்களாய் இருத்தல் வேண்டும்.

தடுத்தாடல் என்பது ஓர் கடினமானதும் நுட்பங்கள் நிறைந்த தொன்றாக இருப்பினும் பின்வரும் உதவிக் குறிப்புகள் ஓரளவு உதவும் என எண்ணுகின்றேன்.

தனித்தடுப்பாளருக்குரிய சில குறிப்புகள் (Hints for Individual Blocker)

✤ எதிரணியினர் பந்தை உயர்த்திக் கொடுக்கு முன்னரேயே தடுப்பாளர் வலைக்கண்மையில் பந்துக்கு நேராக நிற்றல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ அறைபவர்கள் வழமையாக அறையும் அல்லது அறையப் போகும் இடங்களை கணப்பொழுதிலேயே தீர்மானித்து தடுத்தாடல்.

❖ பாய்ந்து தடுக்கையில், கைகளை மடிக்காமலும் மணிக்கட்டின் முன் பாகம் வலையை நோக்கிச் சரிந்தும் இருத்தல் வேண்டும். நேரக் கணிப்பீடு (Timing) மிக முக்கியம்.

❖ தடுத்தலில் ஈடுபடுகையில் ஆட்டத்தின் ஏனைய நிகழ்ச்சிகள் பற்றிய எதுவித சிந்தனையுமின்றி முழுமூச்சுடன் ஈடுபடல் வேண்டும்.

❖ விசையற்ற தேவையற்ற பந்துகட்குத் தடுப்புகள் தேவையில்லை.

❖ சொட்டிவிடப்படும் பந்தை (Drop Ball) துரிதமாகக் கையால் சற்று உயரத் தட்டி உயர்த்துபவருக்கு உதவி செய்தல் வேண்டும்.

❖ தடுத்தாடிய பந்து நமதெல்லையினுள்ளேயே விழுமாயின், அதை எடுத்தாடுவதன் மூலம் அடுத்த அதிரடி தாக்குதலுக்கு உதவி செய்தல் வேண்டும்.

❖ வலையின் அண்மையில் நிலத்திற்கு செங்குத்தாக நின்று கைகளை நீட்டாமல் வலையிலின்று 2' – 3' தள்ளி நின்று உயர எழும்பி கைகளை முன்புறம் வலையை நோக்கி சரித்து தடுத்தல் வேண்டும்.

❖ எதிரணியினரை ஏமாற்றி சரியான பக்கங்களை தடுத்தாடல்.

❖ தடுத்தாட முடியாதவாறு, அறைதல், தூரத்திலின்று இடம் பெறுமாயின் தமதணி சகல துறை ஆட்டக்காரரை (All Rounder) அறைதலுக்கு சுயாதீனமாக முகம் கொள்ள விடுத்து ஏனைய நிலைகளை மற்றவர்கள் காத்தாடுதல் வேண்டும்.

❖ அறைபவருக்கெதிராக நாமும் அறைவதால் எவ்வித பயனும் ஏற்படமாட்டாது.

அறைபவருக்கெதிரான சில பாதுகாப்பு நடவடிக்கைகள்
(Some defence formation against Spikers)

ஒரு அணியின் தாக்குதலைத் தடுத்தாட எதிரணி ஓர் திட்டமிடப்பட்ட வழிமுறைகளைக் கையாள வேண்டியதவசியமாகின்றது.

❖ தடுப்பாளர் அற்ற நிலையில் பிறை நிலா போன்ற வியூக அமைப்பைப் பயன்படுத்தலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பக்கத்தின் மூலையினின்று ஏற்படும் தாக்குதலை முகம் கொள்ளும் 'பிறை நிலா' வகை வியூகம் இதுவாகும். இல. 1 சொட்டிவிடப்படும் பந்துக்காகவும் ஏனையோர் பாதுகாப்பு நிலைகளிலும் காணப்படுகின்றார்கள்.

ஒற்றைத் தடுப்பின்போது இல. 1 தடுப்பின் ஈடுபட இல 2 சொட்டிவிடும் பந்துக்காகவும் ஏனையோர் பாதுகாப்பிலும் ஈடுபடல்.



இரட்டைத் தடுப்பின்போது இல 1ம், 2ம் தடுப்பில் ஈடுபடும் வேளையில் இல 3 சொட்டிவிடும் பந்துகாக்கவும் ஏனையோர் பாதுகாப்பிலும் ஈடுபடுதல்.

இல 1,2,3 தடுப்பில் ஈடுபடும் அதே சமயம் ஏனையோர் தடுத்தாடலில் ஈடுபடுவர் சிலசமயம் இருவர் தடுத்தாட ஒருவர் சொட்டிவிடும் பந்துக்காக நிலை கொள்வார்.

எவ்வளவு தான் பயிற்சிபெற்ற திறமையான அணியாக இருப்பினும் பாதுகாப்புத் திறனில் பூரணத்துவம் பெற்ற அணியாக இருக்க முடியாது. ஏதோ எங்கோ சிற்சில தவறுகள் ஏற்படத்தான் செய்யும் எனவேதான் பலவகையான அமைப்பு முறைகளையும் நாம் தெரிந்து வைத்திருத்தல் வேண்டும். ஓர் அமைப்பு முறையினின்று திடீரென இன்னுமோர் அமைப்பு முறைக்கு மாறியாடுதல் சிறந்த ஒரு உத்தியாகும். இதனால் எதிரணியினர் நமது வியூகத்தின் தன்மையை புரிந்து கொள்ளல் சற்று சிரமமாய் இருக்கும். அறைபவரின் தன்மைக்கு ஏற்பவே வியூகங்களும் மாற்றி அமைக்கப்படும். அடிப்பவரின் வழமையான இடங்களை தடுத்தாடல் வேண்டும். மூலைகளினின்று வரும் அறைதல்களைக் காத்தாடும் முழுப் பொறுப்பும் பாதுகாப்பணியையே சாரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டுத்தடுப்பின் போது தடுப்பாளர்கள் தவிர்ந்த ஏனையோர் முழுமையான பாதுகாப்பில் ஈடுபட வேண்டும். அத்துடன் மைதானத்தில் காணப்படும் வெற்றிடங்கள் பற்றிக் கவனமாயிருக்க வேண்டும்.

ஓர் சிறந்த பாதுகாப்பாளுக்குரிய குணாதிசயங்கள்

- வேகம், தயார்நிலை எத்திசைக்குச் சென்று ஆடினும் மீண்டும் தன்னிடத்திற்கு திரும்புதல்.
- ஏனைய வீரர்களின் ஆட்டத்தில் தலையிடாமை.
- எதிரியின் வழமையான அறையும் ஆற்றலை இனம் காணல்.
- அனுபவம் குறைந்த, குழப்பமான நிலையிலுள்ள, தமது நிலைகளைவிட்டு அலைமோதும், மற்றோரது ஆட்டத்தில் தலையிடும் வீரர்கள் போன்றோரை இனம் காணல்.

நிரற் போட்டி ஒழுங்கமைப்பும் நடாத்தும் முறையும்

How to Organize and conduct a Tournament

ஒரு போட்டியின் தரத்தினைக் கொண்டே அவ்வாட்டத்தின் முன்னேற்றமும் தீர்மானிக்கப்படும். போட்டிகளின் மூலமே தனிப்பட்டவர்களின் அல்லது ஓர் அணியின் திறமைகளும் தீர்மானிக்கப்படுகின்றது. இளம் சமுதாயத்தினர் தத்தம் திறமைகளைப் பாடசாலைகளிலும் அதற்கு வெளியிடங்களிலும் நிரூபித்துக் காட்ட இவ்வகையான போட்டிகளே ஓர் பாலமாய் அமைகின்றது என்பதில் ஐயமில்லை. பல அணிகளுடன் போட்டியிடும் வேளைகளில், எமது திறமைகள் வெளிப்படுவதுடன் எதிரணிகளின் திறமைகளையும் உத்திகளையும் ஒப்பிட்டறியும் சந்தர்ப்பங்களும் எமக்குக் கிடைக்கின்றன.

போட்டிகளை நாம் ஒழுங்கமைக்கும்போது அதன் முக்கியத்துவம் ஒழுங்கமைப்பு முறைகள், நன்மை தீமைகள், என்பவற்றியும் அறிந்திருத்தல் வேண்டும். பின்வரும் பகுதிகள் மூலம் இவற்றை நாம் அறிந்து கொள்ளலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறற் போட்டியின் முக்கியத்துவமும், ஒழுங்கமைப்பும்

போட்டியொன்றின் போது வெற்றி வீரர்/வீரர்களை தெரிவு செய்வதற்காக தனிநபர்/குழுக்களிடையே நடாத்தப்பட வேண்டிய போட்டித் தொடர், போட்டி விதிகள் ஆகியவற்றிற்கமைவாக நடாத்தப்படும் போட்டித்தொடர்களே நிறற்போட்டி எனப்படும்.

நோக்கம்

* தத்தமது திறமைகளை வெளிக்காட்ட/விருத்தி செய்ய சவால் போட்டிகளை நடத்தல்.
* பல வகையான போட்டிகளிலும் போட்டியிட சந்தர்ப்பம் அளித்தல்.
* ஒழுங்கான பயிற்சியே வெற்றிக்கு அடிப்படை எனும் எண்ணக் கருவை வளர்த்தல்.
* தமது குறை நிறைகளை இனம் கண்டு நிவர்த்தி செய்ய உதவுதல்.
* ஏனைய குழுக்களின் திறமைகள் நுட்பங்கள் உத்திகள் போன்றவற்றை இனங்கண்டு கொள்ள உதவுதல்.
* இலைமறை காய்களாய் மறைந்திருக்கும் இளம் வீரர்களை வெளிக்கொணரல்.
* 'நாட்டின் நற்பிரஜை ஒருவன் ஒழுங்கான விளையாட்டின் மூலமே உருவாகின்றான்' என்ற கொள்கையின் நோக்கத்தை அடைதல்.

ஒழுங்கமைப்பு

ஒரு போட்டியின் வெற்றியானது அப்போட்டியின் ஒழுங்கான திட்டமிடல், நடைமுறை என்பனவற்றிலேயே தங்கியுள்ளது. இலைமறை காய்கள் போல மறைந்திருக்கும் இளம் வீரர்களை வெளியுலகிற்கு அறிமுகப்படுத்தல், பார்வையாளர்கட்கு ரசனைமிக்க ஆட்டங்களைப் பார்வையிட சந்தர்ப்பம் அளித்தல், போன்ற நோக்கங்களை வெற்றிகொள்ள சிறந்தவொரு ஒழுங்கமைப்பு அவசியமாகின்றது. போட்டி ஒன்றின் ஒழுங்கமைப்பின்போது கடைப்பிடிக்கப்படவேண்டிய சில உதவிக் குறிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

❋ போட்டியை நடாத்த உகந்த காலநிலை, காலப்பகுதி என்பனவற்றை கருத்தில் கொள்ளல் வேண்டும்.

❋ போட்டியை நடாத்தத் தேவையான பண விபரம், செலவு செய்யப்படவிருக்கும் காலவிரயம், மைதானம், உபகரணங்கள், மத்தியஸ்தர்கள் போன்ற விடயங்களில் போதிய கவனம் செலுத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❋ போட்டியில் கலந்து கொள்ளவிருக்கும் போட்டியாளர்கள்/அணிகள் பற்றிய விபரங்கள், தகவல்களை முன் கூட்டியே சேகரித்தல்.

❋ பார்வையாளர்களதும் வாகனங்களதும் இட வசதிகள் மற்றும், போட்டியாளர்களது தங்குமிட வசதிகள், உணவு, பானாதிகள், வைத்திய உதவி போன்ற சௌகரியங்களையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

❋ தெரிந்தெடுக்கப்படும் மத்தியஸ்தர்கள், நடுநிலையாளராகவும் குறிப்பிட்ட போட்டி பற்றிய போதிய அறிவும், அனுபவமும் கொண்டவராயிருத்தல் வேண்டும்.

❋ போட்டி நடைபெற வேண்டிய காலம், நேரம், இடம் போன்ற விபரங்கள் போட்டியாளர்கட்கு ஏற்கனவேயே தெரிவிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

❋ விளையாட்டுத்திடல் உபகரணங்கள் மற்றும் தேவையான ஆவணங்கள் யாவும் போட்டித் தினத்திற்கு முந்திய தினமே ஆயத்த நிலையில் இருத்தல் வேண்டும்.

❋ போட்டிக் குழுக்களிடையே எவ்வித பிரச்சனையும் ஏற்படாவண்ணம் சந்தோசமும் நல்லெண்ணமும் கலந்த அமைதியான ஓர் அமைப்பினை ஏற்படுத்தல் சிறந்தது. வழங்கப்படும் தீர்ப்பானது நியாயமும் உறுதியுமானதாக இருத்தல் வேண்டும்.

நிரற் போட்டிகளும் வகைகளும் (Types of Fixtures and Competitions)

போட்டிகளில் சில, குறுகிய மற்றும் சில, நீண்ட காலத்திற்குமான போட்டித் தொடராகவும் நடாத்தப்படுகின்றன. இவ்வகையான போட்டிகள் பற்றிய விளக்கங்களை இனிப் பார்ப்போம்.

நிரற் போட்டி இரண்டு வகைப்படும்.

1. (தோல்வியுற்றோரை) விலக்கு முறைப் போட்டிகள் (Knock Out)
2. கூட்டு நிரல் (லீக் முறை) போட்டிகள் (League)

1. விலக்கு முறைப்போட்டி. (Knockout Tournament)

இது ஓர் பொதுவானதும் யாவராலும் கையாளப்பட்டு வருவதுமான, ஒரு போட்டித் தொடராகும். போட்டியில் பங்கு பற்றும் தனிநபர்கள்/குழுக்களை சோடியாகப் பிரித்து அவற்றிற்கிடையே போட்டிகள் நடாத்தப்படும். தோல்வியுறுவோர் படிப்படியாக ஆட்டத்தினின்று விலக்கப்படுவர். வெற்றி பெறுவோர் தொடர்ந்தும் ஆட்டத்தில் முன்னேறிச் செல்வர். இவ்வாறு இறுதிப் போட்டியில் இருவர்/

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு குழுக்கள் போட்டியிடுவர். இப்போட்டியில் வெற்றி பெறுபவர்/ பெறும் குழு 1ம் இடத்தையும் தோல்வியுறுபவர்/அணி இரண்டாம் இடத்தையும் பெறுவர்.

சகல போட்டிகளும் ஒரே போட்டி அட்டவணைக்கேற்ப நடாத்தப்படல் வேண்டும். போட்டி அட்டவணை என்பது போட்டி நடைபெறும் இடம், காலம், நேரம் நடைபெறும் ஒழுங்கு பங்கு பற்றும் குழுக்கள் போன்ற விபரங்களை காட்டும் ஓர் அட்டவணையாகும். இனி 8 அணிகள் கொண்ட விலக்கு முறைப்போட்டி அட்டவணையை ஒன்றினைப் பார்ப்போம்.

போ. இல. கழகங்கள் சுற்று 1 சுற்று 2 சுற்று 3

மேல்பாதி -

1. மின்னல் (வி. க)
10-09-93
மு. ப. 9.00
திடல் 1

2. முழுமதி (வி. க)

11-9-93
மு.ப 9.00
திடல் 1

3. டயமண்ட் (வி. க)
10-09-93
மு. ப. 9.00
திடல் 2

4. ஸ்டார் (வி. க)

11-9-93
பி.ப 3.30
திடல் 1

கீழ்பாதி —

5. சன்றைஸ் (வி. க)
10-09-93
பி. ப. 2.00
திடல் 1

6. வளர்பிறை (வி. க)

11-9-93
மு.ப 9.00
திடல் 2

7. ஒலிம்பிக்ஸ் (வி. க)
10-09-93
பி. ப. 2.00
திடல் 2

8. மயூரா (வி. க)

இவ்வட்டவணையின்படிக்கு 8 குழுக்களும் மேற்பகுதிக்கு 4, கீழ்ப் பகுதிக்கு 4 என்ற விதத்தில் பிரிக்கப்படுகின்றது. இவ் எட்டு குழுக்களும் தமக்கிடையே 4 சோடிகளாகப் பிரிந்து முதல் சுற்றில் தத்தமக்கிடையே போட்டியிடுவர்கள் (அட்டவணையைப் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுற்று	போட்டி இல.	போட்டியிடும் அணி/அணிகள்	வெற்றிபெற்ற அணி/அணிகள்
1	1	1ம், 2ம்	1ம் அணி
	2	3ம், 4ம்	4ம் அணி
	3	5ம், 6ம்	6ம் அணி
	4	7ம், 8ம்	8ம் அணி

சுற்று	போட்டி இல.	போட்டியிடும் அணி/அணிகள்	வெற்றிபெற்ற அணி/அணிகள்
2	5	1ம், 4ம்	4ம் அணி
	6	6ம், 8ம்	8ம் அணி

3	7	4ம், 8ம்	8ம் அணி

இரண்டாவது சுற்றில் 1ம் சுற்றில் வெற்றி பெற்ற 4 குழுக்களிடையே 2 போட்டிகள் நடைபெறுகின்றது. (1ம், 4ம், 6ம், 8ம் அணிகட்கிடையில்) அதாவது போட்டி இல. 1 லும் 2 லும் வெற்றி வெற்ற 1ம், 4ம் அணிகளுக்கிடையே ஒரு போட்டியும் போட்டி இல. 3 லும் 4 லும் வெற்றி பெற்ற 6ம், 8ம் அணிகட்கிடையே இன்னுமொரு போட்டியுமாக (2வது சுற்றில்) 2 போட்டிகள் நடைபெறுகின்றன. இது முறையே போட்டி இல. 5, 6 எனக் குறிப்பிட்டுள்ளதை அவதானியுங்கள். மூன்றாவது சுற்றில் ஒரேயொரு போட்டி நடைபெறுகின்றது போட்டி இல. 5 லும் 6 லும் வெற்றி பெற்ற 4ம் 8ம் குழுக்களிடையே போட்டி நடைபெறுகின்றது. இது போட்டி இல. 7 என குறிப்பிடப்பட்டுள்ளது. இப்போட்டியே இறுதிப் போட்டியாகும். இப்போட்டியில் வெற்றி பெற்ற 8ம் அணியைச் சேர்ந்த 'மயூராஸ் அணி' 1ம் இடத்தையும் அதனிடம் தோல்வியுற்ற 4ம் அணியைச் சேர்ந்த 'ஸ்டார் அணி' இரண்டாம் இடத்தையும் பெறுகின்றது. உங்களது தெளிவான விளக்கங்கட்காக அட்டவணையில் நேரம், இடம், காலம், இலக்கங்கள் என்பன தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரற் போட்டி அட்டவணை ஒன்றைத் தயாரிக்கும் விபரம்

- மேலே காட்டப்பட்ட போட்டி நிரலில் குழுக்களிடையே போடப் பட்டுள்ள அடைப்புக் குறிக்குள் போட்டி நடைபெறும் காலம், நேரம், இடம், மைதானம் என்பனவும் குறிப்பிடப்படல்வேண்டும்.
- அடைப்புக் குறிக்கு நேரே காட்டப்பட்டுள்ள கோட்டில் அடுத்த சுற்றில் ஆடத்தகுதி பெற்ற அணிகளை குறிப்பிட்டுக் காட்டுதல் வேண்டும்.

இப்போட்டிக்கென நடாத்தப்பட வேண்டிய மொத்தப் போட்டிகளின் எண்ணிக்கையானது மொத்தக் குழுக்களின் எண்ணிக்கையை விட 1 குறைவானது. இதற்குரிய சமன்பாடு (N-1) ஆகும். N என்பது போட்டியிடும் குழுக்களின் மொத்த எண்ணிக்கையைக் குறிக்கும். 8 குழுக்கள் பங்கு பற்றும் போட்டியின் மொத்தப் போட்டிகள் 8-1=7 ஆகும்.

இனி 7 குழுக்கள் பங்கு பற்றும் போட்டித் தொடர் அட்டவணை ஒன்றினைப் பார்ப்போமாயின் முன்னைய அட்டவணையைவிட இது சற்று வித்தியாசமானதாகக் காணப்படுவதை நீங்கள் அவதானிக்கலாம்.

குழுக்களுக்குரிய பெயர்கள் போட்டி நடைபெறும் காலம், நேரம், இடம் என்பன முன்னைய அட்டவணையில் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளமையால் இங்கு வெறும் இலக்கங்கள் மட்டுமே இடம் பெறுகின்றன என்பதைக் கவனத்தில் கொள்க. போட்டியிடும் அணிகளின் எண்ணிக்கை ஒற்றை இலக்கமாக இருப்பின் மேல்பாதியில் 1 குழு கூடுதலாக இருக்கும் வண்ணம் குழுக்களை மேல் கீழ் பாதி] என பிரித்தல் வேண்டும். அதற்கேற்றபடி மேல் பாதியில் 4 குழுக்களும் கீழ் பாதியில் 3 குழுக்களும் இடம் பெறுகின்றன. 1ம் சுற்றில் ஒரு குழுவுக்கு மட்டும் இடை (Bye) வழங்கப்பட்டுள்ளதை அவதானித்திருப்பீர்கள் இடை கிடைக்கப்பட்ட அணி 1வது சுற்றில் ஆட்டத்தில் பங்குபற்ற மாட்டாது. இவ்விடை வாய்ப்பானது போட்டி அட்டவணையில் கடைசியாக உள்ள அணிக்கு வழங்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடை வழங்கப்படும் முறை

பின்வரும் அறிவுறுத்தல்களை கவனத்தில் கொண்டு இடைகள் வழங்கப்படல் வேண்டும்.

- முதலில் போட்டியில் பங்கு பற்றும் குழுக்களின் எண்ணிக்கையை அறிந்து கொள்ளல்.
- குழுக்களின் எண்ணிக்கை 2ன் அடுக்குகளாக (2, 4, 8, 16, 32) அமையாதவிடத்து இடைகள் வழங்கப்பட வேண்டி நேரிடும்.
- குழுக்களின் எண்ணிக்கைக்கு அடுத்து வரும் 2ன் அடுக்கினை அறிந்து அத்தொகையினின்று பங்கு பற்றும் குழுக்களின் எண்ணிக்கையை கழிக்குகையில் கிடைக்கும் தொகையே நாம் கொடுக்க வேண்டிய மொத்த இடைகளாகும். உதாரணமாக 19 குழுக்கள் பங்குபற்றுமாயின் இதன் அடுத்த 2ன் அடுக்கு (2, 4, 8, 16, 32) 32 ஆகும். இந்த 32ல் இருந்து 19ஐ கழிக்குகையில் கிடைக்கும் 13 அணிகட்கும் இடைகள் வழங்கப்பட வேண்டும் என்பது தெளிவாகின்றது.

ஒரு போட்டி அட்டவணையில் வழங்கப்பட வேண்டிய இடைகளின் எண்ணிக்கை, நடாத்தப்பட வேண்டிய போட்டிகளின் தொகை என்பனவற்றை பின்வரும் அட்டவணைகளிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

பங்குபற்றும் குழுக்களின் எண்ணிக்கை	அடுத்து வரும் 2ன் மடங்கு	வழங்கப்பட வேண்டிய இடைகளை அறியும் முறை	இடைகளின் தொகை	நடத்தப்பட வேண்டிய போட்டிகளின் எண்ணிக்கை
10	16	16 — 10 = 6	6	10 — 1 = 9
11	16	16 — 11 = 5	5	11 — 1 = 10
25	32	32 — 25 = 7	7	25 — 1 = 24
35	64	64 — 35 = 29	29	35 — 1 = 34
40	64	64 — 40 = 24	24	40 — 1 = 39

இடைகள் யாவும் முதற் சுற்றிலேயே வழங்கப்பட வேண்டுமெனவும் அவை முதற்சுற்றிலே போட்டியிடமாட்டா எனவும் அறிந்தோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டிக்குரிய குழுக்கள் ஒற்றை எண்ணாக இருப்பின் மேற் பகுதியில் 1 குழு கூடுதலாக இருக்கும் வண்ணம் மேல் கீழ் பாதிகளா கப் பிரித்தல் வேண்டும். இடை வழங்குகையில் போட்டி அட்டவணை யின் இறுதியில் காணப்படும். குழுவுக்கே முதல் இடை வழங்கப்படல் வேண்டும். இரண்டாவது இடை இருப்பின் அது மேற்பகுதியில் 1ம் இலக்கத்திற்கு வழங்கப்படல் வேண்டும். 3வது இடை இருப்பின் அத னைக் கீழ்ப்பகுதியில் இடை வழங்கப்படாமல் இருக்கும் கடைசிக் குழு வுக்கு வழங்குதல் வேண்டும். 4வது இடையிருப்பின் அதனை மேற் பகுதியில் இடை வழங்கப்படாதிருக்கும் 2ம் குழுவுக்கு வழங்குதல் வேண்டும். இவ்வாறே மீதமுள்ள இடைகளையும் கீழ் மேல் என்ற ஒழுங்கில் வழங்குதல் வேண்டும். உதாரணமாக 11 குழுக்கள் கொண்ட போட்டி நிரல் ஒன்றினை இனிப் பார்ப்போம். உங்கள் வசதிக்கென இடைகள் வழங்கப்பட்டுள்ள முறைகளுக்கு இலக்கங்கள் வழங்கப்பட் டுள்ளன. (இடைகள் $16-11=5$)



குழுக்களை இலக்கங்களிட்டு அட்டவணைப்படுத்தல்

போட்டி அட்டவணை ஒன்றைத் தயார் செய்கையில் குழுக்க ளுக்கென தொடர் இலக்கங்கள் வழங்கப்படல் வேண்டும். மேலே காட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டப்பட்ட போட்டி அட்டவணையினின்று இதை அறிந்திருப்பீர்கள். இவ் விலக்கங்கள் சீட்டிழுப்பின் மூலம் குழுக்களுக்கு வழங்கப்படும் சீட்டி ழுப்புகளிலும் சில வகைகள் உண்டு.

1. போட்டியில் பங்குபற்றும் குழுக்களின் பெயர்கள் அடங்கிய சீட்டுக்களைப் பெட்டியொன்றினுள் போட்டு நன்றாகக் கலக்கிய பின்னர் ஓர் சீட்டை எடுத்து அதில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவுக்கு 1ம் இலக்கத்தையும் 2வது சீட்டை எடுத்து அதில் குறிப்பிடப்பட்டுள்ள குழுவுக்கு 2ம் இடத்தையும் கொடுத்தல் இவ்வாறே எல்லாக் குழுக்களுக்கும் இலக்கங்களை வழங்கி அவற்றை ஓர் தாளில் குறித்து வைத்தல் வேண்டும். இதுவும் ஒரு முறையாகும்.

2. குழுக்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப இலக்கங்களைப் பெட்டி யினுள் போட்டுக் கலக்கிய பின்னர் ஒவ்வொரு குழுவையும் சேர்ந்த ஒவ்வொரு பிரதிநிதிகளையும் அழைத்து ஒவ்வொரு சீட்டை எடுக்கச் செய்தல். 1ம் இலக்கத்தை எடுத்த குழு வின் பெயரை 1ம் இலக்கத்திலும் 2ம் இலக்கத்தை எடுத்த குழுவின் பெயரை 2ம் இலக்கத்திலும் பதிதல். இவ்வாறே ஏனைய அணிகளையும் அந்தந்த இலக்கங்கட்கு நேரே பதிந்து வைத்தல். இது இன்னுமொரு முறையாகும்.

இப்போது நிரற்போட்டி அட்டவணை ஒன்றை தயார் செய்வது பற்றிய பூரண அறிவை நீங்கள் பெற்றிருப்பீர்கள் என்பதில் சந்தேகம் இல்லை. இருப்பினும் வெவ்வேறு வகையான விளக்கங்களும் உங்களுக் குக் கிடைக்கலாம்.

முக்கிய குறிப்பு

போட்டி அட்டவனை ஒன்றை தயார் செய்கையில் திறமையான அணிகள் இரண்டும் அருகருகே இடம்பெற்று முதல் சுற்றிலேயே சந் திக்காமல் அவை இறுதிப் போட்டியில் சந்திக்கக் கூடியவாறு அமைதல் நன்று. ஏனெனில் முதல் சுற்றிலேயே ஓர் திறமையான அணி போட்டி யில் தோல்வியுற்று விளக்கப்பட வேண்டிய நிலை ஏற்படும். இதனால் முதற் சுற்றிலே தோல்வியுற்ற அணி இறுதிப் போட்டியில் 2ம் இடத் தைப்பெற்ற அணியைவிட திறமையான அணியாக இருந்தும் இறுதிப் போட்டியில் போட்டியிடக்கூடிய சந்தர்ப்பம் கிடைக்காமல் போகின் றது. அத்துடன் பார்வையாளருக்குக்கூட திறமையான சிறந்த அணி யினது இன்னுமொரு போட்டியைப் பார்க்கும் சந்தர்ப்பமும் மறுக்கப் படுகின்றது. எனவே போட்டி அட்டவணையைத் தயாரிக்கையில் இவ் விடயத்தில் கூடிய கவனம் செலுத்தி அட்டவணையைத் தயார்செய்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்தெடுக்கப்பட்ட குழுக்களுக்கான இடை வழங்கல்

இதன்படிக்கு திறமையான இரு அணிகளும் முதற் சுற்றிலேயே சந்திக்காவண்ணம் அவைகட்கு அட்டவணையின் கீழ்ப்பகுதியின் இறுதி இலக்கத்தையும் மேற்பகுதியின் 1ம் இலக்கத்தையும் வழங்குதல் வேண்டும். இச்சலுகை, இதற்கு முந்திய சுற்றுப்போட்டிகளில் அவைகள் காட்டிய திறமைகள், திறமைகள் தொடர்பாகப் பெறப்பட்ட உண்மையான தகவல்கள் என்பவற்றின் அடிப்படையில்தான் வழங்கப்படல்வேண்டும். இடைகள் மீதமிருப்பின் தூர இடங்களிலிருந்து வருகை தந்த குழுக்களுக்கு வழங்கப்படல் நன்று.

திறமையான தெரிந்தெடுக்கப்பட்ட குழுக்களுக்கு இடை வழங்குவதாயின் அட்டவணையை மேல் கீழ்ப் பாதிகள் எனப் பிரித்தல் வேண்டும். திறமையான 8 அணிகட்கு இடை வழங்கப்பட வேண்டியிருப்பின் இவ்வட்டவணையை 4 பகுதிகளாகப் பிரித்தல் வேண்டும்.

திறமைமிக்க 4 அணிகள் கொண்ட 11 குழுக்களுக்கான போட்டி அட்டவணை

திறமைமிக்க 4 அணிகள் இருப்பின் போட்டி அட்டவணையை மேல் கீழ் பாதி என இரண்டாகப் பிரிக்கலாம். போட்டிக் குழுக்கள் ஒற்றை எண்ணாக இருப்பதால் மேல் பாதியில் 6 குழுக்களும் கீழ் பாதியில் 5 குழுக்களும் இருக்கும் வண்ணம் பிரித்தல் வேண்டும். இப் போட்டிக்கென வழங்கப்பட வேண்டிய இடைகள் 16 — 11 = 5 இதன் படி கடந்த போட்டியில் 1ம் 2ம் இடங்களைப் பெற்ற அணிகள் இரண்டிற்கும் குழுக்கள் தொடர்பாகப் பெறப்பட்ட தகவல்களின் படிக்கு மேலும் இரண்டு அணிகட்கும் தூரத்திலிருந்து போட்டியில் கலந்து கொள்ள வந்திருக்கும் இன்னுமொரு அணிக்குமாக 5 இடைகளையும் அவ்வணிகளுக்கு வழங்கலாம். இடைகள் வழங்கப்பட்டுள்ள விதங்களைப் பார்க்குக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடந்த போட்டியில் 1ம் 2ம் இடங்களைப் பெற்ற, K, F அணிகட்கு 1ம் 2ம் இடைகளும் திறமைகளினடிப்படையில் G, A அணிகட்கு 3ம் 4ம் இடைகளும் தூர இடத்திலின்று போட்டியிட வந்திருக்கும் J அணிக்கு 5ம் இடையும் வழங்கப்பட்டுள்ளது. உங்கள் வசதிக்காக வழங்கப்பட்ட இடைகளின் ஒழுங்கு முறைக்கென இலக்கங்கள் வழங்கப்பட்டுள்ளன. இனி இவைகள் வழங்கப்பட்ட விதத்தினைப் பார்ப்போம்.

வழங்கப்பட்ட இடை இல.	இடை கிடைக்கப்பெற்ற அணி	இடை கிடைக்கப்பெற்ற பகுதி	இடை வழங்கப்பட்ட தொ. இ.
1	K	கீழ்ப்பகுதி கடைசி	11
2	F	மேல்ப்பகுதி கடைசி	6
3	G	கீழ்ப்பகுதி முதலாவது	7
4	A	மேல்ப்பகுதி முதலாவது	1
5	J	கீழ்ப்பகுதி கடைசிக்கு முதல்	10

ஏனைய குழுக்கள் வழமைபோல சீட்டிழுப்பின்படி தெரிந்தெடுக்கப்படும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறமைமிக்க 8 அணிகள் கொண்ட 22 குழுக்களுக்கான அட்டவணை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறமைமிக்க 8 அணிகள் இருப்பின் அட்டவணையை 4 பகுதிகளாகப் பிரித்தல் வேண்டும் என்பது நீங்கள் அறிந்ததே இதன்படி மேல் கீழ் பகுதிகளில் 11 : 11 குழுக்கள் இடம்பெறும். இப்பகுதிகளை மேலும் இரு பகுதிகளாகப் பிரித்தால், மேல் பகுதியில் 6 : 5 என்றும் கீழ் பகுதியில் 6 : 5 என்றும் அமையும். இவற்றிற்கென வழங்கப்பட வேண்டிய இடைகளின் எண்ணிக்கை 32 - 22 10 ஆகும். திறமைமிக்க 8 அணிகட்கும் தூர இடத்தினின்று வந்து கலந்துகொள்ளும் 2 அணிகட்கும் இடை வழங்கப்பட்டுள்ளது.

இடை இல	இடை வழங்கப்பட்ட காற் பகுதி	இடை வழங்கப்பட்ட குழுவின் தொடர் இல.
1	4 வதின் கடைசி இல.	22
2	2 வதின் கடைசி இல.	11
3	3 வதின் கடைசி இல.	17
4	1 வதின் கடைசி இல.	6
5	4வது முதலாவது இல.	18
6	2வது முதலாவது இல.	7
7	3வது முதலாவது இல.	12
8	1வது முதலாவது இல.	1
9	4வது கடைசிக்கு முதல் இல.	21
10	2வது கடைசிக்கு முதல் இல.	10

மேற்படிப் போட்டிகளின் போது நடைபெறும் ஆட்டங்களில் பின்வரும் போட்டிப் பெயர்கள் வழங்கப்படுகின்றன.

- முதற் சுற்றுப் போட்டிகள் (1st Round Matches) — ஆரம்பப் போட்டிகள்
- கால் இறுதிப் போட்டிகள் (Quarter Final Matches) — வெற்றி பெற்ற 8 குழுக்களிடையே நடைபெறும். போட்டிகள் (4)
- அரையிறுதிப் போட்டிகள் (Semi Final Matches) — காலிறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற 4 குழுக்களிடையில் நடைபெறும். போட்டிகள் (2)
- இறுதிப் போட்டி (Final Match) — அரையிறுதிப் போட்டியில் வெற்றி பெற்ற 2 குழுக்களிடையே நடைபெறும். போட்டி (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2 கூட்டு நிரற் போட்டிகள் (League Tournament)

இது ஒரு நீண்ட தவணைப் போட்டித் தொடராகும். பொதுவாக இப்போட்டிகள் நீண்ட காலத்தை செலவிடக் கூடிய குறைந்த எண்ணிக்கையுடைய போட்டிகட்கே பொருந்தும். அல்லது இதற்கென்னூர் நீண்ட காலத்தைச் செலவிட வேண்டியிருக்கும்.

பங்குபற்றும் ஒவ்வொரு அணியும் ஏனைய ஒவ்வொரு அணியுடனும் போட்டியிட வேண்டும். வெற்றி பெறும் குழுவுக்கு 2 புள்ளிகளும் வெற்றி தோல்வியின்றி முடிவுற்ற போட்டிகட்கு தலா 1 புள்ளியும் வழங்கப்படும். மொத்தப் புள்ளிகளினடிப்படையில் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்படும்.

இப்போட்டியை நடாத்த அட்டவணை ஒன்றினைத் தயாரிக்கையில் முதலில் நாம் நடாத்த வேண்டிய போட்டிகளின் மொத்த எண்ணிக்கையை அறிந்து கொள்ளுதல் மிகவும் அவசியமாகின்றது. குழுக்களின் எண்ணிக்கையினின்று ஒன்றைக் கழித்து, கிடைக்கும் எண்ணை மொத்தக் குழுக்களின் எண்ணிக்கையால் பெருக்கி, வரும் விடையை 2 ஆல் பிரித்தல் வேண்டும். இதன் போது கிடைக்கும் விடையே, நாம் நடாத்த வேண்டிய போட்டிகளின் மொத்த எண்ணிக்கையாகும். இதற்குரிய சூத்திரம் இவ்வாறு அமையும். $\frac{N\ (N-1)}{2}$ N என்பது பங்குபற்றும் மொத்தக் குழுக்களின் எண்ணிக்கையைக் குறிக்கும்.

8 குழுக்கள் பங்கு பற்றும் போட்டி ஒன்றில் நடத்தப்படவேண்டிய மொத்தப் போட்டிகள் சூத்திரத்தின்படிக்கு

$$\frac{N\ (N-1)}{2} = \frac{8\ (8-1)}{2} = \frac{8 \times 7}{2} = 28$$ ஆகும்.

போட்டியிடும் முறை

சீட்டிழுப்பின்படி இலக்கங்களை வழங்கி பின்வரும் முறையில் ஒழுங்காக அட்டவணைப் படுத்துக.

1 Vs 8 (இல 1 இல 8 உடன் போட்டியிடும்)
2 Vs 7 (இல 2 இல 7 உடன் போட்டியிடும்)
3 Vs 6 (இல 3 இல 6 உடன் போட்டியிடும்)
4 Vs 5 (இல 4 இல 5 உடன் போட்டியிடும்)

இது சுற்று ஒன்றுக்கான அட்டவணையாகும். 2 வது சுற்றில் ஆடும் குழுக்களைத் தீர்மானிப்பதற்காக இல 1 ஐ அதே இடத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரந்தரமாக விட்டு வைத்து, ஏனைய இலக்கங்களை மணிக்கூட்டுச் சுழற்சி முறையாக ஒரே ஒழுங்குடன் இடம் மாற்ற வேண்டும். கீழே உள்ள அட்டவணையில் இலக்கங்களும் அவை இடம்மாறிய விதங்களும் காட்டப்பட்டுள்ளன. முதற் சுற்றில் பங்குபற்றிய இலக்கங்கள் அதற்கடுத்த சுற்றில் பங்கு பற்றியுள்ள இடங்களையும், இலக்கங்களையும் கவனத்தில் கொள்க. அம்புக்குறிகள் மூலம் அவை காட்டப்பட்டுள்ளன.

சுற்று 1 சுற்று 2 சுற்று 3 சுற்று 4 சுற்று 5 சுற்று 6 சுற்று 7

4 போட். 4 போட். 4 போட். 4 போட். 4 போட். 4 போட். 4 போட்.
= 28 போட்டிகள்

2ம் சுற்றில் இல. 2, 8ன் இடத்திற்கும் இல. 8, 7ன் இடத்திற்கும், இல. 7, 6ன் இடத்திற்கும் இல. 6, 5ன் இடத்திற்கும் இல. 5, 4ன் இடத்திற்கும் இல. 4, 3ன் இடத்திற்கும் இல. 3, 2ன் இடத்திற்கும் வரிசைக்கிரமப்படி மணிக்கூட்டுச் சுழற்சி முறைப்படி மாறியுள்ளதை அவதானியுங்கள். இது போன்றே 3ம், 4ம், 5ம் சுற்றுக்களும் ஒழுங்காக மாற்றப்படல் வேண்டும். இதனால் ஒவ்வொரு குழுவுக்கும் ஏனைய எல்லாக் குழுக்களுடனும் போட்டியிடும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. (வெற்றி தோல்வி புள்ளிகளினடிப்படையில் அமையும் என்பது நீங்கள் அறிந்ததே)

போட்டியிடும் குழுக்கள் இரட்டை இலக்கங்களாக இருப்பின் (8, 24, 36) மேற்கண்டவாறு அட்டவணையைத் தயாரிக்கலாம். ஆனால் ஒற்றை இலக்கங்களாக இருப்பின் (5, 7, 9, 11) அட்டவணையில் சிறிது மாற்றம் ஏற்படும். இதன்போது ஒவ்வொரு சுற்றிலும் ஒவ்வொரு அணிக்கு இடை வழங்க வேண்டியது அவசியமாகின்றது. வழங்கப்பட்ட இடையின் நிலையை மாற்றாது ஏனைய அணிகளை முன்னர் கூறியதுபோல மணிக்கூட்டு சுழற்சி முறையில் மாற்றுதல் வேண்டும்.

இனி 5 குழுக்கள் கொண்ட கூட்டு நிரற் போட்டி ஒன்றின் அட்டவணையைப் பார்ப்போம். இதன்படிக்கு நடாத்தப்பட வேண்டிய மொத்தப் போட்டிகள்.

$$\frac{N(N-1)}{2} = \frac{5(5-1)}{2} = \frac{5(4)}{2} = \frac{20}{2} = 10$$

இடை வழங்கப்படும் அணிகள் அக்குறிப்பிட்ட சுற்றில் போட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிடமாட்டாது என்பதைக் கவனத்தில் கொள்க. இடை வழங்கப்பட்ட அணிகள் தனியாக 0 இட்டுக் காட்டப்பட்டுள்ளன.

சுற்று 1 சுற்று 2 சுற்று 3 சுற்று 4 சுற்று 5

வெற்றி பெற்ற அணிகட்கு 2 புள்ளிகளும் சம முடிவுற்ற போட்டிகட்கு தலா 1 புள்ளியும் என்ற அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்படும். கீழ்வரும் அட்டவணை மூலம் 5 குழுக்களுக்கிடையே நடைபெற்ற போட்டி ஒன்றில் வெற்றி பெற்றவரை தெரிவு செய்யும் முறையினைப் பார்ப்போம்.

சுற்று 1	சுற்று 2	சுற்று 3	சுற்று 4	சுற்று 5
பெறுபேறும் புள்ளிகளும்	பெறுபேறும் புள்ளிகளும்	பெறுபேறும் புள்ளிகளும்	பெறுபேறும் புள்ளிகளும்	பெறுபேறும் புள்ளிகளும்
2ம்-5ம் குழுக்கள் வெற்றி சம முடிவு	3ம்-1ம் குழுக்கள் வெற்றி 1ம் குழு	4ம்-2ம் குழுக்கள் வெற்றி 4ம் குழு	5ம்-3ம் குழுக்கள் வெற்றி 5ம் குழு	1ம்-4ம் குழுக்கள் வெற்றி 1ம் குழு
3ம்-4ம் குழுக்கள் வெற்றி 3ம் குழு	4ம்-5ம் குழுக்கள் வெற்றி 5ம் குழு	5ம்-1ம் குழுக்கள் வெற்றி 5ம் குழு	1ம்-2ம் குழுக்கள் வெற்றி 1ம் குழு	2ம்-3ம் குழுக்கள் வெற்றி 2ம் குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற புள்ளிகள்

குழு இல	சுற்று 1	சுற்று 2	சுற்று 3	சுற்று 4	சுற்று 5	மொத்தப் புள்ளிகள்	நிலை
1	—	02	00	02	02	06	2
2	01	—	00	00	02	03	3
3	02	00	—	00	00	02	4
4	00	00	02	—	00	02	4
5	01	02	02	02	—	07	1

இதன்படிக்கு 5ம் குழு 7 புள்ளிகளைப் பெற்று 1ம் இடத்தையும் 1ம் குழு 6 புள்ளிகளைப் பெற்று 2ம் இடத்தையும் பெறுகின்றது. சில சமயங்களில் இரு அணிகளும் முதலாவது இடத்திற்காக சமமான புள்ளிகளைப் பெறுமிடத்து பிரச்சினைகள் தோன்றலாம். இவ்வேளைகளில் ''சமப்பிரச்சினை தீர்த்தல்'' எனும் விதிக்கிணங்க 1ம் இடம் பின்வருமாறு தீர்மானிக்கப்படும்.

1. சமமான புள்ளிகள் பெற்ற இரு அணிகளுக்கும் 1ம் இடம் வழங்குதல்.
2. போட்டிகளினடிப்படையில் அதிக வெற்றிகளைப் பெற்ற அணிக்கு 1ம் இடம் வழங்குதல்.
3. வெற்றி பெற்ற குழுக்களுக்கெதிராக அதனுடன் போட்டியிட்ட ஏனைய அணிகள் பெற்ற வெற்றிகளைக் கணக்கிட்டு வழங்குதல்.
4. சம புள்ளிகள் எடுத்த குழுக்களை மீண்டும் போட்டியிட வைத்தல்.

மேலே கூறப்பட்ட தீர்ப்புகளில் 1ம், 4ம் தீர்ப்புகள் பற்றி எதுவித பிரச்சினையும் ஏற்பட இடமில்லை. ஆனால் தீர்ப்பு 2, 3 பற்றி சிறிது விளக்கம் தேவைப்படுமென எண்ணி அவை பற்றிய சிறு விளக்கங்களை கீழே தந்துள்ளேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்ப்பு 2

உதாரணமாக (A, B என்ற) இரு அணிகளும் 18 போட்டிகட்கும் முகம் கொடுத்து முறையே 15:14 வெற்றி முடிவுகளைப் பெற்றிருக்குமானால் 15 வெற்றிகள் பெற்ற அணிக்கு முதலாம் இடத்தை வழங்கல்.

தீர்ப்பு - 3

உதாரணமாக வலைப்பந்து/கூடைப்பந்து ஆட்டத்தை எடுத்துக் கொண்டால் A குழு குறி எய்திப் பெற்ற பேறுகள் 120 ஆகவும் அதனை எதிர்த்தாடிய ஏனைய குழுக்கள் யாவும் சேர்ந்து பெற்ற மொத்தப் பேறுகள் 90 எனவும் கொள்வோம். இதேபோல் B குழு குறி எய்திப் பெற்ற பேறுகள் 121 எனவும் அதனை எதிர்த்தாடிய ஏனைய குழுக்கள் யாவும் சேர்ந்து பெற்ற மொத்தப் பேறுகள் 90 எனவும் கொள்வோம். இதன்படிக்கு இரு அணிகளுக்குமிடையே காணப்படும் பேற்று வித்தியாசமான 30 : 31 பேறுகள் என்ற அடிப்படையில் B குழுவுக்கு வெற்றியை வழங்கல்.

நிரற் போட்டியின் நன்மை தீமைகள்

போட்டியில் பங்குபற்றும் வீரர்கள் பார்வையாளர்கள் அமைப்பாளர்கள் அனைவரும் இப்போட்டியின் நன்மை தீமைகள் பற்றி அறிந்திருந்தால் தத்தமது நோக்கங்கள், எதிர்பார்ப்புகள் என்பன நிறைவேறுவதற்கான வாய்ப்புகளை இதன் வாயிலாகத் தீர்மானித்துக் கொள்ளலாம்.

விலக்கு முறையின் நன்மைகள்

- நடத்தப்படவேண்டிய போட்டிகளின் எண்ணிக்கை குறைவாதலால் குறுகிய காலத்துள் போட்டிகள் முடிவடையும்.
- போட்டி அமைப்பாளர்கள், பார்வையாளர்கள், வீரர்கள் அனைவரதும் நேரம், உழைப்பு, பணம் என்பவற்றின் விரயம் குறைவு.
- விளையாட்டுத்திடல், உபகரணங்கள் போன்றவற்றைப் பெற்றுக் கொள்ளுதல், போட்டியாளர்களின் ஏனைய வசதிகளைச் செய்தல், மத்தியஸ்தர்களை நியமித்தல் என்பன இலகுவாக இருக்கும்.
- விளையாட்டு வீரர்கள் தத்தமது சொந்தக் கருமங்கட்கு எதுவித பங்கமும் ஏற்படாமல் போட்டிகளில் ஈடுபடலாம்.
- தூரத்திலிருந்து வந்து போட்டிகளில் கலந்து கொள்ளும் குழுக்களுக்கு சிரமங்கள் குறைவாகக் காணப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✤ ஒரு போட்டியில் தோல்வியுற்றால் அவ்வணி அப்போட்டித் தொடரினின்றே நீக்கப்படுவதால் போட்டியில் மிகுந்த ஆர்வத்துடன் பங்குபற்றுவர்.

✤ தெளிவான ஓர் இறுதிப் போட்டியை காணக்கூடியதாக இருக்கும்.

✤ சிறந்த அணி சிறந்த விளையாட்டு வீரர் என்பவற்றினை கூடிய விரைவில் தெரிவு செய்யலாம்.

✤ பார்வையாளருக்கு விறுவிறுப்பான போட்டிகளைக் காண வாய்ப்புகள் கிடைக்கும்.

விலக்கு முறையின் தீமைகள்

✤ போட்டி ஒன்றில் தோல்வியுற்ற ஓர் அணியானது அத்தொடரினின்றே விலக்கப்படுவதால் தொலை தூரத்திலிருந்து வந்து பங்கு பற்றும் அணியினர்க்கு ஏமாற்றமும் அசௌகரியங்களும் ஏற்படும்.

✤ போட்டி ஒன்றில் தோல்வியுற்றதும் அவ்வணி அத்தொடரினின்றே விலக்கப்படுவதால் அடுத்தடுத்த போட்டிகளில் தத்தம் திறமைகளைக் காட்டவோ, குறைகளை நிவர்த்தி செய்யவோ சந்தர்ப்பம் கிடைப்பதில்லை.

✤ போட்டியினின்று நீக்கப்பட்ட அணியோ/வீரர்களோ சில சமயங்களில் உளத் தாக்கத்திற்கும் ஆளாகலாம்.

✤ போட்டியில் இறுதியாக வெற்றி பெற்ற அணியிடம் முதல் சுற்றிலேயே தோல்வியுற்ற ஓர் அணி தற்போதைய 2ம் இடம் பெற்ற அணியைவிட சிறந்த குழுவாகவும் காணப்படலாம். ஆதலால் திறமையினடிப்படையில் உரிய அணிக்கு 2ம் இடம் கிடைக்காமல் போகலாம்.

✤ முக்கியமான காரணங்கட்காக அல்லது சுகவீனம் காரணமாக ஒரு போட்டியில் பங்குபற்ற முடியாமல் போன ஓர் வீரரோ/அணியோ அடுத்தடுத்த போட்டிகளில் தத்தமது திறமைகளை வெளிக்காட்ட சந்தர்ப்பம் கிடைப்பதில்லை.

லீக் முறையின் நன்மைகள்

✤ ஒவ்வொரு குழுவும் ஏனைய குழுக்கள் யாவற்றுடனும் போட்டியிடுவதால் திறமையினடிப்படையில் வெற்றி நிர்ணயிக்கப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ முக்கிய காரணங்கட்காக ஒரு போட்டியில் பங்குபற்ற முடியாமற் போன அணியோ/தனி நபரோ அடுத்தடுத்த போட்டிகளில் தத்தம் திறமைகளை வெளிக்காட்ட சந்தர்ப்பம் உண்டு.

❖ முன்னேறி வரும் இளம் குழுக்கள் வெற்றி தோல்வியினைச் சமமாக மதித்து ஏற்றுத் தொடர்ந்தும் போட்டிகளில் பங்குபற்றித் தமது அநுபவங்களையும் திறமைகளையும் வளர்த்துக் கொள்ளச் சந்தர்ப்பம் கிடைக்கின்றது.

❖ நீண்ட காலத்திற்குப் பல போட்டிகளைப் பார்த்து ரசிக்கும் சந்தர்ப்பம் பார்வையாளருக்கும் கிடைக்கும்.

❖ நிரற் போட்டி அட்டவணையின்படி பார்வையாளர்கள் தாம் விரும்பிய போட்டித் தொடரைத் தெரிந்தெடுத்துப் பார்க்கும் சந்தர்ப்பம் இதனால் கிடைக்கும். தமது கருமங்கட்குப் பங்கம் ஏற்படா வண்ணம் போட்டிகளைப் பார்வையிடலாம்.

லிக் முறையின் தீமைகள்

❖ இது ஒரு நீண்டகாலப் போட்டித் தொடர் ஆகையால் குழுக்கள் அமைப்பாளர்கள் போன்றோருக்கு காலம், நேரம், பணம், உழைப்பு என்பன வீண் விரயமாகும். சந்தர்ப்பங்களும் உண்டு.

❖ விளையாட்டுத்திடல், மத்தியஸ்தர்கள் உபகரணங்கள் போட்டியாளர்களுக்குரிய ஏனைய வசதிகள் போன்றவற்றை ஒழுங்குபடுத்துதில் அசௌகரியங்கள் ஏற்படலாம்.

❖ இது ஒரு நீண்டகாலத் தொடராகையால் பார்வையாளர்கட்கும் ஆதரவாளர்க்கும் கூட சில சமயங்களில் சலிப்பு ஏற்படவும் இடம் உண்டு.

❖ விலக்கு முறைப் போட்டிகளைப் போல் கால் இறுதி, அரையிறுதி, இறுதிப் போட்டிகள் எனத் தெரிவு செய்து பார்க்கும் சந்தர்ப்பம் கிடைப்பதில்லை.

❖ விளையாட்டு வீரர்கட்குத் தத்தம் கருமங்களை முறையாக செய்ய முடியாத வண்ணம் தடங்கல்கள் ஏற்படலாம்.

❖ தொலை தூரத்தினின்று போட்டிகளில் கலந்து கொள்ளும் வீரர்களுக்கு / அணிக்கு இதனால் காலம், நேரம், பணம் போன்ற விரயங்கள் கூடுதலாக ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகக் குழுவினரின் பொறுப்புகளும் கடமைகளும்

- நிகழ்ச்சி நிரலுக்கேற்ப போட்டிகள் நடாத்தப்படல் வேண்டும்.
- போட்டிகள் நடைபெறும் வேளைகளில் நிர்வாக உறுப்பினர்கள் சமுகமளித்திருத்தல் வேண்டும்.
- போட்டிகள் யாவும் குறிப்பிட்ட நேரத்திற்கு நடாத்தப்படல் வேண்டும்.
- சலுகை நேரம் (grace time) கடந்த பின்னரும் போட்டிக்குச் சமுகமளிக்கத் தவறும் வீரர்கள்/அணிகள் மட்டில் விசேட சலுகைகள் அளித்தலைத் தவிர்த்தல் வேண்டும்.
- தகுந்த காரணங்களின்றி போட்டிகளைப் பின் போடுவதைத் தவிர்த்துக் கொள்ளல் நன்று. போட்டிகளைப் பின் போடுவதாயின் அது பற்றி நேரகாலத்துடன் அறிவித்தல் வேண்டும்.
- சுற்றுப் போட்டிகள் சம்பந்தமான முழுப் பொறுப்பும் நிர்வாகக் குழுவின் கண்காணிப்பிலும் கட்டுப்பாட்டிலும் இருத்தல் வேண்டும்.
- போட்டிக்கு நடுவர்களாகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் போதிய விடய அறிவும் அநுபவங்களும் கொண்டவராயும் நடுநிலையான உறுதியான தெளிவான தீர்ப்பை வழங்கக் கூடியவராயும் இருத்தல் வேண்டும்.

மைதானமும் உபகரணங்களும்

- மைதானம் வடக்குத் தெற்காகவும் ஆடத்தகுந்த நிலையிலும் சுற்றிவர தடைகளேதுமற்றதாகவும் காணப்படல் வேண்டும்.
- ஆடுகளத்தின் கோடுகள் தெளிவாகவும் சரியான அளவிலும் அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
- போட்டி ஆரம்பிக்கு முன்னர் மைதானத்தை மீண்டுமொரு முறை பார்வையிடல் வேண்டும்.
- வலை, தேவையான அளவு உயரத்தில் எவ்வித தொய்வுகளுமின்றி இறுக்கமாகக் கட்டப்பட்டிருத்தல் வேண்டும். போட்டிக்கெனத் தரமான பந்துகள் பாவிக்கப்படல் வேண்டும்.
- பார்வையாளர்கள் வாகனங்களின் தரிப்பிற்கெனத் தனித்தனி இடங்கள் ஒதுக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* போட்டிக்கெனத் தேவைப்படும் உபகரணங்களின் பட்டியல் ஒன்றை ஆட்டம் தொடங்கு முன்னரே தம்முடன் வைத்திருத்தல் வேண்டும்.

* செலவு விபரங்கள். ஆட்சேபனை மனுக்கள், உபகரணங்கள், வெற்றிக் கேடயங்கள், பிரசுரங்கள், மற்றும் கடிதத் தொடர்பு கட்கென ஓர் சிறிய அலுவலகமொன்றும் அமைக்கப்படல் வேண்டும்.

* தூர இடங்களினின்று வருகை தரும் போட்டிக் குழுக்களுக்கென விசேட ஒழுங்குகள், தங்குமிட வசதிகள், உணவு, பானாதி போன்ற வசதிகளை ஒழுங்கு செய்தல்.

* சுயாதீனமாக இயங்கக்கூடிய ஓர் தீர்ப்பாளர் சபை ஒன்றை அமைத்து ஆட்சேபனைகள் மறுப்புகள் போன்றவற்றைப் பரிசீலித்தல்.

பரிசில்களும் பரிசளிப்பும்

வெற்றி வீரர்கட்கு வழங்குவதற்கென வெற்றிக் கிண்ணங்கள், கேடயங்கள், பதக்கங்கள், சான்றிதழ்கள் என்பவற்றிலொன்றையேனும் வழங்க ஏற்பாடு செய்தல் வேண்டும். விசேட திறமைகளுக்கென விசேட பரிசில்களும் வழங்கப்படுதல் மிகவும் சிறந்தது. போட்டியில் பங்குபற்றிய அனைவருக்குமே பங்கு பற்றியதற்கான சான்றிதழ்கள் வழங்கப்படுமாயின் அது வரவேற்கப்படத்தக்கதாகும்.

சிறப்பதிகாரி ஒருவரின் முன்னிலையில் பரிசளிப்பு வைபவம் நடாத்துதல் வீரர்களுக்கும் கௌரவமாக இருக்கும். சிறந்த 2 அணிகள் இறுதியாட்டத்திற்கெனத் தெரிவாகி இருப்பின் அப்போட்டியை ஓர் கண்காட்சி ஆட்டமாக நடாத்துதல் மகிழ்ச்சிக்குரியதாய் அமையும்.

போட்டி முடிவடைந்ததும் உபகரணங்கள் யாவற்றையும் ஒரு முறை சரி பார்த்து, நிர்வாகக் குழு மீண்டும் கூடி, கணக்கு வழக்குகள் குறைநிறைகளை ஆராய்ந்து, பதிவேட்டில் பதிந்து வைத்தல் வேண்டும். போட்டியில் கடமையாற்றிய மத்தியஸ்தர்கள் பங்கு பற்றிய குழுக்கள் நன்கொடை/உதவிகள் புரிந்தோர் அனைவருக்கும் ஓர் நன்றிக் கடிதம் அனுப்புவதும் சிறந்ததொரு பண்பாகும். பின்னொரு காலத்தில் இவ்வகையான போட்டியொன்றை ஒழுங்கமைத்தலின்போது இத்தகவல்கள் பெரிதும் எமக்கு உதவியாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உசாத்துணை நூல்கள்

Lady Bird Books Ltd MCMXC II	Olympics '92'
YMCA College publication Madras 15	Hand Book on Volleyball
Combinated publication	Rules of Volleyball
National Council of YMCA India Department of communication	Book of Rules of sports and games 1991
Prenlise hall Physical Education Series Don cash Seaton Irene a Clayton Howard c Leibee Loyed messersmith	Physical Education Hand Book (The complete Illustrated encyclopedia of all sports of the world) 'Rules of the game'
Scholastic Publications Ltd. (1987)	'Bright ideas' Games for physical Education
விமல் அமரசிங்க, சரத் விஜேதுங்க – சர்வதேச தீர்ப்பாளர்கள்	சர்வதேச வொலிபோல் சட்ட திட்டங்கள் (சிங்களம்) உடற்கல்வியும் விளையாட்டும் (சிங்களம்)
	ஸ்போட்ஸ் ஸ்டார், சஞ்சிகைகள் வழிகாட்டிகள் தேசிய கல்வி நிறுவனம் மகரகம) (N I E)

ஒலிம்பிக் கரப்பந்தாட்ட வெற்றி வீரர்கள்

	ஆண்	பெண்
1964	URS	JPN
1968	URS	URS
1972	JPN	URS
1976	POL	JPN
1980	URS	URS
1984	USA	CHN
1988	USA	URS
1992		

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8-11 PERADENIYA LIBRARY

My grateful thanks to :

✤ Rev. Fr. H. J. Weber	—	Jesuit Academy St. Michaels College, Batticaloa.
✤ Dr. MS. K. S. Rajaratnam	—	Director Affiliated university College, Trincomalee
✤ Mrs. V. Marimuthu	—	President Kotagala College of Education Patana.
✤ Mr S. Rajendran	—	Lecturer Kotagala College, of Education Patana.
✤ Mr. N. Raveendran	—	Lecturer Kotagala College of, Education Patana.
✤ Mr. A. Karmegam	—	Lecturer Kotagala College of Education Patana.
✤ Mr. D. R. Mariaselvam	—	Teacher(Physical Education) Araipattai M. V. Batticaloa
✤ Miss. K. Kangesan	—	Ministry of Rehubilitation Trincomalee.
✤ Mr. A. H. S. Mubarack	—	Moor Street, Trincomalee
✤ Jescom Printers	—	Jesuit Street, Batticaloa.
✤ B. Clarians	—	St. Joseph's Press, Batticaloa.
✤ R. C. Selvarajah	—	Teacher Hindu College, Trincomalee.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
469324

UNIVERSITY OF PERADENIYA
8-11-1995
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நூலாசிரியர்பற்றி...

கொட்டகலை கல்வியியற் கல்லூரி உடற்கல்வி விரிவுரையாளர் M. ஜெயரட்ணம் மன்னாரில் பிறந்தவர். மன்னார் புனித சவேரியார், யாழ். புனித ஹென்றீஸ், மட்டுநகர் புனித மிக்கேல் கல்லூரிகளில் கல்வி பயின்றவர். பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் தனது விஷேட பயிற்சியை முடித்துக்கொண்ட இவர், 23 வருடங்கள் ஆசிரியராகப் பணியாற்றி 1991 முதல் உடற்கல்வி விரிவுரையாளராகவும் கடமையாற்றுகின்றார். அண்மையில், பிலிப்பைன்ஸ் நாட்டில் நடைபெற்ற Communication Planning தொடர்பான கருத்தரங்குகளிலும் பங்குபற்றியுள்ளார். பலதரப்பட்ட விளையாட்டுக்களில் திறமையும், ஆர்வமும் ஈடுபாடும் கொண்டவர்.

விளையாட்டு விதிகள், திறன்கள் தொடர்பான தமிழ் ஆக்கங்கள் குறைவாகவுள்ள இக்காலகட்டத்திலே இத்தகைய ஓர் ஆக்கமானது எமது குறைபாட்டினை ஓரளவிற்கேனும் நிவர்த்தி செய்யுமென்பதில் ஐயமேயில்லை. நமது நாட்டின் தேசிய விளையாட்டுக்களிலொன்றான ''வொலிபோல்'' நாட்டின் பல பாகங்களிலும், சிறப்பாக மலையகத்தின் எல்லாத் தோட்டப் பகுதிகளிலுமே ஆடப்பட்டுவரும் ஓர் விளையாட்டாகும். விளையாட்டில் ஆர்வமுள்ளவர்கள், விளையாட்டு ஆசிரியர்கள், ஆசிரிய பயிற்சிக் கல்லூரி ஆசிரியர்கள் அனைவருக்கும் இது பெரிதும் உதவும்.

விளையாட்டுகள் தொடர்பான இதுபோன்ற மேலும் பல நூல்களை வெளியிட ஆசிரியரின் முயற்சி பாராட்டத்தக்கதே.

S. RAJENDRAN
(Lecturer)
College of Education
Kotagala.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Cover Printed at St. Joseph's Catholic Press, Batticaloa.